

புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | செப்டம்பர் 03, 2015 | புரட்சி 14 | முழக்கம் 34 | விலை: ரூ.3.00


## பட்டேல்கள் நடத்தும் கலவரம்: இடஓதுக்கீட்டை ஒழிக்கும் சதி!

தற்போது முன்னேறிய வகுப்பில் உள்ள பட்டேல் இன மக்கள் தங்களை பிற்படுத்தப்பட்டவர்கள் பிரிவில் இணைத்து இட ஒதுக்கீட்டு உரிமையை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தி குஜராத்தில் போராட்டம் நடத்தி வருகிறார்கள். 22 வயது இளைஞரான ஹார்த்திக் பட்டேல் தலைமையில் பல இலட்சக்கணக்கான பட்டேல் இன மக்கள் திரண்டு மாநிலத்தின் சட்டம் ஒழுங்கையே பாதிக்கும் வகையில் தீவிரமான போராட்டத்தை நடத்தி வருவது குறித்து ஊடகங்கள் நாள்தோறும் செய்திகளாக வெளியிட்டு வருகின்றன.

இந்த போராட்டம் குறித்த பல்வேறுவிதமாக கருத்துக்கள் முன் வைக்கப்படுகிறது. இந்த போராட்டத்தை, அதன் போக்கை அந்த போராட்டத்தை முன்னெடுக்கும் தலைவரின் கருத்துக்களை கூர்ந்து நோக்குகையில் இந்த பட்டேல் இன மக்களின் போராட்டத்தின் நோக்கம் என்பது, இட ஒதுக்கீட்டு உரிமையை பெறுவதை விட இடஒதுக்கீட்டு உரிமையை முழுமையாக இரத்து செய்ய வைப்பதுதான் முதன்மையாக தெரிகிறது.

போராட்டத்தை தலைமை தாங்கி நடத்தும் ஹார்த்திக் பட்டேல் தன்னுடைய பேட்டிகளில், “இட ஒதுக்கீடு எங்களுக்கும் வழங்க வேண்டும், அல்லது யாருக்கும் இட ஒதுக்கீடே வழங்க கூடாது” என்றும் “இந்த நாட்டில் இட ஒதுக்கீட்டை நீக்கிவிடுங்கள் அல்லது அனைவரையும் இட ஒதுக்கீட்டின் அடிமைகளாக அறிவியுங்கள்” (Either free the country from reservation or make everybody a slave of reservation) எனவும் கூறியுள்ளார். இன்று இட ஒதுக்கீடு கேட்டு போராடும் இதே பட்டேல் இன மக்கள்தான் 30 ஆண்டுகளுக்கு முன் மருத்துவ கல்வியில் தாழ்த்தப்பட்ட மற்றும் பழங்குடியின மக்களுக்கான இட ஒதுக்கீட்டை மிக கடுமையாக எதிர்த்தவர்கள் என்பது நினைவு கூரத்தக்கது.

பட்டேல் இன மக்களின் இதுபோன்ற கருத்துகளை முன்வைத்து விஷ்வ ஹிந்து பரிஷத் அமைப்பு, “தற்போது ஜாதி அடிப்படையில் வழங்கப்பட்டுவரும் இட ஒதுக்கீட்டை இரத்து செய்வது குறித்து பரிசீலிக்கும் நேரம் வந்துவிட்டது” என கூறியுள்ளது. போராட்ட குழு, ‘இந்தியா முழுமைக்குமான போராட்டமாக இதனை வளர்த்தெடுக்கப் போகிறோம்’ என்று அறிவித்துள்ளார்கள். இவர்களின் போராட்டத்தின் மூலம் ஏற்கனவே இதுபோன்ற கோரிக்கைகளை வலியுறுத்தி வரும் இராஜஸ்தான் குஜ்ஜார் இன மக்கள், பீகாரின் ஜாட் இன மக்கள் ஆகியோரின் கருத்துகளை மையப்படுத்தி ஒட்டு மொத்தமாக இட ஒதுக்கீட்டு உரிமையை பறிக்க இந்துத்துவா சக்திகள் திட்டமிடுகின்றனவோ என்கிற ஐயம் எழுகிறது.

இந்தியா முழுவதும் பிற்படுத்தப்பட்டோர் நிலை குறித்து ஆய்வு செய்த மண்டல் குழு, தன் பரிந்துரையில் சொல்லியுள்ள பிற்படுத்தப்டோர் பட்டியலில் பட்டேல் இனம் இல்லை என்பது முக்கியமானது.

ஆர்.எஸ்.எஸ் தலைவர் வைத்யாவும், இடஒதுக்கீட்டு எதிராக தற்பொழுது கருத்து தெரிவித்திருப்பது, இவர்கள் இட ஒதுக்கீட்டுக்கு எதிரான ஒரு நாடு தழுவிய கருத்துருவாகத்தை ஏற்படுத்த முயல்கிறார்கள் என்பது தெளிவாகிறது.

குஜராத்தின் பொருளாதாரத்தை தங்கள் கட்டுப்பாட்டில் வைத்திருப்பவர்கள் பட்டேல். மாநில முதல்வரும் மாநில பா.ஜ.க. தலைவரும் பட்டேல்கள் என்பதோடு சட்டமன்றத்தில் 40 பேர் இந்த சமுகத்தினர்.

பிற்படுத்தப்பட்டோரின் நிலையை அறிய ஏற்கனவே நியமிக்கப்பட்ட ஆணையங்களோ, ஆய்வறிக்கைகளோ ஏதும் பட்டேல் இன மக்கள் பிற்படுத்தப்பட்டவர்கள் என இதுவரை அறிவிக்காத நிலையில், பரந்த பொருளாதார வலிமையும், அரசியல் அதிகாரத்தில் மிகப்பெரிய பங்கும் வகித்துக் கொண்டிருக்கிற இந்த பட்டேல் இனமக்கள் எந்தவித ஆணையத்தின் பரிந்துரையும் இன்றி தன்னிச்சையாக தாங்களாகவே முன் வந்து தங்களை பிற்படுத்தப்பட்டவர்கள் என அறிவித்துக் கொண்டு மாநிலத்தின் சட்டம் ஒழுங்கை சீர்குலைத்து வன்முறையை ஏவிவிடும் செயல் கடும் கண்டனத்திற்குரியது.

பாரதிய ஜனதா கட்சி – தேர்தல் அறிக்கையில் இடஒதுக்கீடு கொள்கையில் புதிய அணுகுமுறையைப் பின்பற்றுவதாகக் கூறியது. இதற்கு விளக்கமளித்த மத்திய அமைச்சர் நிர்மலா சீத்தாராமன், ‘சில குறிப்பிட்ட பகுதிகளில் தத்தெடுத்து, அங்குள்ள மக்களின் வளர்ச்சிக்குப் பாடுபடுவதே இடஒதுக்கீடு’ என்று கூறினார். ஆக, இட ஒதுகீட்டிற்கு எதிரான சக்திகள் இந்த சூழலை தங்களுக்கு சாதமாக பயன்படுத்தி தங்கள் ஊடக பலத்தால் இடஒதுக்கீட்டுக்கு எதிரான கருத்தை உருவாக்க முயல்வார்கள் இந்த பின்னணியை சமூகநீதியில் அக்கறை கொண்டவர்கள் கவனமாக கருத்தில் கொள்வது தற்போதைய காலத்தின் தேவையாகும்.

### காணாமல் போன தமிழர்கள் கதி என்ன?

## மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம்



ஆக.30ஆம் தேதி ‘காணாமல் போனோர் நாள்’ என்று அய்.நா. கடைபிடித்து வருகிறது. இதையொட்டி, ஈழத்தில் காணாமல் போன தமிழர்களின் கதி என்ன? இலங்கை அரசு இது குறித்து ஏன் மவுனம் சாதிக்கிறது என்ற கேள்வியை எழுப்பி, தமிழர் வாழ்வுரிமை கட்சி, திராவிடர் விடுதலைக் கழகம், காஞ்சி மக்கள் மன்றம் உள்ளிட்ட அமைப்புகள், கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தின. அய்.நா. நிறுவனங்களில் ஒன்றான ‘யுனிசெப்’ அமைந்துள்ள அடையாறு காந்தி நகரில் 31ஆம் தேதி கால நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, வாழ்வுரிமை கட்சி நிறுவனர் வேல் முருகன், தியாகு (தமிழ் தேச விடுதலை இயக்கம்), ஆனந்தி சசிதரன் (இலங்கை வடக்கு மாகாண நாடாளுமன்ற உப்பினர்), பேராசிரியர் சரசுவதி (நாடு கடந்த தமிழீழ அரசு, தமிழக பொறுப்பாளர்), மகேசு (காஞ்சி மக்கள் மன்றம்), லோகு ஐயப்பன் (புதுவை திராவிடர் விடுதலைக் கழகம்), கழகத் தோழர் தபசி. குமரன், இரா. உமாபதி (மாவட்ட செயலாளர்) மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

முன்னதாக ‘யுனிசெப்’ அதிகாரிகளிடம் அய்.நா. நடவடிக்கைக்கோரி, மனு அளிக்கப் பட்டது. 500க்கும் மேற்பட்ட தோழர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

## பகுத்தறிவாளர் கல்புர்கிக்கு வீர வணக்கம்



சீரிய பகுத்தறிவாளரும், முற்போக்கு எழுத்தாளர், மத மூட நம்பிக்கைகளுக்கு எதிராக தொடர்ந்து செயலாற்றி வந்த பேராசிரியர், எழுத்தாளர் முன்னாள் துணை வேந்தருமான கல்புர்கி, பார்ப்பன பாசிச இந்து மதவெறி கும்பல்களால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டிருப்பதை திராவிடர் விடுதலைக் கழகம் வன்மையாக கண்டிக்கிறது.

கல்புர்கி 30.08.2015 ஞாயிறு காலை தன் வீட்டில் வைத்து அடையாளம் தெரியாத நபர்களால் சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார். அவர் மூடநம்பிக்கைக்கு எதிராக தொடர்ந்து பேசியும், எழுதியும் வந்தார். மூட நம்பிக்கைக்கு எதிராக கர்நாடக அரசு சட்டம் இயற்ற வேண்டும் என்றும் தொடர்ந்து வலியுறுத்தினார்.

தான் அடையாளப்படுத்தப்பட்ட லிங்காயத்து சமூகத்தின் பிற்போக்கு சிந்தனைகளை அவர் எதிர்த்தார். 12 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த ஒரு லிங்காயத்துத் தலை வருக்கு ‘தெய்வீக அருள்’ இருப்பதாக கூறப் பட்டதை இலக்கிய-அறிவியல் சான்றுகளுடன் மறுத்தார். ‘விநாயகன்’ ஊர்வலத்தின் மத அரசியல் அம்பலப் படுத்தினார்.

**கோழைகளின் வெறிச் செயலுக்கு கண்டனம்**

மூடநம்பிக்கைக்கு எதிராக இவர் தொடர்ந்து பரப்புரை செய்ததால் மூட நம்பிக்கையை ஆதரிக்கும் பாசிச கும்பலான பஜ்ரங் தளம், விஸ்வ ஹிந்து பரிஷத், சிறீராம் சேனா உள்ளிட்ட இந்துத்துவா அமைப்புகள் மாநிலம் முழுவதும் போராட்டத்தில் ஈடுபட்டன. தார் வாட் மாவட்டம் கல்யாண் நகரில் உள்ள கல்புர்கியின் வீட்டின் முன்பாக திரண்ட இந்துத்துவா அடிப்படைவாதிகள் கல்வீசி தாக்குதல் நடத்தி, கொலை மிரட்டல் விடுத்தனர்.

இந்நிலையில் பார்ப்பனிய பயங்கர வாதிகள் முன்னாள் மாணவர்கள் போல் நடித்து அவரது வீட்டிற்கு சென்று அவரை துப்பாக்கி யால் சுட்டு கொலை செய்துவிட்டு தப்பி யோடி விட்டனர். சங்பரிவாரங்களினால் ஆபத்து இருந்தும் கூட மாநில அரசு ஒரு எழுத்தாளரும் முன்னாள் துணை வேந்தருமான ஒரு சமூக செயற்பாட்டாளருக்கு பாதுகாப்பு கொடுக்கத் தவறியது கண்டிக்கத்தக்கது.

பார்ப்பனிய அடிப்படைவாத குழுக்களான பஜ்ரங் தளம், விஸ்வ ஹிந்து பரிஷத், சிறீராம் சேனா போன்ற அமைப்பின்

4ஆம் பக்கம்

**தலையங்கம்**

## ஈழப் பிரச்சினையில் அமெரிக்காவின் துரோகம்

சிறீலங்காவில் இரண்டு பெரும் சிங்களர்களின் கட்சிகளான அய்க்கிய தேசியக் கட்சி, சிறீலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து தேசிய அரசு என்ற பெயரில் சிங்களப் பேரினவாத ஆட்சியை அமைத்து விட்டன. தமிழர்களின் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு தமிழர் பிரதேசத்தில் 16 இடங்களில் தேர்வு பெற்று நாடாளுமன்றம் சென்றாலும் தமிழரின் முக்கியத்துவம் திட்டமிட்டுக் குறைக்கப்பட்டு விட்டது. சிங்கள அரசியல் மாற்றங்களைத் தொடர்ந்து 'போர்க் குற்றங்கள்' தொடர்பாக இலங்கைக்கு எதிரான தனது நிலைப் பாட்டை அமெரிக்கா மாற்றிக் கொண்டு விட்டது. இலங்கை அரசின் 'ஒப்புதல் கலந்தாலோசனை' யுடன் இலங்கை அரசே நடத்தும் உள் நாட்டு விசாரணையை மட்டுமே அய்.நா.வில் தீர்மானமாகக் கொண்டு வரப் போவதாக அமெரிக்காவின் தெற்காசிய நாடுகளுக்கான அதிகாரி நிஷா பிஸ்வால் கூறியிருக்கிறார். (இவர் பிறப்பால் குஜராத்தி பனியா – அமெரிக்காவில் குடியேறியவர்) நடந்து முடிந்த இலங்கை தேர்தலில் எதிரும் புதிருமான சிங்களர் கட்சிகள் கைகோர்த்து ஆட்சி அமைத்ததைத் தொடர்ந்து, அமெரிக்காவின் இந்த அறிவிப்பையும் இணைத்துப் பார்த்தால், தமிழர்கள் உரிமைக்கு எதிரான அமெரிக் காவின் 'அரசியல் விளையாட்டை'ப் புரிந்து கொள்ள முடியும்.

இலங்கையில் தமிழர் வாழும் பகுதிகளில் தமிழர்களும் சிங்களர் பகுதிகளில் சிங்களர்களும் வெற்றி பெற்றிருப்பதே – அங்கே இரு வேறு தேசிய இனங்கள் இருப்பதற்கான சான்று. தமிழர் பகுதியில் சிங்களர் குடியேற்றம் நிகழ்ந்ததற்கான சான்று – திரிகோணமலை தமிழர் பகுதியில் ஒரு சிங்களர் வெற்றி பெற்றதாகும்.

அரசு நிர்வாகமும் அரசு உறுப்பான நீதித் துறையும், சிங்களப் பேரின வெறியில் மூழ்கிக் கிடக்கும் நாட்டில் தமிழர்கள் மீதான போர்க் குற்ற விசாரணைகள் நடுநிலையோடு நடக்கும் என்று சராசரி அறிவுள்ளவர்கள்கூட ஏற்க முடியாது. 1983ஆம் ஆண்டு அங்கே தமிழர்கள்மீது ஜெயவர்த்தனா ஆட்சியில் கொடூரமான இனப் படுகொலை நடந்தபோது உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதியாக இருந்தவரே ஒரு தமிழர்தான். ஆனாலும், எந்த ஒரு சிங்களருக்கும் எதிராக, எந்த ஒரு வழக்கோ, விசாரணையோ நடந்த வரலாறு இல்லை. இந்திய உச்சநீதிமன்ற நீதிபதி பகவதி தலைமையில் இலங்கையில் சர்வதேச பிரமுகர்களைக் கொண்ட ஒரு விசாரணைக் குழு அமைக்கப்பட்டு, அதுவரை கிடப்பில் போடப்பட்ட தமிழர்களுக்கு எதிரான குற்றங்களை விசாரிக்க முயன்றது. எந்த ஒத்துழைப்பும் இலங்கையிடமிருந்து கிடைக்காத நிலையில், மனித உரிமைகள் தொடர்பான விசாரணைக்கே தகுதியற்ற நாடு இலங்கை என்று அறிவித்துவிட்டு, நிபுணர்கள் குழு வெளியேறியது. இந்த உண்மைகள் இந்தியாவுக்கு தெரிந்திருந்தும் உள்நாட்டு விசாரணைக்கு ஆதரவு தெரிவிப்பது தமிழர்களுக்கு இழைக்கும் பச்சைத் துரோகம்.

அய்.நா.வின் பொதுச் செயலாளராக இருந்த பான்கிமூன் நியமித்த மூவர் குழுவின் அறிக்கை. "சிறீலங்கா நீதித் துறையின் கடந்தகால செயல்பாடுகளைப் பரிசீலித்தால் அது நீதி வழங்கும் என்ற நம்பிக்கை இக்குழுவுக்கு சிறிதளவும் இல்லை" எனக் கூறிவிட்ட பிறகு, "இதே அய்.நா. மன்றம், உள்நாட்டு விசாரணையை இலங்கையிடம் ஒப்படைக்கலாமா என்று கேட்கிறோம். அதுமட்டுமல்ல, ஏற்கெனவே இலங்கை அரசு தனக்குத்தானே நியமித்துக் கொண்ட 'எல்.எல்.ஆர்.சி.' (கற்ற பாடங்கள்: நல்லிணக்கத்துக்கான ஆணையம்) செயல்படும் நோக்கத்தையோ, சர்வதேச தரத்தையோ கொண்டிருக்கவில்லை" என்றும், அதே குழுவின் அறிக்கை சுட்டிக்காட்டியது.

இனப்படுகொலையை நடத்தி முடித்த இராஜபக்சே இப்போது திட்டமிட்டு, ஓரம் கட்டப்பட்டிருக்கிறார். காரணம், இராஜபக்சே மீது சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள், இலங்கை அரசு மீதான குற்றச்சாட்டுகள்தான். அந்தக் குற்றத்திலிருந்து இலங்கை பேரினவாத அரசு, இப்போது தந்திரமாக தன்னைக் காப்பாற்றிக் கொண்டிருக்கிறது. மேற்குலக நாடுகளும் அமெரிக்காவும் இணைந்து இந்த சதித் திட்டத்தை அரங்கேற்றியிருக்கின்றன.

அமெரிக்கா முதன்முதலாக அய்.நா.வில் இலங்கைக்கு எதிராக தீர்மானம் கொண்டுவரப்பட்டபோதே அமெரிக்காவை ஏன் எதிர்க்கவில்லை என்றுகூட கேள்வி எழுப்பலாம். இது முதிர்ச்சியற்ற கேள்வி என்பதே நமது கருத்து. சர்வதேசத்தின் ஒவ்வொரு செயல் பாட்டுக்கும் உள்நோக்கம் இருக்கவே செய்கின்றன. செயல்பாடுகளை மட்டுமே கவனத்தில் கொள்ள வேண்டுமே தவிர உள்நோக்கத்தையும் இணைத்துப் பரிசீலிப்பது, சர்வதேச அரசியல் நகர்வில் சரியான அணுகுமுறையாக இருக்க முடியாது. இலங்கையை எதிர்த்தபோது ஆதரிப்பதும், துரோகம் செய்யும்போது எதிர்ப்பதுமே சரியான அணுகுமுறையாக இருக்க முடியும். நார்வேயின் சமரசத்தை ஏற்று, விடுதலைப் புலிகள் இயக்கம் போர்நிறுத்தம் செய்தது. அதே நார்வே இப்போது தமிழர்களுக்க துரோகமிழைத்துக் கொண்டிருக் கிறது. இந்த சர்வதேச சூழ்ச்சி வலைகளுக்குள்ளேதான் ஒரு நாட்டின் 'இறையாண்மையும்' புதைந்து கிடக்கிறது. அதை மீட்டெடுக்க சூழலுக்கேற்ற அணுகுமுறைகள் அவசியமாகின்றன.

ஈழத் தமிழர் விடுதலைப் பாதையில் இது ஒரு சோதனையான காலகட்டம். போர்க் குற்றங்களுக்கு எதிரான டப்ளின் தீர்ப்பாயம் தந்த அறிக்கை – அய்.நா. மூவர் குழு அறிக்கை உள்ளிட்ட ஆவணங்களும், மனித உரிமை இயக்க அறிக்கைகளும். இப்போதும் தமிழர் விடுதலையில் உறுதியாக நிற்கும் வடக்கு மாகாண முதல்வர் நீதிபதி விக்னேசுவரன், மாகாண சட்டமன்றத்தில் கொண்டு வந்து நிறைவேற்றிய "சர்வதேச விசாரணை" வேண்டும் என்ற தீர்மானமும், தமிழக மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட அ.இ.அ.தி.மு.க. ஆட்சியின் முதல்வர் தமிழக சட்டப் பேரவையில் நிறைவேற்றிய பொது வாக்கெடுப்பு நடத்தக் கோரும் தீர்மானமும் தமிழர்களின் வலிமையான படைக்கலன்கள். இந்தப் படைக்கலன்களைப் பயன்படுத்தி, சர்வதேச விசாரணை வேண்டும் என்ற கோரிக்கையை வலிமையாக உலகத் தமிழர்களோடு இணைந்து முன்னெடுக்க வேண்டும்!

# மாவட்டப் பொறுப்பாளர்கள்

*மாவட்டக் கலந்துரையாடல் கூட்டங் களில் கழகத் தலைவர் அறிவித்த மாவட்டப் கழகப் பொறுப்பாளர்கள்.*

**தருமபுரி மாவட்டம் :** தலைவர் - வெ. வேணு கோபால்; செயலாளர் - ம. பரம சிவம்; அமைப்பாளர் - அ.சந்தோஷ் குமார்.

**தருமபுரி நகரம் :** தலைவர் - கு. நாகராஜ்; செயலாளர் - அ. சுதந்திர குமார்.

**அமைப்பாளர் :** பெண்ணாகரம் ஒன்றியம் - எம்.பலராமன்; காரிமங்கலம் ஒன்றியம் - கோ. செந்தில்குமார்; நல்லம் பள்ளி ஒன்றியம் - எம். இராமதாசு.

**அறிவியல் மன்றம் :** எஸ். வையாபுரி, சி. பிரியா.

**கிருட்டிணகிரி மாவட்டம் :** தலைவர் - தி. குமார், காவேரிப்பட்டினம்; செயலாளர்-கா. குமார், அலேசீபம்; அமைப்பாளர்-சிவ. மனோகரன்-காவேரிப் பட்டினம்; இராஜேஷ் - கிருட்டிணகிரி.

**மாவட்ட துணைத் தலைவர் :** கிருஷ்ணன், நீலகிரி.

**மாவட்ட துணைச் செயலாளர் :** ப. வாஞ்சி நாதன்.

**தமிழ்நாடு அறிவியல் மன்றம் :** மூங்கப்பட்டி ஆசிரியர் சக்திவேல்.

**காவேரிப்பட்டினம் ஒன்றியம் :** பழனி பிரபு

**கெலமங்கலம் ஒன்றியம் :** சங்கர்

**குளகிரி ஒன்றியம்:** அனுமந்தப்பா, அலேசீபம்.

**வேலூர் மாவட்ட அமைப்பாளர்கள் :** நெமிலி ப. திலீபன்; குடியாத்தம் இரா.சிவா.

**காஞ்சி மாவட்டம் :** தலைவர் - சு. செங்குட்டுவன்; செயலாளர் - மு. தினேசு குமார்; அமைப் பாளர் - செ.கு.தெள்ளமிழ்து.

**செங்கல்பட்டு நகர அமைப்பாளர் :** வே. சரவணன்.

**தென் சென்னை மாவட்டம்:** தலைவர் - மா. வேழவேந்தன்; செயலாளர் - இரா. உமாபதி; அமைப்பாளர் - சு. பிரகாசு; பொருளாளர் - ஜான் மண்டேலா; துணைச் செயலாளர் - சுகுமார்.

**வடசென்னை மாவட்டம் :** தலைவர் - யேசு குமார்; செயலாளர் - தட்சணாமூர்த்தி; அமைப்பாளர் - முனுசாமி; பொருளாளர் - அருள்தாசு.

**மாவட்ட இளைஞரணி :** தலைவர் - தமிழ்ச் செல்வன்; செயலாளர் - நாத்திகன்; அமைப்பாளர் - செந்தில்.

**தமிழ்நாடு மாணவர் கழகம் :** தலைவர் - ஜெயபிரகாசு; செயலாளர் - அசுரன்;

**திருவல்லிக்கேணி பகுதி :** தலைவர் - தமிழரசு; செயலாளர் - அருண்குமார்; அமைப்பாளர்- சித்தார்த்தன்.

**பகுதி இளைஞரணி :** தலைவர் - குமரேசன்; செயலாளர் - கார்த்திக்; அமைப்பாளர் - இலட்சு மணன்.

**மயிலை பகுதி :** தலைவர் - இராவணன்; செயலாளர்-மாரி; அமைப்பாளர்-மனோகர்.

**இளைஞரணி :** தலைவர் - பார்தா; செயலாளர்-பரணி; அமைப்பாளர் - பிரவீன்.

**சைதை பகுதி :** அமைப்பாளர் - சிவா.

**வியாசர்பாடி பகுதி :** அமைப்பாளர் - வினோத்.

**மாவட்ட அறிவியல் மன்றம் :** அமைப் பாளர் - துரை

**சூளை பகுதி :** அமைப்பாளர் - விஜயன்.

### பேராசிரியர் ஜெரோம் சாம்ராஜ் ஆய்வுரை

# நில உரிமைகளை பறித்தது ஜாதியமே

நிலவுடைமைக்கு எதிரான போராட்டத்தின் வழியாகவே ஜாதியமைப்பை தகர்க்க முடியும் என்று மார்க்சிய லெனினிய தத்துவத்தை ஏற்றுக் கொண்ட சில இடதுசாரி அமைப்புகள் கூறி வருகின்றன. ஆனால், தமிழ் நாட்டைப் பொறுத்தவரை நில உரிமையை ஜாதியமைப்பே கட்டமைத்திருக்கிறது என்று புதுவை மத்திய பல்கலை பொருளியல் பேராசிரியர் ஜெரோம் சாம்ராஜ் கூறினார். தமிழகத்தில் ஜாதிக்கும் நிலவுரிமைக்கும் உள்ள தொடர்பு குறித்து ஆய்வு நடத்தியவர் ஜெரோம்.




சென்னை திருவான்மியூரில் பனுவல் நூலக அரங்கில் 'புதிய தமிழ் ஆய்வுகள்' என்ற அமைப்பின் நிகழ்வில் ஆகஸ்டு 21ஆம் தேதி மாலை அவர் இது குறித்து விரிவான ஆய்வுரையை முன் வைத்தார். ஒருவரிடம் நிலம் இல்லை என்பதற்கான காரணமாக அவரது வறுமை சொல்லப்படுகிறது. அது உண்மையானால், பார்ப்பனர், வேளாளர் ஜாதி சமூகம் மட்டுமே நிலவுடைமை யாளர்களாக எப்படி மாற முடிந்தது? உண்மையில் வறுமை காரணமாக நில உரிமை கிடைக்காமல் போக வில்லை. நிலஉரிமை மறுக்கப்பட்டதால்தான் பார்ப்பன-வெள்ளாளர் அல்லாத மக்கள் குறிப்பாக தலித் மக்கள் வறுமையில் தள்ளப்பட்டார்கள் என்று கூறிய ஜெரோம், ஏராளமான வரலாற்று ஆய்வுகளை முன் வைத்து தனது கருத்தை நிறுவினர். 1965இல் தர்மகுமார் என்பவர் நிலத்துக்கும் ஜாதிக்கும் உள்ள தொடர்பை ஆய்வு செய்தார். நிலவுடைமை என்ற தத்துவத்தை மார்க்சிய-லெனினியப் பார்வையில் பார்க்காமல், தமிழ் நாட்டின் சமூக வரலாற்றுப் பின்புலத்தி லிருந்துதான் ஆராய வேண்டும் என்ற கருத்தை முன் வைத்து, விரிவான ஆய்வு கட்டுரையை மிகிர்ஷா - 1987இல் 'எக்னாமிக்கல் அண்ட் பொலிட்டிக்கல் வீக்லி'யில் எழுதினார்.

நெல்லை மாவட்ட நிலவுடைமை யாளர் குறித்து டேவிட் லிட்டன் நடத்திய ஆய்வு - புதிய வெளிச் சங்களைத் தந்தது. மாக்சியம் கூறும் உற்பத்தி உறவுமுறைகள் குறித்த பார்வையிலிருந்து மாற்றம் வேண்டும் என்று கூறிய ஜெரோம், தமிழ்நாட்டில் ஜாதிய சமூக உறவுகளை நிர்ணயித்த 'கலாச்சாரப் பொருளாதாரம்' பரிசீலிக்கப் பட வேண்டும் என்றார். நில உரிமைக்கும், இங்கே கோயில் களுக்கும் நெருக்கமான உறவுகள் இருந்தன. சங்க காலத்தில் முளைவிடத் தொடங்கிவிட்ட ஜாதி, சோழர் காலத்தில் மிகவும் 'இறுக்கமான' கட்டமைப்பாக மாறிப் போனது. தமிழ் நாட்டில், தங்களுக்கு நிலம் வேண்டும் என்ற கோரிக்கையை முன்னிறுத்தி நிலவுரிமைப் போராட்டங்கள் நடத்தப்பட்டதாக வரலாற்றுக் குறிப்புகள் இல்லை. ஏன் அத்தகைய போராட்டங்கள் நடக்கவில்லை? பார்ப்பன - வேளாளர் ஜாதி ஆதிக்கத்தின் கீழ் உழன்று கொண்டிருந்த மக்கள், ஜாதியமைப்பு தங்களுக்கு விதித்த கடமைகளை மட்டுமே செய்யும் கட்டாய நிலைக்கு தள்ளப்பட்டிருந்தனர்.

தமிழ்நாட்டில் கிராமிய சமூகத்தின் கட்டமைப்பு ஜாதியத்தால் இறுக்க மாக்கப்பட்டது. இன்னும் அந்த நிலை பெருமளவில் மாறவில்லை. உயர்ஜாதிக் காரர்கள் என்றும் தூய்மைக்குரியவர்கள் என்றும் கருதப்பட்ட பார்ப்பன - வேளாளரி லிருந்து கிராமங்களில் 'மிராசுதார்கள்' என்பவர்கள் வந்தனர். அதிகாரம் நிறைந்த அவர்களே கோயில்களின் அதிகாரத்தையும் தங்களிடம் வைத்திருந்தனர். வழிபாட்டுக்குரிய உரிமைகளை நிர்ணயித்த அவர்கள், கோயில் பணிகளில் உடல் உழைப்பு, இழி தொழில்களை செய்வதில் ஒவ்வொரு ஜாதிக்கும் கடமைகளைத் திணித்தார்கள். இதற்கெல்லாம் அடிப்படையான சமூக விதிகளை உருவாக்கித்தந்தது. மனுசாஸ்திரம். சூத்திரர்கள் சொத்து வைத்துக் கொள்ளும் உரிமையை மனுசாஸ்திரம் மறுத்தது. பார்ப்பன, சத்திரியர் உள்ளிட்ட மேல் வர்ணத்தார், தனக்குக் கீழான மக்கள் மீது வன்முறைகளை நடத்தும் உரிமையை அது வழங்கியது. எதிர்த்துப் போரிடும் உரிமையற்றவர்களாக 'சூத்திரர்', 'பஞ்சமர்' ஆக்கப்பட்டனர்.

திப்புசுல்தான் ஆட்சியின்போதுதான் பார்ப்பன வெள்ளாள ஆதிக்க ஜாதி, நெருக்கடியை சந்தித்தது, அவர்கள் நிலங்களை அப்படியே விட்டுவிட்டு இடம் பெயரத் தொடங்கினார்கள். அந்த நிலங்களைத் தான் இடைநிலை ஜாதியினர் கைப்பற்றினர்.

( 4ஆம் பக்கம்)

# மாவட்டக் கலந்துரையாடல்களின் எழுச்சி

*கழகப் பொறுப்பாளர்கள் பங்கேற்ற மாவட்டக் கலந்துரையாடல் கூட்டங்கள் பற்றிய ஒரு செய்தித் தொகுப்பு.*

### தர்மபுரி



திராவிடர் விடுதலைக் கழக மாவட்டக் கலந்துரையாடல்களின் இறுதிச் சுற்றுப் பயணம், தர்மபுரி மாவட்டத்திலிருந்து தொடங்கியது. பி. அக்ரகாரம் சமுதாயக் கூடத்தில் பகல் 11 மணியளவில் நடந்த கூட்டத்தில் கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி, 'கடவுள் ஆத்மா மறுப்பு' கூறி அறிமுக உரையாற்றினார். கழகத் தோழர்கள் வெ.வேணுகோபால், எம். அசோக்குமார், ம. பரமசிவம், பேராசிரியர் எஸ். சீனிவாசன், கு. நாகராஜன், ஆசிரியர் எஸ். வையாபுரி, சந்தோஷ்குமார், செந்தில்குமார், எம். இராமதாஸ், சுதந்திரகுமார், நதியா தேவி, மு.ஜோதி, நடராஜன், நதிவர்மா ஆகியோர் கருத்துகளைத் தெரிவித்தனர். தெருமுனைக் கூட்டங்களை நடத்த வேண்டும்; கல்லூரி, பள்ளிகள் முன் மாணவர்களிடையே கொள்கை விளக்க துண்டறிக்கைகளை வழங்க வேண்டும் என்ற கருத்துகளை முன் வைத்த தோழர்கள், பா.ம.க. வளர்த்து விடும் ஜாதி வெறி ஆபத்துகளையும் சுட்டிக் காட்டினர். கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி உரையைத் தொடர்ந்து கழகத் தலைவர் நிறைவுரையாற்றி, பொறுப்பாளர்களை அறிவித்தார்.

### கிருட்டிணகிரி



மாலை 4 மணியளவில் கிருட்டிணகிரி மாவட்ட கலந்துரையாடல், இலண்டன் பேட்டை வெற்றிவேல் மகாலில் நடந்தது., க.குமார், கடவுள் ஆத்மா மறுப்பு கூறினார். அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி அறிமுக உரையைத் தொடர்ந்து, தோழர்கள் குமார், நீலகிரி குமார், வாஞ்சிநாதன், காவேரிபட்டினம் பழனி பிரபு, காரிமங்கலம் வெங்கடேசன், சுந்தர் பிரேம் குமார், இராஜேஷ், மூங்கம்பட்டி ஆசிரியர் சக்திவேல் கருத்துகளைத் தெரிவித்தனர். பயிற்சி வகுப்புகள், தெருமுனைக் கூட்டங்களை நடத்த வேண்டும். மாணவர்களிடையே பெரியார் கருத்துகளைப் பரப்புவதற்கான திட்டங்களை உருவாக்க வேண்டும் என்ற கருத்துகளைத் தோழர்கள் முன் வைத்தனர்.

### குடியாத்தம்



வேலூர் மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் குடியாத்தம் எஸ்.வி.ஆர். தங்கும் விடுதியில் நடந்தது. நெமிலி ப. திலீபன், கடவுள் ஆத்மா மறுப்பு கூறி தொடக்க உரையாற்றினார். அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி தொடக்க உரையாற்றினார். நெமிலி திலீபன், 'புரட்சிப் பெரியார் முழக்கம்' சந்தாக்களை 100 ஆக உயர்த்துவதாகவும், பரப்புரைப் பயணத்தை 3 நாள்கள் தங்கள் பகுதியில் நடத்துவதாகவும் தெரிவித்தார். குடியாத்தம் இரா. சிவா பேசுகையில், புத்தர், புலே, பெரியார், அம்பேத்கர் பார்ப்பனக் கொடுங்கோன்மையை எதிர்த்து மக்களை அணி திரட்டியதை நினைவுகூர்ந்தார். நெமிலி நரேஷ்குமார் கவுரவக்கொலைகள் தமிழகத்தில் நடப்பது, தமிழகத்துக்குத் தலைகுனிவு என்றார். கவுரவக் கொலைகளைக் கண்டித்து கூட்டம் நடத்துவதற்குக்கூட காவல்துறை அனுமதி மறுப்பதை சுட்டிக் காட்டினார். குடியாத்தம் பாண்டியன், நெமிலி முனியாண்டி, கார்த்தி, ஜெயக்குமார், கஜேந்திரன், திருமலை, விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த துரை. ஜெய்சங்கர், கழகப் பொருளாளர் திருப்பூர் துரைசாமி ஆகியோர் பேசியதைத் தொடர்ந்து கழகத் தலைவர் நிறைவுரையாற்றி, கழகப் பொறுப்பாளர்களை அறிவித்தார். நெமிலி நரேஷ் குமார் நன்றி கூறினார்.

### வண்டலூர்



காஞ்சி மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம் வண்டலூர் 'தலைநகர் தமிழ்ச் சங்க அரங்கத்தில்' 30.8.2015 ஞாயிறு பிற்பகல் 5 மணியளவில் நடந்தது. சு. செங்குட்டுவன், கடவுள்-ஆத்மா மறுப்பு கூறினார். செ.க. தெள்ளமிழ்து வரவேற்புரையாற்ற, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தொடக்க உரையாற்றினார். மேடவாக்கம் இரவிக் குமார், கூடுவாஞ்சேரி பன்னீர்செல்வம், குகன், செங்கல்பட்டு சரவணன், சு. செங்குட்டுவன், தினேசுகுமார் ஆகியோர் கருத்துகளைத் தெரிவித்தனர்.

"பகவத் கீதையில் 'பெண்களை' இழிவுபடுத்தும் சுலோகங்களையும், 'வர்ணாஸ்ரமத்தை' நியாயப்படுத்தும் சுலோகங்களையும் தீயிட்டு எரிக்கும் போராட்டத்தை நடத்த வேண்டும்" என்றும், "ராமலீலாவுக்கு எதிர்ப்பாக 'ராமன்' உருவத்தை எரிக்கும் 'இராவணலீலா' நடத்த வேண்டும்" என்றும் தோழர்கள் கருத்து தெரிவித்தனர். 3 நாள்கள் காஞ்சி மாவட்டத்தில் பரப்புரைப் பயணம் நடத்துவதாக தினேசுகுமார் தெரிவித்தார். கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையில், "தோழர்கள் கூறிய போராட்டங்களை திடீர் என நடத்துவதில் பயனில்லை. இது குறித்து மனுசாஸ்திர எரிப்புப் போராட்டத்தில் நடத்தியதுபோல் மக்களிடையே தொடர்ந்து பரப்புரை இயக்கங்களை நடத்தி, இறுதிக்கட்டமாக போராட்டம் நடத்த வேண்டும்" என்று விளக்கமளித்து, கழகப் பொறுப்பாளர்களை அறிவித்தார். புதிய தோழர்கள் கழகத்தில் இணைந்தனர்.

### சென்னை



சென்னை மாவட்டக் கலந்துரையாடல் கூட்டம், ஆகஸ்டு 31ஆம் தேதி திங்கள் கிழமை மாலை 6 மணியளவில் இராயப்பேட்டை 'முருகேச நாயக்கர்' மண்டபத்தில் நடந்தது. குகானந்தன், கடவுள்-ஆத்மாமறுப்புகளைக் கூறினார். உமாபதி வரவேற்புரையாற்றினார். நிகழ்ச்சியின் தொடக்கத்தில் இந்துத்துவ வெறியர்களால் சுட்டுக் கொல்லப்பட்ட கருநாடக பல்கலைக் கழக முன்னாள் துணைவேந்தரும், மூடநம்பிக்கை எதிர்ப்பாளருமான கல்புர்கி படத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி திறந்து வைத்தார். இரண்டு நிமிடம் மவுனம் காத்து, தோழர்கள் வீர வணக்கம் செலுத்தினர்.

கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் அறிமுக உரையைத் தொடர்ந்து, கழக வழக்கறிஞர் துரை. அருண், தலைமைக் கழக செயலாளர் தபசி. குமரன், வேழவேந்தன், சுகுமார், ஏசு, மாணவர் கழகத் தோழர் அருண், அன்பு. தனசேகரன் ஆகியோர் கருத்துகளைத் தெரிவித்தனர். நிறைவாக, கழகத் தலைவர் கொளத்தூர் மணி நிறைவுரையாற்றி, கழகப் பொறுப்பாளர்களை அறிவித்தார்.



நிகழ்வில் முடிவெய்திய கழக செயல்வீரர் ஆட்டோ சரவணன் குடும்பத்துக்கு அவரது தாயாரிடம் கழக சார்பில் தோழர்களிடமிருந்து திரட்டப்பட்ட நிதி ரூ62 ஆயிரத்தை கழகத் தலைவர் கொளத்தூர் மணி வழங்கினார்.

DATE OF PUBLICATION 03.09.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# எனக்கு ‘வீர சொர்க்கத்தில்’ நம்பிக்கையில்லை

*பெரியார் சமதர்மக் கொள்கைகளை கைவிட்டார் என்று சுயமரியாதை இயக்கத்திலிருந்த பொதுவுடைமையாளர்கள், ஜீவா என்றழைக்கப்பட்ட ஜீவானந்தம், சிங்காரவேலர் போன்றோர் பெரியார் மீது கடும் விமர்சனங்களை வைத்தனர். 1936ஆம் ஆண்டு தஞ்சை மாவட்ட 5ஆவது சுயமரியாதை மாநாடு திருத்துறைப்பூண்டியில் நடந்தது. மாநாட்டில் ஜீவா, பெரியாரை மேடையில் வைத்துக் கொண்டு பெரியாரை விமர்சித்ததற்கு பதிலளித்து பெரியார் நிகழ்த்திய உரை இது.*

தோழர்களே!

சுயமரியாதை இயக்கம் மிக நெருக்கடியில் இருப்பதாகவும், சீக்கிரத்தில் செத்துப் போகும் என்றும் இங்கு சொல்லப்பட்டது.

இயக்கம் ஒன்றும் நெருக்கடியில் இல்லை என்பது என் அபிப்பிராயம். சிலருக்கு, அவர்களின் சொந்த விருப்பு வெறுப்பை உத்தேசித்து அப்படித் தோன்றலாம். அதற்கு, நான் காது கொடுக்க முடியாது. இந்த இயக்கம் ஆரம்பித்த காலம் முதற்கொண்டு அனேகர் தங்கள் சுயநலத்துக்கு, சௌகரியமில்லாது கண்டு இது போலவேதான் இயக்கம் நெருக்கடியில் இருக்கிறது, செத்துப்போய் விட்டது என்று சொல்லிக்கொண்டே போய்விட்டவர்களும், வெளியில் போய்விட்ட பின்பும் அவர்களால் கூடுமானவரை தொல்லைக் கொடுத்துக் கொண்டு இருந்தவர்களும் இருக்கிறவர்களும் திரும்பி வந்தவர்களும் பலர் உண்டு. அப்படிப்பட்டவர்களையும் அவர்களது விஷமங்களையும் பற்றி நான் சிறிதும் லட்சியம் செய்வதில்லை. அந்தப்படி நான் அலட்சியமாய் இருந்துவிட்டதால் இதுவரை இயக்கத்துக்கோ, எனக்கோ யாதொரு கெடுதியும் ஏற்பட்டுவிடவில்லை. இயக்கம் போய்விட்டது என்று இன்னமும் சொல்லிக் கொண்டுதான் திரிகிறார்கள்.

இயக்கம் எங்கு, போய்விட்டது. அவர்களை விட்டுவிட்டுப்போய் விட்டது. அவ்வளவுதான்.

இப்போது சொல்லுகிறேன் இயக்கத்தின் மூலம் சுயநலம் அனுபவிக்கக் கருதியிருக்கும் எப்படிப்பட்டவர்களுக்கும் இயக்கத்தில் இடம் கிடைக்காது. அவர்கள் யாரானாலும் சரி, இயக்க வளர்ச்சியைவிட இயக்கத்தில் சுயநலம் கருதுபவர்களை கவனிப்பதே என் வேலை. அதனால் ஏற்படும் எதிர்ப்புகளை சமாளிக்கத் தயாராய் இருந்து கொண்டுதான் இப்படிச் சொல்லுகிறேன்.

**எந்த இயக்கமும் அதிதீவிர கொள்கையில்லாததால் கெட்டுவிடாது. இயக்கத்தை தனிப்பட்ட மக்கள் சுயநலத்துக்குப் பயன்படுத்திக் கொள்வதாலேயே கெட்டுப் போகும்.**

**பெரியார்**



இதுவரை அநேக இயக்கம் அதனாலேயே மறைந்து போய் இருக்கிறது. மற்றபடி யாருடைய எதிர்ப்பும், யாருடைய தொல்லையும் இருந்தாலும் இயக்கம் அதன் வேலையைச் செய்துதான் தீரும். இயக்கம் நெருக்கடியில் இருப்பதாய் இங்கு, வருத்தப்பட்டவர்கள் எப்படி நெருக்கடியில் இருக்கிறது, இதனால் என்ன கெட்டுப் போய் விட்டது என்று எடுத்துக் காட்டியிருந்தால் எனக்கு, அவர்கள் வார்த்தையில் உள்ள உண்மை புலப்பட்டு இருக்கும்.

தோழர்கள் தண்டபாணி, கண்ணப்பர், அய்யாமுத்து, ராமநாதன், தாவுத்ஷா முதலான பலர் சுயமரியாதை இயக்கம் செத்துப் போய்விட்டது என்று சொல்லிக் கொண்டுதான் சிலர் வெளியேறியும், சிலர் தாங்கள் இன்னமும் சுயமரியாதைக் காரர்கள் என்றும் சொல்லிக் கொண்டு தொல்லை கொடுத்து வந்தார்கள், சிலர் வருகிறார்கள். இதனால் எந்தக் கொள்கை கெட்டுவிட்டது? என்ன நடவடிக்கை நின்று விட்டது?

இந்த மகாநாடு கூட்டியது பைத்தியக் காரத்தனம் என்று மகாநாடு கூட்டிய பிரமுகர்களுக்குத் தோன்றும்படி இன்று காலை முதல் இங்கு, நடவடிக்கை நடக்கிறது. இது எனக்கு, முன்னமேயே தெரியும். அதனாலேயே நான் இதற்கு, வர வேண்டாம் என்று கருதி கடிதம்கூட எழுதி விட்டேன். வந்தே தீர வேண்டுமென்று தந்தியும் கடிதங்களும் வந்தன. வந்த பிறகு, ஏன் வந்தேன் என்றுதான் தோன்றுகின்றது. எங்கள் பெயர்களை விளம்பரம் செய்து ஆட்களைக் கூட்டி இம்மாதிரி இயக்கம் செத்துவிட்டது என்று மாய அழுகை அழுவதே மகாநாட்டின் வேலை என்றால் இனி மகாநாடுகள் கூட்டாமல் இருப்பது கூட நலமென்றே கருதுகிறேன்.

இந்த லட்சணத்தில் மாகாண மகாநாடு ஏன் கூட்டவில்லை என்று என்மீது குறை கூறப்பட்டது. மகாநாடு இந்த லட்சணத்தில் இப்படிப்பட்ட ஆட்களை வைத்துக் கொண்டு எப்படி கூட்டமுடியும்? கூட்டுவதால் பிரயோஜனம்தான் என்ன? கூட்டாததால் என்ன கெட்டுவிடும்?

இதற்குமுன் கூட்டின 3 மகாநாடுகளும் பணக்காரர்களாலும் ஜஸ்டிஸ் கட்சிப் பிரமுகர்களாலும் தான் கூட்டப்பட்டது? இந்த மகாநாடும் ஒரு பணக்காரரின் பெரிய பொருளுதவியின் மீதும் ஜஸ்டிஸ் கட்சி பிரமுகர்களின் ஆதரவின் மீதும்தான் கூட்டப்பட்டது என்று காரியதரிசி சொன்னார். அப்படியிருக்க பணக்காரர்கள் தயவில் மகாநாடுகளைக் கூட்டி அவர்கள் நிழலில் இருந்துகொண்டு அவர்கள் சாப்பாட்டைச் சாப்பிட்டுக் கொண்டு அவர்களையே -அக்கட்சியையே வைது கொண்டிருப்பதனால் மகாநாடு எப்படிக் கூட்ட முடியும்?

நாகையில் மாகாண மகாநாட்டைக் கூட்ட தோழர் தயாரோகணம் பிள்ளை அவர்கள் ஏற்றுக்கொண்டார். வேண்டிய ஏற்பாடும் செய்தார், முன் பணமும் கொடுத்தார். அப்படியிருக்க சில தோழர்கள் மகாநாட்டு நிர்வாகத்தில் சம்பந்தப் பட்டவர்களே அவரைக் கேட்காமல் மகாநாட்டுப் பந்தலில் சமதர்ம மகாநாடு கூடும் என்று பத்திரிகையில் விளம்பரம் செய்துவிட்டார்கள். பிறகு, பலர் அவரைக் கேட்க ஆரம்பித்த உடன் அவர் அம் முயற்சியை விட்டு விட்டதாகத் தெரிகிறது.

மற்றும் நாளையும் மகாநாடு கூட்ட வேண்டுமானால் ஜஸ்டிஸ் கட்சியார் உதவியும் சில பணக்காரர்கள் உதவியும் வேண்டித்தான் இருக்கும். அப்படி இருக்க அவர்களை வைவதின் மூலம் வீரராக இருப்பேன். இருக்கிறவர்களின் வசவுக்குக் கட்டுப்பட்டு யார் தான் மகாநாடு கூட்டுவார்கள்? என்பதை யோசித்துப் பாருங்கள். என்மீது குற்றம் சொல்லுவது யாருக்கும் எளிதுதான். ஆனால் இயக்கத்தில் வேறு எந்தத் தோழர் செய்கின்ற காரியத்தைவிட என் காரியம் என்ன குறைந்து போய் விட்டது என்று யோசித்துப் பாருங்கள்.

இயக்கம் என்றால் எவனோ ரயில் சார்ஜ் கொடுத்து, எவனோ விளம்பரம் செய்து, எவனோ கூட்டம் கூட்டி விட்டால் அதில் வந்து நின்று கொண்டு எல்லோரையும் பயங்காளி என்றும் கோழை என்றும், மந்திரிகள் மாய்கையில் மறைந்துவிட்டவன் என்றும், சர்வாதிகாரி என்றும் ஒருவர் மற்றொருவரை வைதுவிட்டுப் போய் விடுவது அல்ல என்பதை நீங்கள் உணர வேண்டும். என்ன குறைந்தாலும் மாதம் 200, 300 ரூபாய் இயக்கத்துக்காகச் சொந்தப் பொறுப்பில் செலவு செய்து வருகிறேன். பல தடவை 1000, 2000-மாக மொத்த செலவு செய்து வருகிறேன். மாதம் 10 பிரசாரங்களுக்கும் குறையாமல் பெரிதும் என் சொந்தச் செலவிலேயே பல தோழர்களை வைத்துக் கொண்டு ஊர் ஊராய் கிராமம் கிராமமாகத் திரிந்து நோயுடனும், காயலாவுடனும், டாக்டர்கள் அபிப்பிராயங்களை லட்சியம் செய்யாமலும் பிரசாரம் செய்கிறேன். இதற்கு மேல் மற்றவர்கள் சாதிப்பதோ மற்றவர்களுக்கு உள்ள பொறுப்போ இன்னது என்று எனக்கு விளங்கவில்லை.

இந்த இயக்கம் எந்த தனிப்பட்ட மனிதனும் வீரனாவதற்கும், வீரசொர்க்கம் போய்ச் சேரவும் ஏற்பட்டதல்ல. எனக்கு வீரசொர்க்கத்தில் நம்பிக்கை கிடையாது. வீரனாவதிலும் பயன் உண்டு என்று நம்பிக்கை கிடையாது. காந்திக்கு மேல் ஒருவன் வீரனாகவோ, மகாத்மாவாகவோ விளம்பரம் பெற முடியாது. ஆனால் அவரால் மனித சமூகத்துக்கு ஒரு காதொடிந்த ஊசி அளவு பயனும் ஏற்படவில்லை. ஏற்படப்போவதுமில்லை. வேண்டுமானால் அவருக்கும் அவர் சந்ததிக்கும் பெரிய மதிப்பு ஏற்பட்டு விடும். கோவிலும் ஏற்படும். ஆனால் நான் அப்படிப்பட்ட புகழை விரும்பவில்லை. எனக்குப் புகழ் வேண்டியதுமில்லை. புகழ் பெறுவதற்கு எவ்வளவு அயோக்கியத்தனம் செய்ய வேண்டுமென்பது நான் நன்றாய் அறிவேன். அத்துறையிலும் நான் இருந்து பார்த்துவிட்டுத்தான் இந்த இழிவு பெறும் வேலைக்கு மனப்பூர்த்தியாகவே வந்தேன். ஆதலால் நான் புகழ் பெறும் மார்க்கமோ, வீரப் பட்டம் பெறும் மார்க்கமோ அறியாதவனல்ல.

**‘குடிஅரசு’, 29.3.1936**

---

(2ஆம் பக்கத் தொடர்ச்சி)

பிரிட்டிஷ் காலனி ஆட்சி ஒரு’ நிர்வாக அமைப்பு முறையைக் கொண்டு வர முயற்சித்தது. ஏற்கெனவே கிராமங்களில் இறுக்கமாகியிருந்த ஜாதிய கட்டமைப்பு நிர்வாகத்துடன் பிரிட்டிஷ் நிர்வாகத்தைப் பொறுத்தும்போது ஏற்கெனவே திப்புசுல்தான் ஆட்சியில் ஓரளவு நிலைகுலைந்து நின்ற கிராமிய ஜாதியமைப்பை மீண்டும் உறுதியாக்கும் நடவடிக்கைகளையே பிரிட்டிஷ் ஆட்சி மேற்கொண்டது.

பார்ப்பன வேளாளர்களுக்கு நில உரிமைகளை மீண்டும் வழங்கி, அவர்களை மறு குடியமர்த்துவதற்கு வருவாய்த் துறைகள் உருவாக்கப்பட்டன. பிரிட்டிஷ் ஆட்சியில் ‘துபாஷ்’ என்ற மொழி பெயர்ப்பாளர்கள் பதவிகளில் பார்ப்பனர்களே இருந்தனர். பிரிட்டிஷ் ஆட்சியில் அதிகாரம் செலுத்தியவர்கள் பார்ப்பன வேளாளர்களாக இருந்த அதிகாரிகள் வழியாகவே தீண்டப்படாத, பின் தங்கிய ஜாதியினர் தங்கள் கோரிக்கைகளை முன் வைக்க வேண்டியிருந்தது. எனவே, பிரிட்டிஷ் அதிகாரிகளிடம் அந்தக் கோரிக்கைகள் போய்ச் சேராமலேயே தடுக்கப்பட்டன. டேவிட் லிட்டன் தனது ஆய்வில் கிராம ஜாதி ஒழுங்கை மறு கட்டமைப்பு செய்வதற்கு கோயில் திருவிழாக்கள் பயன்படுத்தப்பட்டதை விரிவாக ஆராய்கிறார். கோயிலில் நுழையும் உரிமைகளோடு சமூகப் பொருளாதார உரிமைகள் இணைந்திருந்தன. அப்போது தனிமனித சொத்துரிமை என்று தனியாக எதுவும் கிடையாது. **1892**இல் தீண்டப்படாத மக்களுக்கு நிலம் வழங்கும் அரசாணை வந்தது. அதற்குப் பெயர்பஞ்சமி நிலம். பஞ்சமி நிலம் கிடைத்தவர்கள் அங்கே கிணறு வெட்டக் கூடாது என்ற நிபந்தனை விதிக்கப்பட்டது என்று கூறிய பேராசிரியர் ஜெரோம், பல்வேறு இனக் குழுக்கள், ஜாதிக் கட்டமைப்புக்குள் வந்ததற்குக் காரணம் ஜாதியத்தின் நெகிழ்ச்சிப் போக்கே என்று ரொமிலா தாப்பர் போன்ற ஆய்வாளர்கள் கருத்து சரியானது அல்ல என்றார். ஜாதியக் கட்டமைப்புக்கு வெளியே அவர்கள் வாழ முடியாது என்ற அளவுக்கு அந்த அமைப்பு இறுக்கம் பெற்றிருந்ததே இதற்குக் காரணம் என்றார்.

புதிய தமிழ் ஆய்வுகள் நடத்திய இரண்டாவது கூட்டம் இது. முதல் கூட்டத்தில் விடுதலை இராஜேந்திரன், “தமிழ்நாட்டில் வெகு மக்கள் அரசியலில் பெரியார் இயக்கத்தின் நவீனத்துவ பங்களிப்புகள்” என்ற தலைப்பில் உரையாற்றினார். “சமகால சமூக-அரசியல்-பொருளாதாரம் குறித்து விரிவான ஆய்வுகளை முன்னெடுப்பதே இந்த அமைப்பின் நோக்கம்” என்பதை அறிமுக உரையாற்றிய வளர்மதி விளக்கினார்.

**– நமது செய்தியாளர்**

---

(முதல் பக்கத் தொடர்ச்சி)

செயல்பாடுகளை ஒடுக்காவிட்டால் மனித நேயமே இல்லாத நிலை ஏற்படும்.

முன்னதாக 2013இல் இதேபோன்று மகாராஷ்டிராவில் பகுத்தறிவாளர் தபோல்கர், காலையில் நடைபயிற்சியின்போது சுட்டுக் கொலை செய்யப்பட்டார். அந்த வழக்கு சி.பி.ஐ.க்கு மாற்றப்பட்ட பின்னும் இன்றுவரை குற்றவாளிகள் யாரும் கைதுசெய்யப்பட வில்லை.

அடுத்து இதே வரிசையில் மகாராஷ்டிரா கோலாப்பூரில் பகுத்தறிவாளரும், இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் முதுபெரும் தலைவருமான கோவிந்த் பன்சாரே சுட்டுக் கொல்லப்பட்டார்.

தற்போது கல்புர்கி சுட்டுக் கொல்லப் பட்டுள்ளார். இந்த சம்பவத்திற்கு கர்நாடக முதல்வர் சித்தராமையா, உள்துறை அமைச்சர் கே.ஜே. ஜார்ஜ், மூத்த எழுத்தாளர்கள், மனித உரிமை ஆர்வலர்கள் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

பஜ்ரங் தளம், விஸ்வ ஹிந்து பரிஷத், சிறீராம் சேனா, ஹிந்து ஜகர்ன வேதிகே உள்ளிட்ட அமைப்புகளிடம் தீவிர விசாரணை நடத்த வேண்டும் என சமூக ஆர்வலர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

கருத்தை கருத்தால் எதிர் கொள்ள முடியாத கோழைகள் இதுபோன்ற கொலைகளை தொடர்ச்சியாக நடத்திக் கொண்டிருக்கிறார்கள். பார்ப்பனீய மதவெறி பாசிசத்தின் வரலாறு தொடர்ச்சியாக இப்படித்தான் கடந்த காலங்களிலும் இருந் திருக்கிறது. இந்துத்துவ கும்பல் நினைப்பது போல் துப்பாக்கி குண்டுகள் மூலம் சுதந்திர, பகுத்தறிவு சிந்தனைகளை ஒருபோதும் அழித்துவிட முடியாது.


படுகொலை செய்யப்பட்ட பகுத்தறிவாளர் கல்புர்கி படத்திறப்பு 31.08.2015 திங்கட் கிழமை மாலை திராவிடர் விடுதலைக் கழகச் சென்னை மாவட்ட கலந்துரையாடல் நடைபெற்றது. கல்புர்கி படத்தை கழக தலைவர் கொளத்தூர் மணி திறந்து வைத்தார். படத்திறப்பு நிகழ்ச்சிக்கு கழக பொதுச்செயலாளர் விடுதலை இராசேந்திரன் முன்னிலை வகித்தார். இந்நிகழ்வின்போது கழகத்தின் மாநில தலைமைக் கழக நிர்வாகிகள், சென்னை மாவட்ட கழக பொறுப்பாளர்கள் மற்றும் தோழர்கள் கலந்து கொண்டனர்.

**– திராவிடர் விடுதலைக் கழகம்**

---

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 4th September 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | செப்டம்பர் 10, 2015 | புரட்சி 14 | முழக்கம் 35 | விலை: ரூ.3.00

## அறிவியல் போர்வையில் புதிய மோசடி

நவீன மூடநம்பிக்கைகள் இப்போது அறிவியல் பெயரில் பரப்பப்பட்டு வருகின்றன. அதில் ஒன்று, 'நடு மூளை செயலாக்கம்' (மிட் பிரைன் ஆக்டிவேஷன்) என்ற பெயரில் இப்போது நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. டெல்லி, பம்பாய் நகரங்களைத் தொடர்ந்து இப்போது சென்னையிலும் இது பரவி வருகிறது. மனித மூளையின் இடப்பகுதி, வலப்பகுதி இரண்டுக்கும் இடையில் உள்ள நடுமூளைப் பகுதியைத் தீவிரமாக இயக்கினால், அது செயல்படும்போது கண்களை மூடிக்கொண்டு கூட படிக்கலாம்; படித்தவை நன்றாக பதியும். தேர்வுகளில், போட்டிகளில் குழந்தைகள் சாதனை படைப்பாளர்கள் என்ற ஒரு நம்பிக்கை பரப்பப்பட்டு, இதற்காக 10 நாள் பயிற்சி, 15 நாள் பயிற்சி என்ற மய்யங்கள் உருவாகி வருகின்றன. குழந்தைகளின் படிப்புக்காக எதை வேண்டுமானாலும் செய்யத் தயாராக இருக்கும் பெற்றோர்கள் ரூ.25000 வரை கட்டணம் செலுத்தி இந்த மய்யங்களில் சேர்க்கிறார்கள்.

சென்னையில் தமிழ்நாடு அறிவியல் இயக்கம் நடத்திய நிகழ்வில் பேசிய பகுத்தறிவாளர் பேராசிரியர் நரேந்திர நாயக், 'இந்த மய்யங்களில் சேர்க்கப்படும் குழந்தைகளுக்கு பொய் சொல்வதற்குத்தான் கற்றுத் தரப்படுகிறது' என்றார். "கண்களைக் கட்டிக் கொண்டு எதிரே உள்ள பொருள்கள் என்னவென்று சொல்வது போல், கண்களை கட்டிக் கொண்டு சாலையில் இரு சக்கர வாகனம் ஓட்டுவார்கள். (கண்களில் மைதா மாவை பிசைந்து, ஒட்டிக் கொண்டு, அதன் மீது ரூபாய் நாணயத்தைப் பதித்து, அதன் மேலே கருப்புத் துணியால் போர்த்தி, கண்களைக் கட்டும்போது, கருப்புத் துணியை சற்று தூக்கி விட்டால், கண்களில் ஒட்டாத மைதா மாவு பார்வையிலிருந்து விலகும்போது, கருப்புத் துணி வழியாக கண்பார்வை தெரியும்.) இப்படி கண்களைக் கட்டி இரு சக்கர வாகனம் ஓட்டும் தந்திரம்தான், கண்களைக் கட்டிக் கொண்டு புத்தகம் பார்ப்பதும். இருட்டறையில் இவர்களால் புத்தகத்தை படிக்க வைக்க முடியுமா?" என்று கேட்டார் நரேந்திர நாயக்.

"இந்தப் பயிற்சியைப் பெறுகிற குழந்தைகளிடம், 'உன் மூளையில் ஒரு அற்புத சக்தியைக் கொண்டு வந்திருக்கிறோம். இதை உங்கள் பெற்றோர்களிடமோ, அல்லது வேறு எவரிடமோ சொன்னால், சக்தி போய்விடும்' என்று அச்சுறுத்துகிறார்கள். இது குழந்தைகளை பொய் சொல்ல வைப்பதோடு, அவர்களின் ஆக்கபூர்வ சிந்தனை வளர்ச்சியைத் தடுத்து விடுகிறது" என்றார் பேராசிரியர் நரேந்திர நாயக். இந்த பயிற்சி மய்யங்கள் நடத்துவோருக்கு அவர் சவால் விட்டார். "ரூ.50000 உறுதித் தொகை கட்டி, நீங்கள் நடத்தும் பயிற்சி அறிவியல்பூர்வமானது என்று நிரூபித்துக் காட்டுங்கள். நிரூபித்தால், அந்த இடத்திலேயே நாங்கள் ரூ. 5 இலட்சம் வழங்கத் தயார் என்று சென்னையில் செய்தியாளர்களுடன் நடந்த சந்திப்பில் அவர் சவால் விட்டார். டெல்லி உயர்நீதின்றத்தில் இந்த மோசடிகளை தடை செய்யக் கோரி பொதுநல வழக்கு தொடரப் பட்டுள்ளது" என்றும் அவர் தெரிவித்தார்.

மக்களிடையே அறிவியலைப் பரப்ப வேண்டும் என்று அரசியல் சட்டம் கூறுகிறது. அறிவியலுக்கு எதிரான மூடநம்பிக்கை ஒழிப்புப் பரப்புரைக்கு ஆட்சிகள் முட்டுக்கட்டைப் போடுகின்றன. தமிழக அமைச்சர்களே மூட நம்பிக்கையின் மொத்த உருவங்களாக வலம் வருகிறார்கள்.

'பார்ப்பான் சாப்பிட்டு வீசி எறிந்த எச்சில் இலை மீது உருண்டால் தோல் வியாதி குணமாகும்' என்று நம்பும் பக்தர்கள், கருநாடகத்தில் இருக்கிறார்கள். மாநில அரசு இதற்கு தடை போட்டால் பார்ப்பனர்கள் அதை எதிர்த்து உச்சநீதிமன்றம் வரை போய் தடை கேட்கிறார்கள்.


இந்த நிலையில் பகுத்தறிவைப் பரப்பும் சிந்தனையாளர்கள் ஒவ்வொருவராக சுட்டுக் கொல்லப்பட்டு வருகிறார்கள்.

# கோழைகளின் மிரட்டலுக்கு அஞ்ச மாட்டோம்: பகுத்தறிவாளர்கள் உறுதி

***"எங்கள் உயிரைப் பறித்தாலும், பகுத்தறிவு கொள்கைகளைத் தடுத்து நிறுத்த முடியாது" என்று பகுத்தறிவாளர்கள் உறுதியுடன் பதிலடி தந்தள்ளனர்.***

கருநாடக மாநிலத்தின் தலைசிறந்த சிந்தனை யாளர், மூடநம்பிக்கை எதிர்ப்பாளர், முன்னாள் துணைவேந்தர் எம்.எம். கல்புர்கி, தார்வாரில் அவரது இல்லத்தில் மதவெறி சக்திகளால் சுட்டுக் கொல்லப் பட்டவுடன் அடுத்த சில மணி நேரங்களிலேயே புவித் ஷெட்டி என்ற பஜ்ரங் தளத்தைச் சார்ந்த ஒரு மதவெறியன், "இந்து மதத்தை எதிர்த்தால் அதற்கு இதுதான் தண்டனை. இனி அடுத்த இலக்கு - மைசூர் பல்கலைக்கழக முன்னாள் பேராசிரியர், கே.எஸ்.பகவான்" என்று 'டிவிட்டர்' தளத்தில் பதிவேற்றினான். அந்த ஆசாமியை கைது செய்து, கருநாடக சிறையில் அடைத்த அதே நாளில், நீதிமன்றம் பிணை வழங்கிவிட்டது.

இந்த மிரட்டலுக்கு கே.எஸ். பகவான் அளித்த பேட்டி, 'இந்துஸ்தான் டைம்ஸ்', 'டைம்ஸ் ஆப் இந்தியா' நாளேடுகளில் வெளி வந்திருக்கிறது. "அந்த இளைஞர் தவறாக வழி நடத்தப்படுகிறார். ஆசிரியர்களோ, பெற்றோர்களோ அவரை சரியாக வழி நடத்தவில்லை. அவருக்காக நான் மிகவும் வருந்துகிறேன். நான் அந்த இளைஞரை சந்தித்து விவாதிக்க விரும்புகிறேன். என்னால் நெடுந்தூரம் பயணிக்க முடியாது. எனவே அவரே எனது மைசூர் இல்லம் வந்து என்னை சந்தித்து விவாதிக்கட்டும். நான் மகிழ்ச்சியோடு கருத்து மாறுபாடுகளை பகிர்ந்து கொள்ள தயாராக இருக்கிறேன். ஆனால், என்னைக் கொன்று விடுவேன் என்பதற்கெல்லாம் அஞ்சி, என் பணிகளை நிறுத்திக் கொள்ள மாட்டேன். கல்புர்கி, பன்சாரே, தபோல்கர் என்ற மூவரையும் சுட்டுக் கொலை செய்தவர்களுக்கு நான் ஒன்றைத் தெரிவிக்கிறேன் - எங்களை அழிக்கலாம்; சுக்குநூறாகக் கிழித்தெறியவும் செய்யலாம்; ஆனால் எங்கள் எழுத்துகள், சிந்தனைகள் வாழ்வாங்கு வாழும். என்னைக் கொலை செய்வதால் - எனது கொள்கை உறுதியை மாற்றிவிட முடியாது. நான் அவர்களைக் கண்டு அஞ்சி ஓடி ஒளியவில்லை என்பதை அவர்கள் புரிந்து கொள்ளட்டும். 'சங்கராச்சாரியும் பிற்போக்குத் தத்துவமும்' என்ற நூலை முதன்முதலாக எழுதியபோது முதல் மிரட்டலை சந்தித்தேன். 'சங்கராச்சாரி சமூகத்தை சீர்திருத்த வந்தவரல்ல; ஜாதி அமைப்பை பாதுகாக்க வந்தவர்' என்று - அந்த நூலில் ஆதாரத்துடன் மெய்ப்பித்திருந்தேன். சமஸ்கிருத மொழியிலுள்ள அவரது கருத்துகளை முழுமையாகப் படித்தபோது, அவர் 'தலித்' மக்களுக்கும் பெண்களுக்கும் விரோதி என்பதை என்னால் நிரூபிக்க முடிந்தது" என்று கே.எஸ். பகவான் அந்தப் பேட்டியில் கூறியிருந்தார்.




### சனல் இடமருகு

கேரளத்தைச் சார்ந்த சனல் இடமருகு, 'இந்தியப் பகுத்தறிவாளர் சங்கம்' என்ற அமைப்பின் தலைவர். ஏராளமான நூல்களை பகுத்தறிவு பார்ப்பன எதிர்ப்புப் பார்வையில் ஆதாரங்களோடு எழுதியவர். இந்தியாவில் எங்கெல்லாம் மூடநம்பிக்கைகள் கொழுந்துவிட்டு எரிந்தனவோ, அங்கெல்லாம் சென்று அவற்றைத் தாக்கித் தகர்த்தவர்.

சோதிடத்தை எதிர்த்தார்; அன்னை தெரசாவை விமர்சித்தார்; விபூதி வரவழைக்கும் பொய்மையைத் தோலுரித்தார். ஒரு கிறித்துவக் குடும்பத்தில் பிறந்த இவர், கிறித்துவத்தை மறுத்து நாத்திகர் ஆனார். உலகின் தலைசிறந்த நாத்திகப் பிரச்சாரகர்களில் ஒருவராகப் போற்றப்படுகிறார்.

2012 மார்ச் மாதத்தில், 'மும்பையிலுள்ள அன்னை வேளாங்கன்னி தேவாலயத்திலுள்ள சிலுவையில் தொங்கும் ஏசுவின் பாதங்களில் இருந்து தண்ணீர் சொட்டிக் கொண்டே இருக்கிறது' என்ற செய்தி நாடெங்கும் தீயாய்ப் பரவியது. (பிள்ளையார் பால் குடித்தார் என்பதைப்போல) இதைத் தொடர்ந்து, மும்பை சென்ற இடமருகு, அந்தச் சிலுவையைப் பரிசோதித்தார். 'சிலுவையுடன் இணைக்கப்பட்டிருந்த தண்ணீர்க் குழாயில் இருந்து நீர்க் கசிவு மூலம், ஏசுவின் பாதங்களில் இருந்து நீர் சொட்டுகிறது' என்று உண்மையைக் கண்டறிந்து ஏசுவின் அருள் என்ற மோசடியை அம்பலப்படுத் தினார். அப்போது அவருக்கு கொலை மிரட்டல்கள் வந்தன. நீதிமன்றத்தில் வழக்கும் தொடர்ந்தனர். இப்போது பின்லாந்து நாட்டில் தஞ்சமடைந் துள்ளார்.

இப்போது 'டைம்ஸ் ஆப் இந்தியா' வின் ஞாயிறு மலரான 'சண்டே டைம்ஸ்' இதழ் (செப்.6, 2015) அவரது சிறப்புப் பேட்டியை வெளியிட்டுள்ளது. அதில் பகுத்தறிவாளர்கள், மூட நம்பிக்கைகளை எதிர்த்து, மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தும் சுதந்திரம், இப்போது பறிக்கப்பட்டுள்ளது என்று வேதனையை வெளிப் படுத்தியுள்ளார். அது தொடர்பாக தனது அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டுள்ளார்.

"பிரபல பிரிட்டிஷ் தொலைக்காட்சி நிகழ்ச்சி தயாரிப்பாளர் ராபர்ட் ஈகிள் எங்களோடு, பல வாரங்கள் சுற்றுப் பயணம் செய்து, நாங்கள் மக்களிடையே மூடநம்பிக்கைகளை எதிர்த்து நடத்திய இயக்கங்களை கருத்துகளை பதிவு செய்து, 'சாமியார்களின் மோசடி' என்ற தலைப்பில் தொடர்ந்து, 18 மாதங்கள் ஒளிபரப்பியது, அதற்கு மக்களிடம் பேராதரவு இருந்தது. இது 20 ஆண்டுகளுக்கு முன் நடந்தது.

ஒரு பிரபலமான சாமியார், தனது மந்திர சக்தியினால் என்னைக் கொலை செய்துவிடுவதாக தொலைக்காட்சி வழியாக சவால் விட்டார். நான் சவாலை ஏற்றுக் கொண்டேன். தொலைக்காட்சியிலேயே இது நேரடியாக ஒளி பரப்பானது. என்னை அமர வைத்து, எதிரே அந்த சாமியார் ஒரு மணி நேரம், ஏதேதோ மந்திரங்களை ஓதினார். ஒரு மணி நேரத்துக்குப் பிறகு தனது மந்திரப் பூஜையை நிறுத்திக் கொண்டு, "உன்னை சில சக்தி வாய்ந்த கடவுள்கள் காப்பாற்ற முயற்சிக்கின்றன" என்றார். கடவுளே இல்லை என்று கூறும் என்னைக் காப்பாற்ற சக்தி வாய்ந்த கடவுள்கள் வந்து விட்டார்களாம். பிறகு மீண்டும் ஒரு சந்தர்ப்பம் கேட்டார். இப்போது தொலைக்காட்சி காமிராவுக்குப் பின்னால் தனது சீடர்களுடன் நெருப்பை வளர்த்தார். பொம்மை ஒன்றை வைத்து, நெருப்பில் சில சிவப்பு வண்ணப் பொடிகளைத் தூவி, ஏதேதோ மந்திரங்களை ஓதினார். அந்தப் பொம்மையை நானாக உருவகித்துக் கொண்டு, சாகடிக்க முயற்சிப்பதாகக் கூறினார். கடைசியில் தோல்வியடைந்தனர். நான் சிரித்துக் கொண்டிருந்தேன். பல கோடி மக்கள் உலகம் முழுதும் அதைப் பார்த்தார்கள். அப்போதுகூட எனக்கு எந்த மிரட்டலும் வரவில்லை. அந்தக் காலத்தில் நாடு முழுதுமிருந்தும் ஏராளமான பகுத்தறிவாளர்கள் உருவானார்கள். இணையதளங்கள் வழியாக மூடநம்பிக்கைகளை அம்பலப்படுத்தினர்.

அன்னை தெரசாவுக்கு பெருமை சேர்க்க, சில கிறிஸ்தவ நிறுவனங்கள் ஒரு பொய்யை பரப்பின. மோனிக்கா பெசரா என்ற பெண்ணுக்கு வயிற்றில் புற்று நோய் வந்தபோது அந்தப் பெண் தனது வயிற்றில் தெரசாவின் படத்தை வைத்துக்

(4ஆம் பக்கம்)

### செப்டம்பர் 17



சங்குகள் நிறமும் மாறி
சந்தனம் மணமும் மாறி
செங்கதிர் திசையும் மாறி
தெங்குநீர் குளிரும் மாறி
திங்கள்தன் நிலையும் மாறி
தெவிட்டமுது இனிப்பும் மாறி
சங்கமும் மாறினாலும்
தந்தைசொல் வாழும் நாளும்.

– பாவலர் பாலசுந்தரம்

# “எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்! இளைய தலைமுறைக்கு வேலை வேண்டும்!”

***ஏன் இந்த முழக்கம்? எதற்காக இந்த பரப்புரை? இதோ நமது இளைய தலைமுறையின் கவனத்துக்கு சில சிந்தனைகளை முன் வைக்கிறோம்.***

*தமிழர்களாகிய நாம், தாழ்த்தப்பட்ட ஜாதிகளாக பிற்படுத்தப்பட்ட ஜாதிகளாக எப்போது ஆனோம்? நமது பாட்டன், முப்பாட்டன் காலங்களில் நாம் எப்படி வாழ்ந்தோம்?*

*பார்ப்பனருக்கும், பண்ணையார்களுக்கும் அடிமைகளாகக் கிடந்தார்கள் நமது முன்னோர்கள். அவர்களுக்கு எழுதப் படிக்கத் தெரியாது. உழைப்பு, அடிமை வேலை, குலத்தொழில் - இவற்றை மட்டுமே செய்ய வேண்டும் என்பது அன்று சமுதாயம் விதித்த கறாரானக் கட்டளை.*

*ஜாதியின் பெயரால் திணிக்கப்பட்ட இந்த இழிவுகளை எப்படித் தகர்த்தோம்? ஜாதியத்தை எதிர்த்த பெரியாரும் அம்பேத்கரும் போராடிப் பெற்றுத் தந்த கல்வி, வேலை வாய்ப்புகளுக்கான உரிமைகளைப் பெற்றதால் தகர்த்தோம். இந்த இடஒதுக்கீடுகளை அமுல்படுத்துவதில் - காமராசர் ஆட்சியில் தொடங்கி, தமிழகத்தில் தொடர்ந்து, அதிகாரத்துக்கு வந்த ‘திராவிட’ கட்சிகள் ஆர்வம் காட்டின; அடைக்கப்பட்ட கல்விக் கதவுகள் திறந்தன; படித்தோம்; சுயமரியாதைப் பெற்றோம். ‘ஜாதி’யைக் காட்டி, ‘படிக்கக்கூடாத ஜாதி; உழைக்க வேண்டிய ஜாதி’ என்றார்கள். அத்தகைய ‘ஜாதி’த் தடைகளை, அதே ஜாதி அடிப்படையில் கண்டறிந்து உரிமைகளை மீட்க வந்ததுதான் இடஒதுக்கீடு. ஜாதி அடிப்படையில் இடஒதுக்கீடு கேட்கலாமா என்று கேட்பவர்கள் உண்டு. ஆம்; ஜாதியால் மறுக்கப்பட்ட உரிமைகளை மீட்டு, ஜாதி சமத்துவத்தைக் கொண்டு வருவதே இடஒதுக்கீடு என்று நெஞ்சு நிமிர்த்தி சொல்லுவோம்.*

*இப்போது, சமூக நீதியின் ஊடாக ஜாதியைக் கடந்து செல்ல நாம் முற்படுகிறோம். ஆனால், ஜாதி வெறி மீண்டும் நம்மை பாட்டன், முப்பாட்டன் காலத்துக்குப் பின்னோக்கி இழுக்கிறது.*

*இளைஞர்களே! காலம் காலமாய் - நம்மை அடிமைப்படுத்தி வந்த ஜாதியும் - ஜாதியமைப்பும் நமது தலைமுறைக்கு வேண்டவே வேண்டாம் என்று உரத்துச் சொல்லுங்கள்; ஏன்?*

- *நாம் எந்த ஜாதியில் இருக்க வேண்டும் என்று நாம் தீர்மானிப்பது இல்லை; நீ இந்த ஜாதிக்காரர்களாகவே வாழ வேண்டும் என்று நம் மீது திணித்து விட்டார்கள்.*
- *எந்த ஜாதிக்காரர்களானாலும், எல்லோருக்கும் அடையாளம் ஒன்றுதான்; அது மனிதர்களுக்கான அடையாளம். ஜாதிக்கொரு மனித அடையாளம் இல்லை.*
- *ஒவ்வொரு ஜாதிகளுக்கும் தனித்தனி இரத்தம் ஓடுவதும் இல்லை. உலகில் எல்லா மனிதர்களின் உடல்களிலும், ஏ, பி, ஏபி, ஓ/பாசிட்டிவ், நெகட்டிவ் என, 8 வகை இரத்தத்தில் ஏதோ ஒன்றுதான் ஓடிக் கொண்டிருக்கிறது. மருத்துவ மனையில் அறுவை சிகிச்சைக்கு உள்ளாகும் ஒரு செட்டியாருக்கு - செட்டியார் இரத்தம் வேண்டுமென்றோ, அய்யங்காருக்கு - அய்யங்கார் இரத்தம் வேண்டும் என்றோ கேட்கிறார்களா? இல்லை. ஒரு ஜாதிக்காரரின் உடல் வேறு ஒரு ஜாதிக்காரன் ‘குருதி’யை ஏற்கிறது; ஆம் இரத்தத்துக்கு ஜாதி இல்லை.*
- *உடல் உறுப்புகளைக் கொடையாக வழங்குவதில் இந்தியாவிலேயே தமிழ்நாடு தான் முதலிடம். இது நமக்கு ஒரு பெருமைதான். மூளைச் சாவு அடைந்தவர் களின் உறுப்புகள் - இருதயம், சிறுநீரகம், கல்லீரல், கண் போன்றவை பழுதடைந்து உயிருக்குப் போராடுகிறவர்களுக்குப் பொருத்தப்படுகின்றன. இந்த உறுப்புகளுக்கு ஜாதி பார்க்கப்படுகிறதா? அல்லது, உயிர் பிழைக்கப் போராடிக் கொண்டிருக்கும் நோயாளிகளோ உறவினர்களோ சொந்த ஜாதிக்காரர் உறுப்புதான் வேண்டும் என்று கேட்கிறார்களா? இல்லையே. சிகிச்சை தரும் மருத்துவர்களும் நோய்க்குத்தான் சிகிச்சை தருகிறார்கள்; ஜாதிக்கொரு சிகிச்சை தருவது இல்லை.*

**ஆனால், இளைஞர்கள் ஜாதி கடந்து ஒருவரையொருவர் விரும்பி, திருமணம் செய்ய முன் வரும்போது மட்டும் ஜாதி வெறியைக் காட்டி ஏன் தடுக்கிறார்கள்? அதுவும் ‘தலித்’ இளைஞர் என்றால் தலையை வெட்டி தண்டவாளத்தில் வீசுகிறார்களே, ஏன்? பெற்ற மகளையே கதறக் கதறக் கொடூரமாக பெற்ற தகப்பனே கொன்று குவிக்கிறானே, ஏன் இந்த கொலை வெறி?**

*குடிமக்களின் வாழும் இடங்களில், தேனீர்க் கடைகளில், சுடுகாடுகளில், வழிபாட்டு இடங்களில் அனைவருக்கும் சம உரிமைகளை மறுப்பது ஏன்? இதற்கு வித்திட்டது யார்?*

*மனிதர்களைப் பிரித்து ‘சூத்திரர்’, ‘பஞ்சமர்’ என்று இழிவுக்குள்ளாக்கியது ‘மனு சாஸ்திரம்’. இந்த மேல்ஜாதி, கீழ் ஜாதி அமைப்பை கடவுளே உருவாக்கினார் என்றார்கள் பார்ப்பனர்கள். புனித நூலாக போற்றப்படுகிற ‘பகவத் கீதை’யில் கிருஷ்ண பகவான் ‘நான்கு வர்ணங்களை நான்தான் படைத்தேன்’ என்கிறான். (சதுர்வர்ணம் மயா சிருஷ்டம்) ‘சம்பூகன்’ என்ற ‘சூத்திரன்’, ‘பிராமணன்’ வழியாக கடவுளை வணங்காமல், நேரடியாக கடவுளை வணங்கியது ‘குற்றம்’ என்று கூறி, சம்பூகன் தலையை வெட்டினான் ‘ராமன்’. அதுதான் ‘நமது குல ஜாதி தர்மம்’ என்று இராமாயணம் கூறுகிறது. ‘ஏகலைவன்’ என்ற ‘கீழ் ஜாதிக்காரன்’ வில் வித்தையில் கை தேர்ந்தவனாக மாறியபோது, அந்த உரிமை உன் ‘ஜாதி’க்கு இல்லை என்று அவனது கட்டை விரலை வெட்டி குருதட்சணைத் தருமாறு கேட்டுப் பெற்றான், வித்தையைக் கற்றுத் தராத பார்ப்பன குரு துரோணாச்சாரி. உடல் உறுப்பையே ‘தட்சணையாக’ வெட்டித் தருமாறு எந்த மனிதனாவது கேட்பானா? அதுவும் கட்டை விரலையே ‘தானமாக’ வெட்டி தந்துவிட்டால், பிறகு, எப்படி வில்லை விட முடியும்? இதுதான் ‘மகாபாரதம்’ வழியாக நமக்கு சொல்லப்பட்ட ‘ஜாதி தர்மம்’.*

**இன்று ‘சம்பூகன்கள்’ வதையோ, ‘ஏகலைவன்’ ‘சிதை’ப்போ நடக்க முடியாது என்பது உண்மைதான். ஆனால், தர்மபுரி ‘இளவரசன்’களும், திருச்செங்கோடு ‘கோகுல்ராஜ்’களும் வதைப்புக்கும் சிதைப்புக்கும் உள்ளாகிறார்களே! ‘மனு சாஸ்திரத்தை’க் காட்டி பார்ப்பனர் தொடங்கி வைத்த இந்த ‘ஜாதியம்’ இப்போதும் தொடர்வதை இளைஞர்களாகிய நாம் அனுமதிக்கலாமா? இந்த அநீதிகளுக்கு எதிராக பொங்கி எழ வேண்டாமா?**

*2014இல் மட்டும் தமிழகத்தில் ஜாதி வெறிக்கு 72 தலித்துகள் கொல்லப் பட்டுள்ளார்கள் (20.8.2015 ‘இந்து’). தமிழகம் வெட்கித் தலைகுனிய வேண்டாமா?*

*அன்று நம்மை ஜாதி சிறைக்குள்ளே அடைத்தார்கள். இன்று, ஜாதி சங்கத் தலைவர்கள், தங்கள் சுயநலனுக்காக ஊதி வளர்க்கும் ஜாதிவெறியால் தம் தலைவர்களின் சிலைகளையும்கூட கூண்டில் அடைத்து விட்டார்கள்; அதோடு மட்டுமல்ல, கலவரத்தைத் தூண்டிவிட்டு தம் ஜாதிக்காரர்களையும் சிறைக்குள் அனுப்புகிறார்கள். ஆனாலும், உறுதியாகச் சொல்கிறோம். ஒரே ஜாதியைச் சேர்ந்த அனைவருமே அந்த ஜாதித் தலைவர்களின் இந்த வன்முறைகளை ஏற்பதில்லை; ஜாதிக் கலவரத்தை வெறுப்பவர்கள், சமூக ஒற்றுமையை நேசிப்பவர்கள், ஜாதியை மறுப்பவர்கள் என்று ஒவ்வொரு ஜாதியிலும் ஏராளமானோர் உண்டு.*

*இப்படி, ஜாதி வெறியைத் தூண்டிவிடும் சுயநல ஜாதித் தலைவர்களை நோக்கி எழுப்ப வேண்டிய கேள்விகள் இருக்கின்றன.*

- *பிற்படுத்தப்பட்ட ஜாதிகளிலே பல இலட்சம் இளைஞர்கள் வேலையின்றி தவிக்கிறார்கள். தமிழ்நாட்டில் வேலை வாய்ப்பகங்களில் பதிவு செய்துள்ள தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட இளைஞர்கள் 86 இலட்சம். (இது தமிழக சட்டமன்றத்தில் தந்த தகவல்). வேலை கிடைக்காமல் நமது இளைஞர்கள் வீதியில் திரியும் இந்த நிலைக்குக் காரணம் என்ன?*
- *பொதுத் துறை நிறுவனங்கள் ஒழிந்து, மத்திய அரசின் மக்கள் விரோத கொள்கைகளால் கார்ப்பரேட் தொழில் நிறுவனங்கள் வளர்ந்து வருகின்றன. இவ்வாறு பொதுத் துறை நிறுவனங்கள் படிப்படியாக ஒழிவதால் அங்கே தாழ்த்தப்பட்டோருக்கு இருந்த வேலை வாய்ப்புகளைப் பறி கொடுத்து விட்டோம். எனவேதான் கார்ப்பரேட் நிறுவனங்களிலும் தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர் வேலை வாய்ப்புகளை உறுதி செய்யும் சட்டம் வரவேண்டும் என்று வலியுறுத்துகிறோம். இது நியாயமா? இல்லையா?*
- *இலாப வெறியே இந்த கார்ப்பரேட் நிறுவனங்களின் நோக்கம். நமது அரசு இலவசமாக அல்லது குறைந்த விலையில்..., நிலம் தருகிறது; 24 மணி நேர தடையற்ற மின்சாரம் தருகிறது; ஏராளமான வரிச் சலுகைகள் வழங்கப்படுகின்றன. இவர்களின் உற்பத்திப் பொருள்களையும் நாமே விலை கொடுத்து வாங்குகிறோம். இந்த நிலையில் வேலையின்றி தவிக்கும் நமது இளைஞர்களுக்கு இங்கே வேலை வாய்ப்புகளை ஏன் உறுதி செய்யக் கூடாது? அதற்கு ஏன் சட்டமியற்றக் கூடாது? இது நியாயமா? இல்லையா?*
- *அய்க்கிய முற்போக்குக் கூட்டணி ஆட்சி 2004ஆம் ஆண்டு பதவியேற்ற போது, கார்ப்பரேட் நிறுவனங்களில், தனியார்துறையில் இடஒதுக்கீடு செய்யும் திட்டத்தை அறிவித்தது. ஆனால், கார்ப்பரேட் பெருமுதலாளிகள் எதிர்த்தார்கள்; அதனால் திட்டத்தை கிடப்பில் போட்டார்கள். இதைத் தட்டிக் கேட்க நாதியில்லை; எந்தக் கட்சியும் குரல் கொடுக்கவில்லை. ஜாதிப் பெருமைக் காக்க, கழுத்தை அறுக்க, கலவரம் செய்ய துடிக்கும் எந்த ஜாதி சங்கத் தலைவராவது இதை கேட்டார்களா?*
- *பிற்படுத்தப்பட்டோருக்கு இடஒதுக்கீட்டை 50 சதவீதமாக உயர்த்தி சாதனை செய்த எம்.ஜி.ஆர். தனது ஆட்சியில் தமிழ்நாட்டில் பெரும் தொழில் நிறுவனங்களில் தாழ்த்தப்பட்டோர் பிற்படுத்தப்பட்டோர் இடஒதுக்கீட்டு உரிமைகளுக்காக திட்டம் தீட்டினார். ஆனால், அப்போது அவரது ஆட்சி கவிழ்க்கப்பட்டது. அதற்குப் பிறகு, எந்த ஆட்சியும் கவலைப்படவில்லை. இப்போதும் கருநாடகத்தில் மகாராஷ்டிராவில் கார்ப்பரேட் நிறுவனங்களில் அம்மாநில அரசுகள் இடஒதுக்கீடு சட்டங்களைக் கொண்டு வந்துள்ளன. அமெரிக்கா மற்றும் அய்ரோப்பிய நாடுகளில் பலவற்றிலும் தொழில் நிறுவனங்களில் பல்கலைக் கழகங்களில் சிறுபான்மை மக்களான கருப்பர்கள் உள்ளிட்ட அனைத்துப் பிரிவினருக்கும் இடஒதுக்கீடுகள் உறுதி செய்யப்பட் டுள்ளன. அதற்குப் பெயர் உறுதியாக்க செயல்பாடு* (affirmative action).
- *பிற்படுத்தப்பட்டோருக்கு 27 சதவீத இடஒதுக்கீடு இருந்தும்கூட, இப்போது மத்திய அரசுப் பதவிகளில் பிற்படுத்தப்பட்டோர் 7 சதவீதம்தான்; மத்திய அமைச்சகத்தில் துறை செயலாளர்களில் ஒரு தாழ்த்தப்பட்டவரோ, ஒரு பிற்படுத்தப்பட்டவரோ இல்லை. அதிகார மய்யங்கள் அனைத்திலும் பார்ப்பனர், உயர்ஜாதியினர்தான்.*

*இட ஒதுக்கீட்டில் படித்து, நல்ல மதிப்பெண் பெற்றும் உயர்கல்வி - வணிகமயமாகிவிட்டதால் படிப்பதற்கு பணம் இல்லாமல் தவிக்கிறார்கள், நமது இளைஞர்கள்.*

**எந்த ஜாதித் தலைவர்கள் இந்த உரிமைகளுக்குக் குரல் கொடுத்தார்கள்? போராடினார்கள்? ஜாதிகளை எதிர்க்கும் நாங்கள்தான் – பிற்படுத்தப்பட்ட ஜாதித் தலைவர்களின் ஜாதி வெறியை கண்டிக்கும் நாங்கள்தான், பிற்படுத்தப்பட்ட வர்களின் சமூக நீதிக்காக குரல் கொடுக்கிறோம்; போராடுகிறோம்.**

*அன்று பார்ப்பனர்கள் - திணித்த ‘மனு சாஸ்திரத்தின்’ இன்றைய தூதுவர்கள்தான் ஜாதி வெறியூட்டும் சில பிற்படுத்தப்பட்ட ஜாதி தலைவர்கள். இவர்கள் ஜாதி வெறி கலவரங்களுக்கு மட்டும் நம்மை பகடைக்காயாகப் பயன்படுத்துவார்கள். ஆனால், நமது வேலை வாய்ப்பை வாழ்வுரிமையை உறுதி செய்ய குரல் கொடுக்க மாட்டார்கள்; போராட முன் வரமாட்டார்கள். வேண்டாம்; வேண்டவே வேண்டாம்; இந்த சுயநல - ஜாதிவெறி சக்திகளைப் புறந்தள்ளுவோம்!*

*நமக்கு வாழ்வுரிமை வேண்டும்! வேலை வேண்டும்! கல்வி வேண்டும்!*

*எல்லாவற்றுக்கும் மேலாக ஜாதியை மறுக்கும் மானுடத்தை நேசிக்கும் சமத்துவத்துக்கான, சுயமரியாதைக்கான வாழ்வு வேண்டும்!*

*தோழமையை - மானுடத்தை - காதலை நட்பை - சமூக ஒற்றுமையை சிதைத்து பகைமையாக்கும் ஜாதியை ஜாதி வெறியை தூக்கி எறிவோம்!*

*இளைய தலைமுறையே! தோழியர்களே! தோழர்களே! எழுந்து வாருங்கள்! இணைந்து குரல்கொடுப்போம்!*

*எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்!*

*இளைய தலைமுறைக்கு வேலை வேண்டும்!*

**– திராவிடர் விடுதலைக் கழகம்**

**பரப்புரைப் பயணத்திற்கான துண்டறிக்கை**

# பவானியில் பரப்புரை இயக்கம் தொடங்கியது

## சமூக நீதிக்கு குழிதோண்டும் ஜாதி வெறி சக்திகளுக்கு எதிராக சூளுரை

***"பிற்படுத்தப்பட்டோரின் சமூக நீதியை ஆதரிக்கும் நாங்கள் தான் ஜாதி வெறியை தூண்டிவிடும் சக்திகளையும் எதிர்க்கிறோம்" என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி தனது உரையில் குறிப்பிட்டார்.***

திராவிடர் விடுதலைக் கழக ஈரோடு வடக்கு மாவட்ட கழகத்தின் சார்பாக "எங்கள் தலை முறைக்கு ஜாதி வேண்டாம்; எங்கள் இளைய தலைமுறைக்கு வேலை வேண்டும்" பிரச்சார பயணத் துவக்க விழா பொதுக் கூட்டம் பவானியில் நடைபெற்றது. கூட்டத்திற்கு மாவட்ட கழக செயலாளர் பவானி வேணுகோபால் தலைமையேற்க, முன்னிலை பொறுப்பை மாவட்ட தலைவர் நாத்திகசோதி ஏற்க, கூட்டத்தில் மாநில அமைப்பு செயலாளர் இரத்தினசாமி, மாநில பொருளாளர் துரைசாமி, மாநில வெளியீட்டு செயலாளர் இராம. இளங்கோவன் ஆகியோர் பங்கேற்று உரையாற்றினர்.

கூட்டத்தில் சிறப்புரை வழங்க கழகத் தலைவர் கொளத்தூர்மணி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் மூத்த வழக்குரைஞர் ப.பா. மோகன் கலந்து கொண்டனர். நிகழ்ச்சியின் முன்னதாக மேட்டூர் டி.கே.ஆர். இசை குழவினரின் ஜாதி ஒழிப்பு பாடல் நிகழ்வுகளும், கோவிந்தராஜின் மந்திரமல்ல! தந்திரமே! என்கிற நிகழ்ச்சியும் நடைபெற்றது. கூட்டத்திற்கு வருகை தந்தவர்களை வேல்முருகன் வரவேற்று பேசினார்.

இந்திய கம்யூனிஸ்ட் மூத்த வழக்குரைஞர் ப.பா. மோகன் உரையாற்றும் பொழுது, "இந்தியாவில் மார்க்சியம் என்பது பெரியாரியமும், அம்பேத்கரியமும் இணைந்துதான் என்றார். மேலும் இந்திய கம்யூனிஸ்ட் என்னவெல்லாம் செய்ய நினைக்கிறதோ அதை திராவிடர் விடுதலைக் கழகம் செய்துகொண்டு இருப்பதோடு மட்டுமில்லாமல் ஜாதிவெறி எங்கெல்லாம் தலை தூக்குகிறதோ அங்கு எல்லாம் இந்திய கம்யூனிஸ்ட் கட்சியோடு திராவிடர் விடுதலைக் கழகம் இணைந்து களப்பணி ஆற்றி வருகிறது. எவன் ஒருவன் சமூக மாற்றத்திற்காக நிற்கின்றானோ அல்லது உழைக்கிறானோ அவன் நாத்தினாகத் தான் இருக்க வேண்டும் என்று பகத்சிங் சொன்னார். இன்றைய இளைஞர்கள் அனைவரும் அதனை மனதில் கொள்ள வேண்டும் என்றார். இன்று நாங்கள் தான் பெரிய ஜாதி என்று கூறிக்கொண்டு பல் வேறு சாதி கலவரங்களுக்கு காரணமாக இருக்கின்ற வன்னியர் சமுகத்தை சார்ந்தவர்களின் உடலை புதைப்பதற்கு கவுந்தப்பாடிக்கு அருகே உள்ள அண்ணாநகரில் உள்ள சுடுகாட்டில் இடம் இல்லை என்று சொன்னார்கள். ஏனெனில் அது கவுண்டர் இன ஆதிக்க சக்திகளுக்கு ஆன சுடுகாடு என்று கூறி வன்னியர் சாதிகளை சாந்தவர்களின் உடலை அங்கு புதைக்க மறுத்தனர். இன்று நாங்கள் தான் அதில் களமிறங்கி செயல்பட்டோம். வன்னியர்களுக்கு பாதுகாப்பு என்று முழக்கமிடும் கட்சிகள் அங்கு வரவில்லை. இந்திய கம்யூனிஸ்ட் கட்சியும், திராவிடர் விடுதலைக் கழகமும் இணைந்துதான் வழக்காடி அந்த இடத்தில் புதைக்கும் பொது உரிமையை பெற்றுக் கொடுத்தனர்" என்றார்.

கழக தலைவர் கொளத்தூர் மணி உரையாற்றுகையில், "நாங்கள் பெரியார் திராவிடர் கழகமாக இருந்த பொழுது தனியார் துறையில் இட ஒதுக்கிடு வழங்கக் கோரி 2002-ல் சம்பூகன் சமுகநீதி பயணம், ஜாதிய வாழ்வியல் எதிர்ப்பு பரப்புரை பயணம், தொடர்ந்து திராவிடர் விடுதலைக் கழகமாக சுயமரியாதை சமதர்ம பரப்புரை பயணம், எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம் என்று பல்வேறு பயணங்களை தொடர்ந்து நடத்தி வருகின்றோம். அதன் ஒரு பகுதியாக இன்றைய காலகட்டத்தின் தேவையாக இன்றைய சூழ்நிலையில் அவசியமானது தான் 'எங்கள் தலைமுறைக்கு ஜாதி வேண்டாம்! எங்கள் இளைய தலைமுறைக்கு வேலை வேண்டும்' என்ற பிரச்சார பயணம் துவங்க உள்ளோம் இன்றைய சூழலில் உழைப்பை கொடுப்பவன் கீழ்சாதி, உழைப்பில் உற்பத்தியை பெருக்கும் பெண்-கீழ்சாதி, உழைக்காமல் சோம்பேறியாக இருப்பவன்-மேல் சாதி என்ற நிலை உள்ளது. 1949 ஆம் ஆண்டு நவம்பர் 26-ல் அரசியலமைப்பு சட்ட வரைவு அம்பேத்கர் தாக்கல் செய்யும் முன்பு நவம்பர் 25 ஆம் நாள் உரையாற்றும் பொழுது நாம் இன்று முதல் அரசியல் சமத்துவம் பெற்று விட்டோம் ஒருமனிதன் ஒருவாக்கு, ஒருவாக்கு ஒருமதிப்பு இது அரசியல் சமத்துவம் மட்டும் தான். இங்கு மனிதனுக்கு மனிதன் சமம் இல்லை பொருளதாரத்திலும், சமூகத்திலும் இன்னும் நாம் சமத்துவம் பெறவில்லை என்றார். அதே போல் அவர் உரையாற்றும் பொழுது **"இந்திய மக்களாகிய அரசியல் சட்டத்தில் முதல் முகப்புரை, 'இந்திய மக்களாகிய நாம்' என்றே தொடங்குகிறது. அரசியல் நிர்ணய சபையில் சில உறுப்பினர்கள் இந்திய தேச மக்களாகிய நாம் என்று குறிப்பிட சொன்னார்கள்"** அதற்கு அம்பேத்கர், "இங்கு தேசம் எங்கு உள்ளது? நாம் ஆயிரக் கணக்கான ஜாதி களாகப் பிரிந்துதான் கிடக்கின்றோம். எனவே தான் இந்திய மக்களாகிய நாம் என்று குறிப்பிட்டேன்" என்றார். அதனை அவரின் நண்பர்களும் ஏற்றுக் கொண்டனர்.




கழக தலைவர் கொளத்தூர் மணி தொடர்ந்து பேசுகையில், "பெரியாரிய இயக்கம் என்பது வெறும் பகுத்தறிவு இயக்கம் மட்டுமல்ல. பகுத்தறிவு என்பது அதன் ஒரு பகுதி மட்டும்தான். இது இன இழிவு ஒழிப்பு இயக்கம் ஆகும். வருகின்ற செப்-17 தந்தை பெரியாரின் பிறந்த நாள். அதே நாள் மற்றொருவருக்கும் பிறந்த நாள் அவர் விநாயகர். நாங்கள் பெரியாருக்கு 137 ஆவது பிறந்தநாள் என்று சொல்ல முடியும். விநாயகருக்கு எத்தனையாவது பிறந்த நாள் என்று இந்து முன்னணிக்காரர்கள் தான் சொல்ல வேண்டும். விநாயகருக்கு என்ன வரலாறு உள்ளது. வரலாறு என்றால் ஒரே மாதிரியாக இருக்கும். கதை என்றால் பல மாதிரியாக இருக்கும். விநாயகர் பிறப்பை பற்றி பல கதைகள் புராணங்களில் கூறப்பட்டு இருக்கின்றன. அவ்வளவு ஆபாசம் அதில் உள்ளது. இந்து முன்னணிக்காரர்கள் அவற்றைப் படிப்பார்களானால் புராணங்களை எரிக்கும் போரட்டத்தினை இந்து முன்ணணி தான் நடத்த வேண்டும்.

விடுதலை என்பது சமத்துவம், சகோதரத்துவம் ஆனால் இவைகளுக்கு எதிராக இருப்பது இந்து மதம் என்றார் அம்பேத்கர். பிற்படுத்தப்பட்டோர்க்கு இட ஒதுக்கீடு கிடைக்கப் போராடியவர்கள் பெரியார் வாதிகள். ஆனால் இன்று அதே பிற்படுத்தப்பட்டோர்கள் வேறு ஒரு சமூகத்திற்கு எதிராக திரும்பும் பொழுது தான் அந்த ஜாதிவெறியை எதிர்த்து, நாம் பேசவேண்டியுள்ளது. இன்று ஒவ்வொரு ஜாதிகட்சி தலைவர்களும் தங்களது ஜாதிகளை இடஒதுக்கீடு உரிமைகளுக்காக சின்ன சாதிகளாக அறிவிக்ககோரி அரசிடம் போராடிக் கொண்டு இருக்கின்றனர். ஆனால் ஊருக்குள் வந்தால் தாங்கள் தான் பெரிய சாதி என கூறிக் கொள்கின்றனர். இன்றைய உலக மயமாக்கலில் உடல் உழைப்பு பொறியியல் படித்த இளைஞர்களின் தினசரி சம்பளமும் 200 ரூபாய் தான். நாம் இன்றைய சூழ்நிலையில் கல்வியில் இடஒதுக்கிடு உரிமை பெற்று விட்டோம். வேலை வாய்ப்புகளில் இன்னும் இடஒதுக்கீடு பெறவில்லை. இன்று ஊர் கோவில்கள் அனைத்தும் கந்து வட்டி கொடுப்பவனும், கள்ள சாராயம் விற்பவனும் தான் கட்டிக் கொண்டு இருக்கின்றார்கள். இந்துக்களே ஒன்றுபடுங்கள் என்று கூவுகின்ற இந்து முன்னணி காரர்கள் சேஷ சமுத்திரத்தில் தலித் மக்கள் இந்து கடவுளின் தேரை மற்றொரு இந்து ஜாதி எரித்தபோது ஏன் கண்டனக் குரல் எழுப்பவில்லை எனக் கேட்கிறோம் என்றார். மேலும் இன்றைய இளைஞர்களே உங்கள் ஜாதி கட்சி தலைவர்களிடம் கேளுங்கள் மத்திய அரசு பணிகளில் எங்களின் வேலைக்கு இட ஒதுக்கிட்டு இது வரை என்ன செய்து உள்ளீர்கள்? அதை உயர்த்த ஜாதி கட்சி தலைவர்களான நீங்கள் இன்று வரை என்ன செய்து உள்ளீர்கள்? எனக் கேளுங்கள் என்று கேட்டார்" கொளத்தூர் மணி.

பொதுக்கூட்டத்திற்கு வினோத் நன்றியுரை வழங்கினார் பொதுக்கூட்டதிற்கான ஏற்பாடுகளை இராம. இளங்கோவன், நாத்திகசோதி, வேணு கோபால், வேல்முருகன், அருள், வினோத் உள்ளீட்ட தோழர்கள் சிறப்பாக செய்து இருந்தனர் பொதுக் கூட்டத்திற்கான விளம்பர பலகைகளை அந்தியூர் வீரன், தோழர்களுக்கான உணவு ஏற்பாடுகளை வினோத் ஏற்பாடு செய்து தந்தனர்.

**செய்தி ம.நிவாசு**

## பேராசிரியர் இராமு மணிவண்ணனுக்கு ஆதரவாக பல்கலை முற்றுகை: கழக மாணவர்கள் கைது

தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் அமைப்பாளர் பாரி. சிவா தலைமையில் 4.9.2015 அன்று மாலை 3.30 மணிக்கு பேராசிரியர் இராமு. மணிவண்ணன் அவர்களை மீண்டும் துறைத் தலைவர் பணியில் அமர்த்தவும், இடை நீக்கம் செய்யப்பட்ட 10 மாணவர்களை உடனடியாக பல்கலையில் அனுமதிக்கவும வலியுறுத்தி, தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் சென்னைப் பல்கலைக்கழகம் முற்றுகைப் போராட்டம் நடைபெற்றது. தோழர்கள் பல்கலைக்கழகத்தைக் கண்டித்து முழக்கம் எழுப்பியபடி நேப்பியர் பாலத்திலிருந்து முற்றுகையிட சென்றபோது காவல்துறையால் கைது செய்யப்பட்டு மாலை 6 மணிக்கு அனைவரும் விடுதலை செய்யப்பட்டனர். 30 மாணவர்கள் போராட்டத்தில் பங்கேற்றனர்.



தமிழ்நாடு மாணவர் கழகம் பிரகாசு, விஜயகுமார், செங்கல்பட்டு சட்ட கல்லூரி மாணவர் திருநாவுக்கரசு, பிரதிப், அருண், திராவிடர் விடுதலைக் கழகத் தோழர்கள் மாரிமுத்து, பிரகாசு, விழுப்புரம் அய்யனார், மாவட்ட செயலாளர் இரா. உமாபதி உள்ளிட்ட தோழர்கள் கைதானார்கள்.

### சாகித்ய அகாடமி விருதை திருப்பி அனுப்பினார்!

பிரபல கன்னட எழுத்தாளர் கல்புர்கி கொலை செய்யப்பட்டது, நாடு முழுவதும் படைப்பாளிகளிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தி உள்ளது. இந்நிலையில், சாகித்ய அகாடமி விருது பெற்ற இந்தி எழுத்தாளர் உதய் பிரகாஷ் தான் பெற்ற அகாடமி விருதை மீண்டும் அரசிடம் திருப்பி அளிக்க முடிவு செய்துள்ளார்.

டெல்லி ஜவகர்லால் நேரு பல்கலைக்கழகத்தின் முன்னாள் உதவிப் பேராசிரியரான இவர், தன்னுடைய முடிவை தனது முகநூல் பக்கத்தில் அறிவித்துள்ளார். அதில் அவர் தனக்கு அளிக்கப்பட்ட விருதுடன், ரூ.1 இலட்சம் ரொக்கப் பரிசையும் திருப்பி அளிக்க உள்ளதாகக் கூறியிருக்கிறார்.

மேலும் அவர் கூறும்போது, "இந்த முடிவு பற்றி வேறு எந்த எழுத்தாளர்களுடனும் நான் விவாதிக்கவில்லை. இது முழுக்க முழுக்க நானே எடுத்த முடிவு. கல்புர்கியின் கொலைக்கு இந்துத்துவ சக்திகளே காரணம். இந்தச் சம்பவம் என்னை உலுக்கியிருக்கிறது. இப்போது நான் மவுனித்திருக்கக் கூடிய நேரம் கிடையாது. மவுனம் இதுபோன்ற நடவடிக்கைகளை இன்னும் அதிகரிக்கவே செய்யும்" என்றார்.

2010-2011ஆம் ஆண்டு இவரின் 'மோகன்தாஸ்' என்ற சிறுகதைத் தொகுப்புக்காக இவருக்கு சாகித்ய அகாடமி விருது வழங்கப்பட்டது.

### மதிப்பு என்பது

ஓட்டல்காரன் அன்னதானப் பிரபு ஆவானா? சம்பள உபாத்தியாயர் குருநாதனாவானா? தாசி காதலியாவாளா? என்பதுபோலதான் தன் தன் நலனுக்கு, தன் தன் பொறுப்புக்கு ஆக காரியம் செய்யும் எவனுடைய காரியம் எப்படிப்பட்ட தாயினும் அது சாதாரண ஜீவ சுபாவமே ஒழிய போற்றக் கூடியதாகாது. அப்படியில்லாத தன்மை, செய்கை, வாழ்க்கை கொண்ட மனிதர்கள் அதாவது தன்னைப் பற்றிய கவலையில்லாமல், பிறருக்கு என்று தன்னை ஒப்படைத்துக் கொண்டு தொண்டாற்றுகிறவன் மதிக்கப்பட்டே தீருவான். அத்தொண்டால் பாதக மடையும் தனிப்பட்டவர்கள் தனிப்பட்ட வகுப்புகள், கும்பல்கள் அவனை மதிக்காமல் இருக்கலாம்; அவமதிக்கலாம். அது, பொதுவாக மதிக்காததாகாது.

**பெரியார், 'விடுதலை' – 08.04.1950**

DATE OF PUBLICATION 10.09.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# காஞ்சி மக்கள் மன்றத்தில் செங்கொடி நினைவு நாள்









மூன்று தமிழர்களை தூக்கிலிருந்து விடுவிக்க மரணதண்டனையை எதிர்த்து, தன்னைத்தானே தீக்கிரையாக்கிக் கொண்ட 'தழல் ஈகி' செங்கொடியின் நினைவு நாள் செப். 28. செங்கொடியின் பொது வாழ்வகமாகிய காஞ்சி மக்கள் மன்றம், அன்று செங்கொடியின் நினைவுநாளை செங்கொடியின் இலட்சியத் திருநாளாக பின்பற்றியது. வெகு மக்களும் இயக்கங்களும் சாரை சாரையாக அணி வகுத்து, செங்கொடி நினைவிடத்தில் மலர்வளையம் வைத்து ஈழத் தமிழர் விடுதலைக்கும், மரணதண்டனை ஒழிப்புக்கும் சூளுரைத்தனர்.

பிற்பகல் 4 மணியிலிருந்து மக்கள் மன்றத்தின் கலைக் குழுவினர், ஜாதி, மத எதிர்ப்பு, ஈழ விடுதலை ஆதரவு ஈழப் போராளிகளின் வீரங்களைப் பறை சாற்றும் எழுச்சி இசை நிகழ்ச்சிகளை வழங்கினார். 'ஜாதி-பெண்ணடிமை' ஒழித்த சமத்துவபுரியாக விளங்கும் காஞ்சி மக்கள் மன்றத்தின் தோழர்கள் வந்திருந்த அனைவருக்கும் உணவு வழங்கி அன்பைப் பரிமாறினர்.

காஞ்சி மக்கள் மன்றத்தின் அடுத்த இளைய தலைமுறை பறைகளை கையில் எடுத்தது; குழுக்களாக நடனமாடியது; பாடியது. மக்கள் தொண்டினை வாழ்க்கையாக்கிக் கொண்ட மன்றத்தின் செங்கொடி நினைவு நிகழ்வுகளில் அரசியல், சமுதாய இயக்கத் தலைவர்களும் பங்கேற்று, செங்கொடியின் தியாகத்துக்கு வீரவணக்கம் செலுத்தினர். விடுதலை சிறுத்தைகள் கட்சி தலைவர் திருமாவளவன், மறுமலர்ச்சி தி.மு.க. பொதுச் செயலாளர் வைகோ, தமிழர் வாழ்வுரிமைக் கட்சி நிறுவனர் வேல் முருகன் என்று அரசியல் கட்சித் தலைவர்கள் பலரும் உரையாற்றினர். இயக்கத் தலைவர்களின் வரிசையில் நிறைவுரையாற்றினார், திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி. மனித உரிமைகளுக்கு எதிரான அடக்குமுறை சட்டங்கள் களப்போராளிகளின் கழுத்தை நெரித்துக் கொண்டிருப்பதை அவர் பட்டியலிட்டார்.

மரண தண்டனை ஒழிப்பு, ஜாதி ஒழிப்பு, பெண்ணடிமை ஒழிப்பு, ஈழ விடுதலை என்று இலட்சிய முழக்கங்கள் இசையாகவும் உரையாகவும் ஒலித்து செங்கொடியின் நினைவுகளை சுமந்து நின்றன. இதுவே செங்கொடிக்குச் செலுத்தும் உண்மையான வீரவணக்கம் என்பதைச் சொல்லவும் வேண்டுமோ?

## மன்னையில் செங்கொடி நினைவு நாள்

திராவிடர் விடுதலைக்கழகம், அம்பேத்கர்-பெரியார் வாசகர் வட்டம் சார்பில் பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகிய மூவரின் மரண தண்டனையை இரத்து செய்யக் கோரி கடந்த 2011ம் ஆண்டு தீக்குளித்து உயிர்நீத்த செங்கொடியின் 4ஆம் ஆண்டு நினைவு தினம் மன்னார்குடி பேருந்து நிலையம் முன்பு அனுசரிக்கப்பட்டது. திருவாரூர் மாவட்ட திராவிடர் விடுதலைக்கழக செயலாளர் இரா.காளிதாசு, அம்பேத்கர் பெரியார் வாசகர் வட்ட செயலாளர் சேரன்குளம் செந்தில்குமார் ஆகியோர் தலைமை வகித்தனர்.

மதிமுக நகர செயலாளர் சன்சரவணன், மாவட்ட பிரதிநிதி மீனாட்சி சுந்தரம், விடுதலை தமிழ்புலிகள் கட்சி ஆதவன், சிபிஎம்எல் மாவட்ட செயலாளர் மருத செல்வராஜ், பாமக மாவட்ட தலைவர் சீனி தனபாலன், விடுதலை சிறுத்தைகள் நிர்வாகிகள் பௌத்தன், திக நிர்வாகிகள் சந்திரபோஸ், இளங்கோவன், தமிழ்நாடு அறிவியல் மன்ற மாவட்ட அமைப்பாளர் முரளி சங்கர். திவிக நிர்வாகிகள் சசிகுமார், கவிஞர் கலைபாரதி, நெடுவை வாசுதேவன் உள்பட ஏராளமானோர் கலந்துகொண்டு செங்கொடியின் உருவப்படத்திற்கு மலர்தூவியும், மெழுகுவர்த்தி ஏந்தியும் அஞ்சலி செலுத்தினார்கள்.

கூட்டத்தில், ராஜிவ் காந்தி கொலை வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட பேரறிவாளன், முருகன், சாந்தன் ஆகியோரின் மரணதண்டனையை இரத்து செய்ய வலியுறுத்தி செங்கொடி உயிர்நீத்தார். உலகத்திலேயே மரண தண்டனையை இரத்துசெய்ய வலியுறுத்தி தீக்குளித்த முதல் பெண்மணி செங்கொடியாவார். உலகம் முழுவதும் 160 நாடுகளில் மரணதண்டனை வழங்க வழி செய்கின்ற சட்டப்பிரிவு முற்றிலும் இரத்து செய்யப்பட்டுள்ளது. ஐ.நா, மன்றமும் இக்கோரிக்கையை வலியுறுத்துகின்றது காந்தியடிகள் முதல் மறைந்த முன்னாள் குடியரசு தலைவர் அப்துல்கலாம் வரை மரணதண்டனையை இரத்து செய்ய வேண்டும் என வலியுறுத்திய நிலையில் இந்திய அரசு இதுவரை நடவடிக்கை எடுக்கவில்லை. இனியும் காலந்தாழ்த்தாமல் மத்திய அரசு இவர்களின் கோரிக்கையை ஏற்று இந்திய தண்டனை சட்டத்திலிருந்து மரண தண்டனை பிரிவை உடனடியாக நீக்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது.

## ஜாதிய வன்கொடுமைகளைக் கண்டித்து மாணவர்கள் முழக்கம்

23.8.2015 அன்று மாலை சென்னையில் கழக தலைமை அலுவலகத்தில் தமிழ்நாடு மாணவர் கழகம் சார்பில் 'சமகால வாழ்வியலும் ஜாதிய வன்கொடுமைகளும்' எனும் தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. இதில் தென்சென்னை திராவிடர் கழக இளைஞரணி தலைவர் செல்வேந்திரன், தமிழ்நாடு மாணவர் நடுவம் தலைவர் இளையராஜா, தமிழ் இளைஞா மாணவர் கூட்டமைப்பு தலைமை ஒருங்கிணைப்பாளர் பி.கே. பிரபாகரன், தமிழ்நாடு மாணவர் நடுவம் தலைவர் ஜோ. பிரிட்டோ, மாற்றம் மாணவர் இளையோர் இயக்கத் தலைவர் பிரதீப் ஆகியோர் கலந்து கொண்டு சாதியத்திற்கு எதிராக கருத்துரை வழங்கினர். கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், எழுத்தாளர் வே. மதிமாறன் ஆகியோர் சிறப்புரை வழங்கினர். நிகழ்ச்சி மாலை 5.30 முதல் 9 மணி வரை நடைபெற்றது.

தமிழ்நாடு மாணவர் கழகத்தின் சிதம்பரம் மதன்குமார் வரவேற்புரை வழங்கினார். செயப்பிரகாசு நன்றி கூறினார். நிகழ்ச்சியில் பல்வேறு அமைப்புகளைச் சேர்ந்த தோழர்களும் கலந்து கொண்டனர். கருத்தரங்கில் கலந்து கொண்ட அனைவருக்கும், சிறப்பாக ஏற்பாடு செய்த சென்னை கழகத் தோழர்களுக்கும் பாரி சிவா நன்றி தெரிவித்தார்.

## கழகத் தோழர்கள் ஆர்வம்: உண்டியலில் சேமித்து கழக ஏட்டுக்கு நிதி

கிருஷ்ணகிரி தோழர்கள் குமார், மனோகரன், பிரபு ஆகியோர் வீட்டில் உண்டியல் வைத்து, கழகம் - கழக ஏட்டின் வளர்ச்சிக்காக ஒவ்வொரு நாளும் சேமித்த தொகையில் ரூ.2000/- கிருஷ்ணகிரி மாவட்ட கலந்துரையாடல் வட்டத்தில் கழகத் தலைவரிடம் வழங்கினர்.


நன்றியுடன் பெற்றுக் கொண்டோம் (ஆர்).

(முதல் பக்கத் தொடர்ச்சி)

கொண்டிருந்தார். நோய் குணமாகி விட்டது என்று கூறினார்கள். அந்தப் பெண் ஏற்கெனவே புற்று நோய்க்கு அறுவை சிகிச்சை செய்து கொண்டவர் என்பதை நான் விசாரணை நடத்தி அம்பலப்படுத்தினேன். புட்டபர்த்தி சாய்பாபா இறந்தபோது அவருக்கு வயது 80. ஆனால், தனக்கு 96ஆம் வயதில்தான் மரணம் என்று அறிவித்த புட்டபர்த்தி, ஏன் 80-லேயே மரணமடைந்தார் என்று கேட்டேன். அவரது சீடர்களுக்கு என் மீது கோபம் வந்துவிட்டது. இப்போது இந்தியா மிகவும் ஆபத்தான பழைமையை நோக்கித் திரும்பிக் கொண்டிருக்கிறது" என்று அந்தப் பேட்டியில் கூறியுள்ளார் சனல் இடமருகு. 'ஆனாலும் பகுத்தறிவு சிந்தனைகளை மிரட்டல்களால் பணிய வைக்க முடியாது' என்று அவர் உறுதிபடக் கூறினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 10th September 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN



புரட்சிப்

# பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | செப்டம்பர் 17, 2015 | புரட்சி 14 | முழக்கம் 36 | விலை: ரூ.3.00


## உயர்நீதிமன்ற வழக்காடு மொழியாக தமிழ் வரட்டும்!

உயர்நீதிமன்றங்களில் வழக்காடும் உரிமை தமிழுக்கும் வேண்டும் என்று போராடும் வழக்கறிஞர்களின் போராட்ட நியாயங்களை திராவிடர் விடுதலைக் கழகம் வரவேற்கிறது. வழக்கு தொடுக்கும் பாமர மக்கள் தங்களுக்காக வழக்கறிஞர் என்ன வாதங்களை முன் வைக்கிறார் என்பதோ, நீதிபதி என்ன கூறுகிறார் என்பதோ அறியாத ‘தற்குறிகளாக்கப் படுவது’ அவமானகரமானதாகும்.

இராஜஸ்தான், உ.பி., மத்திய பிரதேசம், பீகார், மாநில உயர்நீதிமன்றங்களில் வழக்காடு மொழியாக இந்திக்கும் உரிமை வழங்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்புச் சட்டம் 348(2) பிரிவு மாநில மொழிகளை உயர்நீதிமன்ற வழக்காடு மொழியாகப் பயன்படுத்தலாம் என்று கூறுகிறது. இதற்கு மாநில ஆளுநர், குடியரசுத் தலைவர் ஒப்புதலைப் பெற வேண்டும்.

2002ஆம் ஆண்டில் ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது, இது குறித்து உயர்நீதிமன்றத்திடம் கருத்து கேட்டார். ஆனால் நீதிமன்றம் தமிழை வழக்காடு மொழியாக்க மறுத்துவிட்டது. மீண்டும் 2006இல் கலைஞர் கருணாநிதி முதல்வராக இருந்தபோது, ஆங்கிலத்தில் மொழி பெயர்ப்பு செய்வதற்கான ஏற்பாடுகளை செய்துவிட்டு வழக்காடு மொழியாக்கலாம் என்று உயர்நீதிமன்றம் கூறியது. (அப்போது இந்தக் கோரிக்கையை எதிர்த்த தமிழ்நாடு நீதிபதிகளுக்கு எதிராக தமிழ் வழக்காடு மொழியை உறுதியாக ஆதரித்தவர் பீகாரைச் சேர்ந்த நீதிபதி முகோபாத்யாயா.) இதனடிப்படையில் தமிழக சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டு குடியரசுத் தலைவர் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டது.

ஆனால், டில்லி அரசு இத் தீர்மானத்தை குடியரசுத் தலைவருக்கு அனுப்பாமல் சட்டவிதிகளை புறந்தள்ளி உச்சநீதிமன்றத்தின் பார்வைக்கு அனுப்பியது. உச்சநீதிமன்ற நீதிபதி பாலகிருஷ்ணன் மறுத்ததோடு, “இந்தி வளரும் வரை ஆங்கிலம் இருக்கும்; அதற்குப் பிறகு, அனைத்து உயர்நீதிமன்றங்களிலும் இந்தியே வழக்காடும் மொழியாக இருக்கும்” என்று கூறிவிட்டார். இதை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்று முதல்வர் கலைஞர் கருணாநிதி கடிதம் எழுதினார். அப்படியே கடிதம் கிடப்பில் போடப்பட்டுவிட்டது. இத்தகவல்களை இந்தக் கோரிக்கைக்காக போராடிவரும் வழக்கறிஞர் பகத்சிங் ஒரு பேட்டியில் தெளிவாக கூறியுள்ளார்.


வெளி மாநிலத்திலிருந்து நீதிபதிகளாக வருவோருக்கு மாநில மொழி தெரியாது என்ற ஒரே காரணத்துக்காக மக்கள் மொழியைப் புறந்தள்ளுவதை ஏற்க முடியாது. அந்த நீதிபதிகளுக்கு மொழி பெயர்ப்பு வசதிகள் செய்யலாம். குழப்பம் இருக்குமிடங்களில் ஆங்கிலத்திலேகூட விளக்கங்கள் கேட்டுப் பெறலாம். மார்க்கண்டேய கட்ஜூ, தமிழகத்தில் நீதிபதியாக வந்து தமிழ் கற்றதுபோல் தமிழைக் கற்றுக் கொள்ளலாம். இவை நிர்வாகம் சார்ந்த பிரச்சினைகள் அவ்வளவுதான்!

உயர்நீதிமன்றம் இந்தக் கோரிக்கைக்காக நடந்த போராட்டத்தை நீதிமன்ற அவமதிப்பாக பார்க்கிறது. நம்மைப் பொறுத்தவரை இந்தக் கோரிக்கையைப் புறக்கணிப்பது தமிழக மக்களை அவமதிப்பதாகவே கருதுகிறோம்.

### யுவராஜை தேடப்படும் குற்றவாளியாக காவல்துறை அறிவித்தது

# கழகத்தின் போராட்டம் வெற்றி

கடந்த சூன் மாதம் 24 தேதியன்று சேலம் மாவட்டம் ஓமலூரை சேர்ந்த பொறியாளர் கோகுல்ராஜ் என்பவர் நாமக்கல் மாவட்டம், பள்ளிபாளையம் அருகேயுள்ள தொட்டிபாளையம் இரயில் தண்டவாளத்தில் தலைதுண்டிக்கப்பட்ட நிலையில் பிணமாக கிடந்தார். இந்நிலையில் கோகுல்ராஜுடன் கல்லூரியில் படித்த சுவாதி என்ற இளம்பெண்ணும், கோகுல்ராஜின் தாயாரும் திருச்செங்கோடு காவல்நிலையத்தில் கோகுல்ராஜ் கொலை செய்யப்பட்டிருப்பதாக புகார் அளித்தனர். அதை தொடர்ந்து கழகம் உள்பட பல்வேறு அமைப்புகளின் போராட்டத்தின் விளைவாக அது கொலை வழக்காக பதிவு செய்யப்பட்டது. ஆதி திராவிடர் சமூகத்தை சேர்ந்த கோகுல்ராஜும், கொங்கு வேளாளர் சமூகத்தை சேர்ந்த சுவாதியும் காதலித்து வந்த நிலையில், சம்பவம் நடந்த அன்று காலையில் இருவரும் திருச்செங்கோடு அர்த்தநாரிஸ்வரர் மலைக்கோயிலுக்கு சென்றுள்ளனர். அவர்கள் வழிபாடெல்லாம் முடித்துவிட்டு கோயிலைவிட்டு வெளியேறும் போது தீரன் சின்னமலை கவுண்டர்கள் பேரவை நிறுவனர் யுவராஜ் தலைமையில் 10க்கும் மேற்பட்டோர் அவர்கள் இருவரையும் அழைத்து மிரட்டி சுவாதியை கீழே அனுப்பிவிட்டு கோகுல்ராஜை மட்டும் காரில் கடத்தி சென்றுள்ளனர். இவையனைத்தும் கோயிலில் உள்ள கண்காணிப்பு கேமராவில் பதிவாகி உள்ளது. மேலும் சுவாதி கொடுத்த வாக்குமூலமும் காவல்துறையால் பதிவு செய்யப்பட்டுள்ளது. இருந்தும் காவல்துறை இவ்வழக்கில் மெத்தனம் காட்டுவதை உணர்ந்த கழகத் தலைவர் கடந்த ஆகஸ்டு 6ஆம் தேதி திருச்செங்கோடு பெரியார் மன்றத்தில் நடைபெற்ற நாமக்கல் மாவட்ட கலந்துரையாடல் கூட்டத்தின்போது நடந்த பத்திரிக்கையாளர்கள் சந்திப்பில் ஆகஸ்டு 17 ஆம் தேதி கொலைக் குற்றவாளி யுவராஜை கைதுசெய்ய வலியுறுத்தி திருச்செங்கோட்டில் ஆர்ப்பாட்டம் நடத்தப்போவதாக அறிவித்தார். இந்த அறிவிப்பை தொடர்ந்து ஏற்கெனவே பிடிபட்ட 11 பேரில் 4 பேர் மீது குண்டர் சட்டம் பாய்ச்சியது மாவட்ட நிர்வாகம். இதைத் தொடர்ந்து 17 ஆம் தேதி கழகத் தலைவர் கொளத்தூர்மணி தலைமையில் 200க்கும் மேற்பட்ட தோழர்கள் திரண்டு திருச்செங்கோடு காவல் நிலையம் முன்பு யுவராஜை கைதுசெய்ய வலியுறுத்தி ஆர்ப்பாட்டம் நடத்தினோம். நமது போராட்டத்தின் விளைவாக வழக்கில் மெத்தன போக்கை கடைபிடித்த காவல் ஆய்வாளர் சக்கரபாணி மதுவிலக்கு பிரிவுக்கு இலாக்கா மாற்றமும், நாமக்கல்லுக்கு இடமாற்றமும் செய்யப்பட்டுள்ளார். மேலும் நாம் தொடர்ந்து பிரசாரங்களிலும், தீர்மானங்களிலும் பேசியும், எழுதியும் வந்த ஆதிக்க ஜாதியினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் தலித் அதிகாரிகளை நியமிக்க வேண்டும் என்ற கோரிக்கையும் நடைமுறைபடுத்தப்பட்டு தலித் சமூகத்தை சேர்ந்த ஒருவரை புதிய ஆய்வாளராக நியமித்தது காவல் துறை. 17 ஆம் தேதி நடந்த ஆர்ப்பாட்டத்தில் கழகத் தலைவர் பேசிய போது, கொலைகுற்ற விசாரணை பிரிவு-82இன்படி யுவராஜை தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்க வேண்டுமென்றும், பிரிவு-83இன் படி அவரது சொத்துக்களை அரசு பறிமுதல் செய்யவேண்டுமென்றும் வலியுறுத்தி பேசினார். அதன்படி காவல்துறை கடந்த வாரத்தில் யுவராஜின் வீட்டிலும், அலுவலகத்திலும் அவரை தேடப்படும் குற்றவாளிஎன்றும், அவரது சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படுவதாகவும் ஒரு அறிவிப்பு நோட்டிஸ் காவல்துறையால் ஒட்டப்பட்டுள்ளது. கழகத்தின் தொடர் போராட்டத்தால் கோகுல்ராஜ் கொலை வழக்கு விசாரணை இறுதி கட்டத்தை அடைந்திருக்கிறது.




நாமக்கல் மாவட்ட அமைப்பாளர் மா. வைரவேல் இத் தகவல்களை தெரிவித்துள்ளார்.

### தலித் – சிறுபான்மையினரின் நிலங்கள் மோசடி கும்பல் ஆக்கிரமிப்பைக் கண்டித்து

# திருப்பூரில் ஆர்ப்பாட்டம்

திருப்பூர் ராயபுரம், அணைமேடு பகுதியில் சுமார் 80 ஆண்டுகளுக்கு மேலாக தலித் மக்கள், சிறுபான்மை மக்கள் மற்றும் சில பிற்படுத்தப்பட்ட மக்கள் வசிக்கும் குடியிருப்பு பகுதியை நிலமோசடி கும்பல் போலி ஆவணங்கள் தயார் செய்து குண்டர்களை வைத்து மிரட்டி அபகரிக்க நினைப்பதை கண்டித்து திருப்பூர் மாநகராட்சி அலுவலகம் முன்பு 14.09.2015 அன்று காலை ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி கலந்து கொண்டு கண்டன உரையாற்றினார்.

கழகத் தலைவர் தன் கண்டன உரையின் போது, இந்த இடத்தை 80 ஆண்டுகளுக்கு மேல் வாழ்விடமாக கொண்டு வாழ்ந்து வரும் அம் மக்களை போலி ஆவணங்களை தயார் செய்து நிலமோசடி கும்பல் அபகரிக்க நினைப்பதையும், காவல்துறையும் கூட அதற்கு உடந்தையாக இருப்பதையும் வன்மையாக கண்டிக்கிறோம். மேலும் அந்த இடத்திற்கு உண்மையான உரிமையாளர்கள் யாரேனும் இருந்தால் அவர்களை கண்டுபிடித்து அவர்களிடமிருந்து இந்த நிலத்தை வாங்கி 80 ஆண்டுகளுக்கு மேல் அங்கு வாழும் அம்மக்களுக்கு உரிமையாக பட்டா போட்டு தர வேண்டும் என தமிழக அரசை வலியுறுத்தினார்.

இந்த ஆர்ப்பாட்டத்தில் பகுஜன் சமாஜ் கட்சியின் மாநில பொதுச் செயலாளர் வழக்கறிஞர் ரஜினி காந்த், ஆதித்தமிழர் பேரவையின் மாநில துணைப்பொதுச்செயலாளர் வழக்கறிஞர் கனகசபை, தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் மாவட்ட செயலாளர் சண். முத்துக் குமார் ஆகியோர் கண்டன உரையாற்றினர். கழகப் பொருளாளர் துரைசாமி, மாவட்ட செயலாளர் முகில்ராசு, மாநகர செயலாளர் நீதிராசன் மற்றும் கழகத் தோழர்கள், அப்பகுதி வாழ் பெண்கள் குழந்தைகள் உட்பட 500-க்கும் அதிகமானோர் கலந்து கொண்டனர்.



## மதக் கலவரத்தைத் தூண்டும் விநாயகன் அரசியல் ஊர்வலத்துக்கு எதிராக

# பெரியார் கைத்தடி ஊர்வலம்

செப்டம்பர் 20ஆம் தேதி ஞாயிற்றுக் கிழமை மாலை 3.00 மணியளவில் சென்னை அய்ஸ் அவுஸ் காவல் நிலையம் அருகிலிருந்து பெரியார் கைத்தடிகளுடன் ஊர்வலம் புறப்படும்.



தலைமை :
**ஈரோடு இரத்தினசாமி**
(கழகப் பொருளாளர்)

முன்னிலை:
**தபசி குமரன்**
(தலைமை நிலைய செயலாளர்)

**‘விநாயகன்’ ஊர்வலத்தை ஏன் எதிர்க்கிறோம்?**

- ஒவ்வொரு மதத்தினரும் அவரவர் மதத்தைப் பின்பற்ற வழிபாடு செய்ய சட்டம் உரிமை வழங்கியிருக்கிறது. மதம் சார்ந்த நம்பிக்கைகளை அரசிய லாக்குவதற்கு அதை இஸ்லாமியர் எதிர்ப்புக்குப் பயன்படுத்துவதற்கும் சட்டம் அனுமதிக்கிறதா?
- விநாயகன் ஊர்வலத்தை முன்னின்று நடத்தும் இந்து முன்னணி, இந்து மக்கள் கட்சி உள்ளிட்ட பல்வேறு குழுக்கள் – மத அமைப்புகள் இல்லை. மதத்தை வைத்து அரசியல் நடத்துபவை. இவர்கள் நடத்தும் ஊர்வலம் – மதத்தின் ஊர்வலமாக தமிழக ஆட்சியும், காவல் துறையும் அங்கீகரித்து அனுமதியும் வழங்குவது மதவெறி அரசியலை ஊக்கப்படுத்தும் செயல்பாடு அல்லவா?
- ‘இரசாயனம்’ கலந்த விதவிதமான ‘விநாயகன்’களை கடலில் கரைப்பதால் கடல் நீர் மாசுபட்டு, கடல் வாழ் உயிரினங்களும் பாதிப்புக்குள்ளாவதால் மாசு கட்டுப்பாடு வாரியம் இதற்கு தடைபோட வேண்டும் என்று அறிவித்துள்ளது. ஆனால், ‘இரசாயன விநாயகன்’கள் வேறு மாநிலங்களிலிருந்து இறக்குமதியாகிக் கொண்டிருக்கின்றன. இவற்றை கடலில் கரைக்கும்போது, தடுத்து நிறுத்தவோ, அல்லது கண்காணிக்கவோ ஆட்சியாளர்கள் ஏன் நடவடிக்கை எடுப்பதில்லை?
- 10 அடி உயரத்துக்கு மேல் விநாயகன் சிலைகளை வைத்து, போக்குவரத்துக்கு – பொது மக்களுக்கு இடையூறு செய்யக் கூடாது; ஒலி பெருக்கிகளை பயன்படுத்துவதில் கட்டுப்பாடு வேண்டும் என்று சென்னை உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது. ஆனால், அத்தனையும் மீறப்படுகின்றன. ஆட்சியும், காவல் துறையும் வேடிக்கைப் பார்க்கிறது.
- மக்களிடையே பகுத்தறிவையும், சமூக ஒற்றுமையையும், சமத்துவத்தையும் பரப்பிடும் பெரியார் இயக்கங்களின் நிகழ்ச்சிகள், பரப்புரைகளுக்கு தமிழ்நாட்டில் அனுமதி மறுக்கப்படுகிறது. அரசியல் சட்டம் வழங்கியுள்ள அடிப்படை உரிமையையே ஆட்சியும் காவல்துறையும் பறிக்கிறது.
- செப்டம்பர் 17 தமிழர்களின் தன்மானத் தலைவர் பெரியார் பிறந்த நாள். இவ்வாண்டு அதே நாளில் வரலாறு ஏதுமற்ற அறிவுக்கு ஒவ்வொத புராணங்களின் கற்பனைக் கடவுளான ‘விநாயகனும்’ இந்த ஆண்டில் ‘பிறக்கிறான்’! தமிழக அரசு, பெரியார் பிறந்த நாள் விழாக்களுக்கு தடைபோட்டுவிட்டு, ‘விநாயகன் பிறந்த நாளை’ மட்டும் கொண்டாட வேண்டும் என்கிறது. ஆனால் பெரியார்–அண்ணா படங்களை இவர்கள் கொடிகளிலும் சுவரொட்டிகளிலும் மட்டும் பயன்படுத்திக் கொள்வார்கள்! வெட்கம்; அவமானம்!

மதவெறி தலைதூக்காத நிலம் தமிழகம்!

மதவேறுபாடுகளைக் கடந்து தோழமையும் உறவும் பூத்துக் குலுங்கிய மண் தமிழ்நாடு!

மத உணர்வுகளை வெறியூட்டும் களமாக்கி, அதிகாரத்தின் அரவணைப்போடு சமூகத்தை மீண்டும் அடிமைப்படுத்த ஒடுக்கப்பட்ட மக்களிடம் பார்ப்பனர்கள் சூழ்ச்சி வலை விரிக்கிறார்கள்.

விநாயக அரசியல் ஊர்வலங்களின் பின்னணியில் இந்த சதி அடங்கியிருக்கிறது.

“மத ஓடத்திலேறிய மாந்தரே – பலி
பீடத்திலே சாய்ந்தீரே”

என்ற புரட்சிக் கவிஞரின் பாடல் வரிகளை நினைவு கூர்ந்து,

**பெரியாரின் கைத்தடியை மதவெறிக்கு எதிரான குறியீடாக்கி–**

**மக்கள் ஒற்றுமை காக்க, மதவெறி அரசியல் சக்திகளை வீழ்த்த அணி திரளுவோம்!**

**வாரீர்! வாரீர்!**

## ஜாதி வெறிக்கு எதிராக மயிலாடுதுறையில் முற்றுகைப் போராட்டம்: தோழர்கள் கைது



நாகை மாவட்டம் குத்தாலம், வழுவூர் ஊராட்சி இந்து அறநிலையத்துறைக்கு சொந்தமான வீரட்டேஸ்வரர் கோயில் குளத்தில் நீர் எடுத்து கோயில் விழா நடத்த முயன்ற திருநாள்கொண்டச்சேரி தலித் மக்களின் வழிபாட்டு உரிமைக்கு எதிராக செயல்படும் சில ஆதிக்கசாதியினர் மீது சட்ட நடவடிக்கையும், தலித் மக்களின் வாழ்வுரிமையை பாதுகாக்கவும், அனைத்து மக்கள் ஒற்றுமையை வலியுறுத்தியும் 14.9.2015 அன்று மயிலாடுதுறை சார் ஆட்சியர் அலுவலகம் முற்றுகைப் போராட்டம் சாதி மறுப்பு இயக்கங்களின் கூட்டமைப்பு சார்பாக நடைபெற்றது. முற்றுகைப் போராட்டத்திற்கு திராவிடர் விடுதலைக் கழக மாவட்ட செயலாளர் மகேஷ் தலைமை வகித்தார். மாவட்ட தலைவர் மகாலிங்கம், மாவட்ட அமைப்பாளர் அன்பரசன், தலைமை செயற்குழு உறுப்பினர் இளையராஜா, நாஞ்சில் சங்கர், தமிழ் வேலன், இராஜராஜன், நடராஜ், ரமேஷ், இயற்கை, ஜாகிர், விஜயராகவன், உள்ளிட்ட தோழர்கள் கலந்து கொண்டு கைதாயினர். மேலும் விடுதலை சிறுத்தைகள் கட்சி, விடுதலை தமிழ் புலிகள், தமிழர் உரிமை இயக்கம், சி.பி.ஐ.எம்.எல். விடுதலை, ஏகாதிபத்திய எதிர்ப்பு இயக்கம், பகுஜன் சமாஜ் கட்சி உள்ளிட்ட கட்சியினர் கலந்து கொண்டு 85 பேர் கைது செய்யபட்டு மாலையில் விடுவிக்கபட்டனர்.

## சேஷசமுத்திரத்தில் ஜாதி வெறியைக் கண்டித்து கழகம் ஆர்ப்பாட்டம்

சேஷசமுத்திரம் கிராமத்தில் தலித் மக்கள் மீது நடந்த ஜாதிவெறித் தாக்குதலை கண்டித்து திராவிடர் விடுதலைக் கழகத்தின் விழுப்புரம் மாவட்ட சார்பில் 24.08.2014 மாலை 3.00 மணிக்கு சங்கராபுரம் பேருந்து நிலையத்தில் விழுப்புரம் மாவட்ட செயலாளர் நாவாப் பிள்ளை தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது ஆர்ப்பாட்டத்தில் ஜாதி வெறியர்களுக்கு எதிரான முழக்கங்களை எழுப்பியும் காவல்துறையை நடவடிக்கை எடுக்கவும் வலியுறுத்தப்பட்டது. சென்னை மாவட்ட தோழர்கள் இரா. உமாபதி (தென் சென்னை மாவட்ட செயலாளர்), சுகுமாறன் (தென்சென்னை துணை செயலாளர்), காஞ்சி மாவட்ட செயலாளர் தினேசுகுமார், காஞ்சி மாவட்ட தலைவர் செங்குட்டுவன், கடலூர் மாவட்ட செயலாளர் பாரதிதாசன், விழுப்புரம் வெங்கடேசன், அய்யனார், இராமர், தமிழ் முருகன் உள்ளிட்ட 50க்கும் அதிகமான தோழர்களை காவல்துறை கைது செய்து மாலை விடுவித்தது.

## ஏற்காடு கிராமப் பகுதியில் கழகப் பரப்புரைக்கு உற்சாக வரவேற்பு



ஏற்காடு ஒன்றிய கழகத்தின் சார்பாக எங்கள் தலைமுறைக்கு சாதி வேண்டாம்; வேலை வேண்டும் என்கின்ற பரப்புரை பயணம், ஏற்காட்டின் கிராமப் பகுதியான செம்மனத்தம் மற்றும் நாகலூரில் நடைபெற்றது. முதல் நிகழ்வு காலை 11 மணிக்கு அப்பகுதியின் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் கிளைச் செயலாளர் ராஜா தலைமையில் தொடங்கியது. பிரச்சாரத்தின் நோக்கம் குறித்து மா. தேவதாஸ், பெருமாள் ஆகியோர் விளக்கிப் பேசினர். அந்த கிராமத்திற்கு வியாபாரம் செய்ய வந்திருந்த 60 வயதுடைய முதியவர் ஒருவர் நாம் இதுவரை கேட்டிராத பார்ப்பன எதிர்ப்புப் பாடல் ஒன்றை பாடி அனைவரையும் சிலிர்க்க வைத்தார். அவரைத் தொடர்ந்து ஆத்தூர் மகேந்திரனின், ‘மந்திரமல்ல தந்திரமே’ நிகழ்வு சிறப்பாக நடைபெற்றது.

இரண்டாம் நிகழ்வாக, நாகலூர் என்ற கிராமத்தில், அப்பகுதியைச் சேர்ந்த கழகத் தோழர் சந்தோஷ் தலைமையில் பரப்புரை சிறப்பாக நடைபெற்றது. அப்பகுதியிலுள்ள சுய உதவிக் குழுவின் சுபம் அடார்னஸை சேர்ந்த நண்பர்கள் கழகத் தோழர்களைப் பாராட்டி இனிப்பு வழங்கியும், மின்சாரம் தந்தும் உதவினர். ஏற்காட்டில் முதன்முறையாக நான்கு கடைகளே உள்ள கிராமப் பகுதியில் துண்டேந்தி வசூல் செய்ததில் ரூ.980 வசூலானது, கழகத் தோழர்களுக்கு மிகுந்த உற்சாகத்தைத் தந்தது.

## மேட்டூர் படிப்பகத்தில் பெரியாரியல் பயிலரங்கம்

13-4-2015 சனி மாலை 6-30 மணியளவில், மேட்டூர் ஆர்.எஸ். டி.கே.ஆர் நினைவுப் படிப்பகத்தில், தமிழ்நாடு மாணவர் கழகத்தின் சார்பாக, பெரியாரியல் பயிலரங்கம் ஏற்பாடு செய்து நடத்தப்பட்டது. கழகத் தலைமைக் குழு உறுப்பினர் அ.சக்திவேல் அறிமுக உரை நிகழ்த்தினார். தொடர்ந்து, “ஆரியர் பண்பாட்டுக்கு எதிரான திராவிடர் பண்பாட்டுப் புரட்சி” எனும் தலைப்பில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி ஒன்றரை மணி நேரம் கருத்துரை வழங்கினார்.

மனித இனத்தின் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல் எனும் வளர்நிலை, வீரத் தலைமை மறைந்து அறிவு (சூழ்ச்சி)த் தலைமைத் தோற்றம், அரசுருவாக்கம், தத்துவம் என்ற பேரால் தலைவனைப் பாராட்டுவது, புகழ்வது, தலைவ (அரச)னுக்கு எதிராக மக்கள் எழாமல் பார்த்துக் கொள்ளுதல், அதற்கு மிகவும் பொருத்தமான ஆரிய, மனுசாஸ்திர தத்துவங்கள், அவை உருவாக்கிய, நியாயப்படுத்திக் காப்பாற்றிய படிநிலை சமுதாய அமைப்பு - அதை வீழ்த்தி சமத்துவம் சமுதாயம் காண உழைத்த பெரியாரின் பண்பாட்டுப் புரட்சி ஆகியவற்றை விளக்கினார். இறுதியில் தோழர்கள் எழுப்பிய அய்யங்களுக்கு கழகத் தலைவர் விளக்கம் அளித்தார். பயிலரங்கை முன்னின்று ஏற்பாடு செய்த மாணவத் தோழர் விவேக்கின் நன்றியுரையோடு இரவு 8-30க்கு பயிலரங்கம் நிறைவுபெற்றது.

# வடக்கு மாகாண சட்டமன்ற – தமிழக சட்டமன்றத் தீர்மானங்களை முழுமையாக ஏற்போம்

# பன்னாட்டு விசாரணை மட்டுமே வேண்டும்

## கழகம் உள்ளிட்ட இயக்கங்களின் கூட்டறிக்கை

திராவிடர் விடுதலைக் கழகம், தமிழ்த் தேசிய விடுதலை இயக்கம், சி.பி.எம்.எல். மக்கள் விடுதலை, இளந்தமிழகம் இயக்கம் ஆகியவற்றின் கூட்டறிக்கை

துருக்கி நாட்டின் கோஸ் தீவில் போட்றம் கடற்கரையில் மூன்று வயதுச் சிறுவன் அயலன் சடலமாக ஒதுங்கிய நிழற்படம் 'கரையொதுங்கிய மானிடம்' என்ற தலைப்புடன் இணையத்தில் உலவி ஐரோப்பியர்களை உலுக்கிப் போட்டுள்ளது. அம்மக்கள் குற்றஞ்சுமந்த இதயத்துடன் ஏதிலியர் களை இருகை நீட்டி வரவேற்று அரவணைக்க முன்வந்துள்ளனர்.

ஐநா. மனித உரிமை மன்றக் கூட்டத் தொடர் வரும் செப்டம்பர் 14 முதல் அக்டோபர் 2 முடிய நடக்கவுள்ளது. கடந்த ஆண்டு மார்ச்சு மாதம் நடைபெற்ற அமர்வில் நடைமுறையில் பன்னாட்டுப் புலனாய்வுக்கு வழி செய்யும்படியான கூறுகளுடன் ஒரு தீர்மானம் அம்மன்றத்தில் நிறைவேறியது. அப்போதைய மனித உரிமை மன்ற ஆணையர் நவநீதம் பிள்ளை புலனாய்வுக் குழுவையும், மார்த்தி அத்திசாரி (பின்லாந்து), சில்லிய காட்ரிட் (நியூ சிலாந்து), அசுமா சகாங்கீர் (பாகிஸ்தான்) ஆகிய மூவரடங்கிய அறிவுரைஞர் குழுவையும் அமைத்தார்.

புலனாய்வுக் குழுவினரோ வல்லுநர்களோ இலங்கைக்குள் நுழையக்கூட அனுமதிக்க மறுத்து விட்டது சிறிலங்கா அரசு. இலங்கையிலும் தமிழகத்திலும் புலம்பெயர் நாடுகளிலும் இருக்கும் ஈழத் தமிழர்கள் சான்றுகளையும் சான்றியங்களையும் அனுப்பி வைத்தனர். இவ்வாண்டு மார்ச்சு மாதமே புலனாய்வு குழுவின் அறிக்கை மன்றத்தில் முன் வைக்கப்பட்டிருக்க வேண்டும். ஆனால், இலங்கையில் நிகழ்ந்த ஆட்சி மாற்றத்தைக் காரணங் காட்டி அறிக்கை முன்வைப்பை செப்டம்பர் அமர்வுக்குப் பிற்போட்டார் இப்போதைய மனித உரிமை மன்ற ஆணையர் சையது அல் உசைன்.

இலங்கையில் இவ்வாண்டு சனவரியில் நடந்த அதிபர் தேர்தலில் மகிந்த இராசபட்சே தோற்று, மைத்ரிபால சிறிசேனா வென்று அரசுத் தலைவராகப் பொறுப்பேற்றார். ஆகஸ்டில் நடந்த நாடாளுமன்றத் தேர்தலிலும் இராசபட்சேயின் முயற்சி தோற்று இரணில் விக்கிரமசிங்கா பிரதமராகப் பொறுப் பேற்றுள்ளார். மேற்குலக நாடுகளும் இந்தியாவும் விரும்பி வரவேற்றுள்ள இந்த 'ஆட்சி மாற்றம்' இலங்கை தொடர்பான பொறுப்புக்கூறல் செயல் வழியைக் கிடப்பில் போடுவதற்கு மட்டுமே பயன்பட்டு வருகிறது.

இன அழிப்புப் போரின் இறுதி நாட்களில் பாதுகாப்பு அமைச்சர் பொறுப்பில் இருந்தவர்தான் இப்போதைய அதிபர் மைத்ரி. இனச் சிக்கலுக்கு இராணுவத் தீர்வு காண்பதற்கு அரசியல் அடித்தளம் அமைத்துக் கொடுத்தவர் இரணில்.

சிங்களப் பேரினவாத சூழ்ச்சியின் அரசியல் முகம் இரணில், இராணுவ முகம் இராசபட்சே. இப்போதுங்கூட இராசபட்சே ஈட்டிய இராணுவ வெற்றியை அரசியல் வெற்றியாக மாற்றும் வேலையைத்தான் இரணில் செய்து கொண் டிருக்கிறார்.

மைத்ரியின் 'நல்லாட்சி'யில்தான் இன அழிப்புப் போரின் படைத் தலைவர் சரத் பொன்சேகாவிற்கு 'ஃபீல்டு மார்சல்' பட்டம் சூட்டப்பட்டது. 57ஆம் படைப் பிரிவின் தளபதி தலைமைத் தளபதியாக மகுடம் சூட்டப்பெற்றார்.

மார்ச்சு மாதம் வரவிருந்த அறிக்கையை செப்டம்பருக்குப் பிற்போட்டதுதான் புதிய ஆட்சியின் முக்கியச் சாதனை என்று மைத்ரியே மார்தட்டிக் கொண்டார். அரசியல் கைதிகள் விடுதலை, காணாமற் போனவர்களைக் கண்டு பிடித்தல், அவர்களைக் காணாமலடித்தவர்களைத் தண்டித்தல், தமிழர் தாயகத்திலிருந்து சிங்களப் படை நீக்கம், சிங்களக் குடியேற்றத்தை நிறுத்துதல், பறித்துக் கொண்ட தமிழர் காணிகளை மீட்டளித்தல் உள்ளிட்ட தமிழர்தம் கோரிக்கைகள் உயிர்ப்புடன் நீடிக்கின்றன.

அண்மையில் இலங்கை சென்ற அமெரிக்காவின் மத்திய மற்றும் தெற்கு ஆசியாவுக்கான அயலுறவுத் துணையமைச்சர் நிஷா பிஸ்வால் இலங்கை அரசுத் தரப்பையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரையும் தனித் தனியாகச் சந்தித்துப் பேசினார். இதையடுத்துக் கொழும்பில் செய்தியாளர்களிடம் பேசிய பிஸ்வால், ஐநா மனித உரிமை மன்றத்தின் வரவிருக்கும் கூட்டத் தொடரில் அமெரிக்கா இலங்கைக்கு ஆதரவாகத் தீர்மானம் கொண்டுவரும் என்று அறிவித்தார். புதிய ஆட்சியாளர்களுக்கு மேலும் கால அவகாசம் தந்து இலங்கையில் நல்லிணக்கத்தை வளர்க்க அது உதவும் என்றார். அமெரிக்க வல்லரசு நம்ப வைத்துக் கழுத்தறுத்து விட்டது என்பதே உலகத் தமிழர் களிடமும் மனித உரிமை ஆற்றல்களிடமும் ஏற்பட்டுள்ள வலியுணர்வு.

செப்டம்பர் 11 இரட்டைக் கோபுரத் தாக்குதலில் 3,000 பேர் உயிரிழப்புக்குப் பழிவாங்க ஆப்கனில் புகுந்து பல்லாயிரம் மக்களைக் கொன்று குவித்ததோடு, பாகிஸ்தானின் நில, வான் எல்லையை மீறி ஊடுருவிச் சென்று ஒசாமா பின்லாடனைக் கொன்றது அமெரிக்கா. 'நீதி செய்யப்பட்டு விட்டது' என்றார் அதிபர் ஒபாமா. ஆனால் ஒன்றரை இலட்சம் தமிழர்கள் படுகொலை செய்யப்பட்டதற்கு நீதி செய்யும் கவலையே இல்லாமல், தன் புவிசார் அரசியல் நலனை மட்டுமே முன்னிறுத்தி நாப்புரண்டு பேசுகிறது அமெரிக்க வல்லாதிக்க அரசு.

கடந்த கால வரலாற்றைப் புரட்டிப் பார்த்தால் அமெரிக்க நிலைப்பாடு புதிதோ வியப்புக்குரியதோ அன்று. இதுதான் அமெரிக்கா! இதுதான் வல்லாதிக்கம்! இதுதான் புவிசார் அரசியல்! ஏற்றத் தாழ்வான உலக ஒழுங்கின் இயங்கு விதிகள் இப்படித்தான் உள்ளன. அமெரிக்க நிலைப்பாட்டை மக்களிடையே தோலுரித்துக் காட்டுவோம்! நீதியும் நிகர்மையும் கோலோச்சும்படியான புதிய உலக ஒழுங்கிற்காகப் போராடுவோம்!

ஐநா மனித உரிமை மன்றப் புலனாய்வு அறிக்கையின் அடிப்படையில் சிறிலங்காவின் மனித உரிமை மீறல்களையும் சர்வதேசச் சட்ட மீறல்களையும் ஆராய்ந்து நீதி வழங்கப் பன்னாட்டுப் பொறிமுறை தேவை என்று முதல்வர் விக்னேஸ்வரன் முன்மொழிந்த தீர்மானம் இலங்கை வட மாகாண சபையில் நிறைவேறியுள்ளது.

புலம்பெயர் நாடுகளிலும் தமிழீழத் தாயகத்திலும் பல்வேறு இயக்கங்கள், குடியியல் சமூக அமைப்புகள் நீதிவழங்கலுக்குப் பன்னாட்டுப் பொறிமுறை வேண்டு மெனக் கேட்டு நடத்தி வரும் கையெழுத்து இயக்கத்தையும் ஈருருளிப் பயணம் உள்ளிட்ட பல்வேறு முயற்சிகளையும் போராட்டங்களையும் பாராட்டி வரவேற்கிறோம்.

இந்திய அரசைப் பொறுத்த வரை, இலங்கையில் நடந்தது இனப் படுகொலை என்றோ, பன்னாட்டுப் புலனாய்வு தேவை என்றோ நிலையெடுத்ததில்லை. கடந்த காங்கிரசு அரசு ஐநா மனித உரிமை மன்றத்தில் பன்னாட்டுப் புலனாய்வை எதிர்த்தது. இலங்கைக்கு எதிரான முந்தைய தீர்மானங்களையும் எதிர்த்திருக்க வேண்டும் என்றது ஆர்எஸ்எஸ். இலங்கையுடனான அரசியல், பொருளியல் உறவுகளைத் துண்டித்துக் கொள்ளுமாறு தமிழக சட்டப் பேரவை இயற்றிய தீர்மானங்களை இந்திய அரசு கிஞ்சிற்றும் மதிக்கவில்லை. இனக் கொலைக்குத் துணை போன இந்தியா, கடந்த ஆறு ஆண்டுகளாகப் பன்னாட்டு அரங்கில் சிறிலங்காவைப் பாதுகாத்து வருகிறது.

மார்ச்சு மாத அய்நா. கூட்டத் தொடரின் போது இந்தியப் பிரதமர் மோடி இலங்கை சென்றார். இப்போது செப்டம்பர் அமர்வின் போது இலங்கைப் பிரதமர் இரணில் இந்தியா வருகிறார். அண்மையில் இந்தியா இலங்கைக்கு மூன்று கப்பல்கள் கொடுத்துள்ளது. இரணில் பயணத்தின் போது ஊநுஞுயு என்றொரு பொருளியல் ஒப்பந்தம் கையெழுத்தாகலாம் என்று செய்திகள் வருகின்றன. ஆக, இராணுவ வகையிலும் பொருளியல் வகையிலும் சிங்கள அரசின் பக்கம் நிற்கிறது இந்தியா.

இந்திய - சிங்களக் கூட்டை முறித்து இந்திய அரசின் நிலைப்பாட்டில் ஒரு மாற்றம் கொண்டுவரச் செய்வதுதான் ஈழ மக்களுக்கு நீதி கிட்டச் செய்யும் போராட்டத்தில் தமிழக மக்களின் அடுத்தக் கட்டப் பாய்ச்சலாக இருக்க முடியும். அமெரிக்காவோ இந்தியாவோ வேறு ஏதேனும் உலக நாடோ பன்னாட்டுத் தீர்ப்பாயம் அல்லது அது போன்ற தொரு பொறிமுறையை முன்வைத்தால் தமிழ் மக்கள் ஏற் பார்கள், இதற்குக் குறைவான வேறு எதையும் ஏற்க மாட்டார்கள்.

தமிழக சட்டப் பேரவையும் வட மாகாண சபையும் இயற்றியுள்ள தீர்மானங்களைத் தமிழினத்தின் ஒருமித்த உணர்வுக் குரலாக ஏற்று, ஈழத்தில் இனக்கொலை நடந்த உண்மையை ஒப்புக்கொண்டு, அதற்குரிய நீதி கிடைக்கச் செய்யுமாறு இந்திய அரசை வலியுறுத்திப் போராடுவோம்! நம் கோரிக்கைகள்:

இந்திய அரசே!

1) தமிழீழ மக்களுக்கு நீதி வழங்குவதற்கான முழுமையான பன்னாட்டுப் பொறிமுறையை ஏற்படுத்துமாறு ஐநா மனித உரிமை மன்றத்தில் தீர்மானம் கொண்டுவருக!

2) இலங்கை அரசே அமைக்கும் உள்நாட்டுப் பொறி முறையோ, பன்னாட்டு கலந்த கலப்புப் பொறி முறையோ போதுமென்று அமெரிக்காவோ வேறு நாடு அல்லது நாடுகளோ தீர்மானம் கொண்டுவந்தால் எதிர்த்து வாக்களித்திடுக! அத்தீர்மானத்தை தோற்கடிக்க ஆவண செய்க!

3) இலங்கை அரசுடன் அரசியல், பொருளியல், பண்பாட்டு உறவுகளைத் துண்டித்திடுக!

என்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி, இளந்தமிழகம் இயக்க ஒருங்கிணைப்பாளா தி. செந்தில், மக்கள் விடுதலை இயக்கத்தைச் சார்ந்த பாலன், தமிழ்த் தேசிய விடுதலை இயக்க பொதுச் செயலாளர் தியாகு ஆகியோர் கூட்டாக விடுத்துள்ள அறிக்கையில் வலியுறுத்தியுள்ளனர்.

## பெரியாருக்கெல்லாம் பெரியார்

### சுயமரியாதை சுடரொளி டேப் தங்கராசன்

*மறைந்த சுயமரியாதை சுடரொளி அணைக்கரை டேப் ஆ. தங்கராசன் அவர்கள் திராவிடர் கழக ஊர்வலங்களில் இராவணன் வேடமணிந்து, பெரியாரை வாழ்த்தி எழுப்பிய முழக்கங்கள் இவை. கழகத் தோழர்கள் ஊர்வலங்களில் பயன்படுத்தும் நோக்கத்தோடு இதை வெளியிடுகிறோம்.*

பார்ப்பன இன இறுமாப்பையும் அடக்கியே
பார்த்தவ ரெமது பெரியார் - வாழ்க

மடமையை நீக்கிநீ மனிதனாய் வாழதன்
மானங்கொள் என்ற பெரியார் - வாழ்க

மனிதனாய்ப் பிறந்துநீ மனிதர்க்கே உதவிடும்
மார்க்கங்கா ணென்ற பெரியார் - வாழ்க

அடிமையைப் போக்கிபொது உடமையைக் காணநீ
ஆசைப்படு என்ற பெரியார் - வாழ்க

நரகமும் மோட்சமும் தரகர்கள் பொய்க்கதை
நம்பாதே என்ற பெரியார் - வாழ்க

உடமையைப் பாழாக்கிக் கடவுளைக் காணநீ
ஓடாதே என்ற பெரியார் - வாழ்க

பெண்ணின விடுதலைக் கெண்ணியே உழைத்திட்ட
பெரியாருக்கெல்லாம் பெரியார் - வாழ்க

பிள்ளைபெறு மெந்திரம் இல்லையடா பெண்ணினம்
பெருமையளி என்ற பெரியார் - வாழ்க

விதவையெனுங் கொடுமையினால் பதறுதடா
பெண்ணினம்
விடுதலைசெய் என்ற பெரியார் - வாழ்க

திருமணம் என்பது இருமணம் ஒன்றிடும்
செயலடா என்ற பெரியார் - வாழ்க

பொன்னிலும் பவுனிலும் மின்னிடும் நகைசெய்து
பூட்டாதே என்ற பெரியார் - வாழ்க

பூட்டுவ தாலேழை வீட்டில்வாழ் பெண்களும்
புலம்புது என்ற பெரியார் - வாழ்க

குக்கலும் நக்கிடும் குழவிக்கல் உருளைக்குக்
கோயிலேன் என்ற பெரியார் - வாழ்க

கூப்பிகை நின்றுநீ பார்ப்பான அழைத்ததைக்
கொடுப்பதேன் என்ற பெரியார் - வாழ்க

பக்குவம் பெற்றநல் மக்களைக் காணநீ
பள்ளிவை என்ற பெரியார் - வாழ்க

பள்ளிகள் வைத்தால்தான் பிள்ளைகள் பெற்றிடும்
பகுத்தறிவு என்ற பெரியார் - வாழ்க

சக்கிலி மாடனும் சங்கிலிக் கருப்பனும்
சாமியா என்ற பெரியார் - வாழ்க

சாமியும் சாதியும் சண்டைக்கு வித்ததை
தகர்த்திடு என்ற பெரியார் - வாழ்க

சிக்கனம் அதைவிட முக்கியம் எதிர்கால
சேமிப்பு என்ற பெரியார் - வாழ்க

நடமாடும் தெய்வத்தின் இடர்பா டொழிப்பதே
நன்மார்க்க
மென்ற பெரியார் - வாழ்க.

DATE OF PUBLICATION 17.09.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# பெரியார் வலியுறுத்திய சுயமரியாதை தேசியம்

***தமிழ்த் தேசியம் பேசுவோரிடமிருந்து பெரியார் பேசிய சுயமரியாதைக்கான தேசியம் வேறுபடும் புள்ளிகளை விரிவாக அலசுகிறது இக்கட்டுரை.***

பெரியார் தோன்றி 137 ஆண்டுகள் ஆகிவிட்டன. இன்று இந்தியாவில் பா.ச.க.வின் ஆட்சி நடந்து கொண்டிருக்கிறது. முன்னெப்போதும் இல்லாத அளவில் இந்தியாவில் வாழும் மக்களின் பெருத்த ஆதரவோடு பா.ச.க தெரிவு செய்யப்பட்டுள்ளது. காங்கிரசு கடைபிடித்த அதே பொருளியல் கொள்கைகளைத்தான் பா.ச.க முழு வீச்சில் நடைமுறைப் படுத்துகிறது. இன்னொரு புறம் பா.ச.க.வால் முன்னெடுக்கப்படும் பார்ப்பனியப் பண்பாட்டு ஆதிக்கமென்பது அன்றாடச் செய்தியாகிக் கொண்டிருக்கிறது. இத்தகைய சூழலில் சமூக மாற்றத்திற்காக உழைப்போருக்கு பெரியாரின் கருத்துகள் மாபெரும் கருவியாக இருக்கிறதென்பதை எவரும் மறுப்பதற்கில்லை.

2009 இல் ஈழப் போரில் ஏற்பட்ட தமிழினப் பேரழிவும் அதை தடுக்க முடியாமல் தமிழ்நாடு கையறு நிலையில் இருந்ததும் அமுங்கிக் கிடந்த தமிழ்த் தேசிய உணர்வை உசுப்பிவிட்டது. புதிய புதிய இயக்கங்கள், பேரியக்கங்கள், கட்சிகள் பிறப்பெடுத்துள்ளன. இளந்தலைமுறையொன்றும் அரசியல் களத்திற்குள் புகுந்துள்ளது. எனவே, முன்னெப்போதும் இல்லாத அளவில் தமிழ்த் தேசியக் கருத்தியல் விவாதிக்கப்படுகிறது. அந்த விவாதங்களில் பெரியாரைத் தமிழ்த்தேசியத்திற்கு எதிரானவராகக் காட்சிப்படுத்தும் போக்கு பெருகி வருகிறது.

கன்னடத்தைத் தாய்மொழியாக கொண்ட பெரியார் வழிகாட்டி தானே ஒழிய தலைவர் அல்ல என்பாரும் உளர். சேர , சோழ, பாண்டியர்கள் தமிழ் மன்னர்கள். பல்லவர், நாயக்க மன்னர்கள் வேற்று மொழி மன்னர்கள். வரலாறு முழுவதும் தமிழினம் வேற்று மொழியினரின் ஆளுகையின் கீழ் இருந்து வந்திருக்கிறது. தமிழருக்கு முதல் எதிரி திராவிடம் தாம்; திராவிடத்தை வீழ்த்த வேண்டும்” என்றும் பெரியாரை எதிரியாகவே முன் வைப்பாரும் உளர். பெரியாரின் மொழிக் கொள்கையைக் காட்டி தமிழுக்கும், தமிழருக்கும் எதிரானவர் என்று சொல்வாரும் உளர்.

இவற்றை மறுத்து பல்வேறு முனைகளில் விவாதங்கள் நடந்து கொண்டிருக்கின்றன. இந்த கருத்து மோதல்கள் நமக்கு புதிதல்ல. வரலாற்றில் வாழ்ந்து மறைந்த ஆளுமைகளின் பங்களிப்பைத் திறனாய்வுக்கு உட்படுத்துவது வளர்ச்சிக்கே துணை செய்யும். ஆனால் வரலாற்றை அறிவியல் வழிநின்று புரிந்து கொள்வதில் இருந்துதான் அத்திறனாய்வு வளர்ச்சிக்குத் துணை செய்வதாக அமையக் கூடும்.

### தேசியம் என்ற கருத்தாக்கத்தின் தோற்றம்

பெரியார் எப்படி புரிந்து கொள்ளப்பட்டிருக்கிறார் என்பதைவிட தமிழ்த் தேசியம் என்னவாகப் புரிந்து கொள்ளப்பட்டுள்ளது என்பதில் தான் சிக்கலின் மையமே இருக்கிறது. பன்னெடுங் காலமாக ஒரு மொழி பேசும் மக்கள், ஒரு மதத்தைப் பின்பற்றும் மக்கள் ஒரு தொகுதியாக வாழ்ந்து கொண்டிருந்தாலும் மனித குலத்தில் தேசியம் என்ற கருத்தாக்கத்தின் வயது சற்றேறக் குறைய 350 ஆண்டுகள் தாம். உலகின் முதலாவது தேசிய விடுதலைப் போராட்டம் அமெரிக்க விடுதலை போராட்டமாகும். அது பதினெட்டாம் நூற்றாண்டாகும். மன்னர் ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்து மக்கள் யுகத்தைத் தொடங்கியது தேசியம். மன்னர்களின் கைகளில் இருந்த அதிகாரம் மக்களின் கைகளுக்கு மாறுவதுதான் மக்களாட்சி. ஒரு தனி மனிதனோ அல்லது ஒரு குழுவோ மட்டும் ஒரு ஒட்டுமொத்த சமூகத்தின் வாழ்வைத் தீர்மானிப்பதற்கு மாறாக பெருந்திரள் மக்கள் அரசியல் முடிவுகளில் பங்கேற்கும் ஏற்பாடே சனநாயகம் ஆகும். அந்த சனநாயகத்தோடு ஒட்டிப் பிறந்ததே தேசியம் ஆகும். தேசியமும் சனநாயகமும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களாக காட்சி அளிக்கின்றன. மன்னர்கள் மட்டுமின்றி மன்னனின் கொடி, குடி, ஆலவட்டம், மன்னர் கால அரசியல் கலாச்சாரம் உள்ளிட்ட அனைத்தையும் வரலாற்றின் குப்பைத் தொட்டிக்குள் புதைத்தது தேசியம் .

பத்தொன்பது - இருபதாம் நூற்றாண்டில் காலனியாதிக்கத்திற்கு எதிராக சனநாயகத்தை சுமந்து செல்லும் வாகனமாக தேசியம் இருந்தது. இன்று, காலனியாதிக்கம் போட்டுத் தந்த சனநாயகமற்ற ஆட்சிப்புலத்தில் சிக்குண்டிருக்கும் மக்களை சனநாயகத்திற்கு இட்டுச் செல்லும் பாத்திரத்தை வகித்துக் கொண்டிருக்கிறது தேசியம். தேசியம் என்னும் கருத்தாக்கத்தை 21 ஆம் நூற்றாண்டிற்கு பொருத்தமான வகையில் வளர்த்தெடுக்கும் பொறுப்பு நம் எல்லோருக்கும் உண்டு.

### சாதிய சமூகத்தில் தேசியம்

இந்தப் பின்னணியில் நமது சொந்த தேசத்தின் வரலாற்றை உற்று நோக்குவோம். இங்கு சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் வடிவம் தான் சாதி. சாதி அடுக்குகளாக நம் சமூகம் அமைந்திருக்கிறது. தமிழ் மொழி தொன்மையானது. தமிழ் மக்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக இங்கு வாழ்கின்றனர். ஆனால் தமிழ்த் தேசியம் என்பது புதிது. இங்கு சாதி நாயகத்திற்கு மாறாக சனநாயகத்தைப் பிரசவிப்பதே தமிழ்த்தேசியத்தின் பணியாகும். ஒடுக்குமுறை இருக்கும் போது அதற்கு எதிரானப் போராட்டமும் இருக்கும். சாதி ஆதிக்கத்தின் வயதும் அதற்கெதிரானப் போராட்டத்தின் வயதும் ஒன்றாகத் தான் இருக்க முடியும். ஆயினும் ஆங்கிலேயரின் ஆளுகையின் கீழ் தமிழ்நாடு வந்தபின் நடந்த பொருளியல் மாற்றங்கள்தான் சாதிக் கட்டமைப்பைக் கலகலக்க வைக்கக் கூடிய புறநிலையை ஏற்படுத்தியது. இந்தச் சூழலில் சாதியக் கட்டமைப்பை அடித்து நொறுக்குவதற்கான வரலாற்றின் கருவியாகப் பெரியார் விளங்கினார்.

### சுயமரியாதை இயக்கமும் தமிழ்த் தேசியமும்

தேசியம் என்பது முதலில் சுயம் பற்றியது. தேசியம் எல்லாவிடத்திலும் சுயம் பற்றிக் கூறும். சுயகௌரவம் (சுயமரியாதை), சுயாட்சி, சுயநிர்ணய உரிமை என தனி மனித உரிமையில் தொடங்கி இனம், நாடு என்ற கூட்டுச்சுயம் வரை அது விரிந்து பரந்த ஒன்றாகிறது. பெரியார் 1926 ஆம் ஆண்டு சுயமரியாதை இயக்கத்தைத் தோற்றுவித்தார். சுயமரியாதை என்பது எதிரியின் பொருட்டான அடிமைத் தனத்தையும் நிராகரிக்கிறது; தன் பொருட்டான அடிமைப் புத்தியையும், அடிமை மனப்பாங்கினையும் நிராகரிக்கிறது. பெரியார் சூத்திரர், பஞ்சமர் என்று நம்மீது சுமத்தப்பட்டிருந்த சாதி இழிவைக் கேள்விக்குள்ளாக்கினார். ஒருவன் அல்லது ஒருத்தி தனது மதிப்பைத் தானே உணர்வது, தன்னைத்தானே மதிப்பது, தன்மதிப்பை, தன்மானத்தைத் தானே நிலைநாட்டுவது, தன்னிடமிருக்கும் எசமானத்துவ விசுவாசத்திற்கு தானே கொள்ளிவைப்பது, கூனிக் குருகி நிற்கும் பல்லக்குத் தூக்கி மனப்பாங்கை அடித்து நொறுக்குவது, பிறப்பால் அனைவரும் சமம் என்ற மன நிமிர்வைப் பெறுவது, எல்லாவிதமான அடிமைத்தனத்திற்கு எதிராகவும் போராடுவது எனச் சுயமரியாதை தனது சிறகை விரிக்கின்றது. இது தனி மனிதனிலிருந்து தேசிய இனம் வரையிலான உலகளாவிய அனைத்திற்கும் பொருந்தும்.

சுயமரியாதை இயக்கத்தைத் தொடங்கி முதலில் சாதி இழிவைக் கேள்விக்குள்ளாக்கி, அதில் இந்து மதத்திற்கு இருக்கும் பங்கை அம்பலப்படுத்தி, கடவுளை மறுத்து, பெண்களின் உரிமைக்காக போர் முழக்கம் செய்த பெரியார், மக்களின் சனநாயகத்திற்காகப் பாடுபட்டதோடு நிற்காமல் தேசத்தின் சனநாயகத்திற்காகவும் பேசத் தொடங்கினார். அதன் வெளிப்பாடுதான் ‘தமிழ்நாடு தமிழருக்கே’ என்று பெரியார் முன் வைத்த முழக்கம். பெரியார் ஒரு நடைமுறைவாதி என்பதால் தனி மனித உரிமையில் தொடங்கிப் படிப்படியாக தேசத்தின் சனநாயகம் வரை வந்து நின்றார். பெரியாரின் அரசியலை உருத்திரட்டினால் அதில் சாதி ஒழிப்பு, பெண் விடுதலை, தனித் தமிழ்நாடு ஆகிய கோரிக்கைகள் இருக்கின்றன.

### தேசியவாதமா? இனக்குழுமவாதமா?

தேசியவாதத்திற்கும் இனக்குழுமவாதத்திற்கும் இடையே உள்ள வேறுபாட்டை அறியாதது தான் இன்று பெரும் சிக்கலாக இருக்கிறது. ஓர் இனக்குழுவானது ஏற்றத் தாழ்வுகளையும், அடிமைத்தனங்களையும், எசமானத்துவங்களையும் தன்னகத்தே பேணிக் கொண்டு இனக்குழு அடையாளத்தின் அடிப்படையில் இன்னொரு இனக்குழுவோடு போட்டியிடும், பொருதும், பெருமை பேசும். ஆனால் தேசிய இன உணர்வு அப்படியானது அல்ல. அது தன்னகத்தே இருக்கும் ஏற்றத் தாழ்வுகளையும், ஆண்டான், அடிமை நிலைகளையும் களைந்து அரசியல் பண்பாட்டு அளவில் சமத்துவத்தைக் கோரி நிற்கும். தேசிய அடையாளம் என்பது இங்கு போட்டியல்ல. ஒரு யதார்த்தம் என்பதும், அந்த அடையாளம் ஒரு தற்காப்பு வரம்பு என்பதும் தான். அதுவும் ஓர் இயற்கையே தவிர வீம்பல்ல. அடுத்து முற்றிலும் அந்தத் தேசிய வரம்புக்குள் வாழும் மக்களது சமூக மாற்றம் பற்றியது. இது இனக்குழும வாதத்தில் கிடையாது. எனவே, **தமிழ்த் தேசியம் என்று சொல்லிக் கொண்டு முன்வைக்கப்படும் கருத்துகள் அனைத்தும் தமிழ்த் தேசியம் ஆகிவிடாது. அது தேசிய வாதமா? அல்லது இனக்குழும வாதமா? என்பதை மேற்படி அளவுகோலில் இருந்து பகுப்பாய்வு செய்ய வேண்டும்.**

### சனநாயகத் தமிழ்த் தேசியம்

இந்திய தேசியம் கீதைக்குள்ளும் வேதங்களுக்குள்ளும் தேடப்பட்டு அரச தேசியமாக வளர்ந்து நிற்கிறது. மகாவம்சத்திற்குள் தேடப்பட்ட சிங்கள தேசியம் பேரினவாதமாக முற்றி நிற்கிறது. விதிவிலக்கின்றி ஆசியாவில் பிறப்பெடுத்த அனைத்து தேசியத்திற்குள்ளும் இனக்குழு உணர்வு இருந்து கொண்டுதான் இருக்கிறது. ஆயினும் இந்தியத் துணைக் கண்ட அளவில் தோன்றிய தேசிய இயக்கங்களுக்குள் அதிகபட்ச தேசியத் தன்மை கொண்ட இயக்கம் சுயமரியாதை இயக்கம் தான். இதில் மட்டும் தான் தேசியத்திற்கு உரித்தான சமூக கண்ணோட்டம் இருந்தது. அடிமட்டத்திலிருந்து இது தேசிய இயக்கம் பற்றி சிந்தித்தது. அப்பாசறையில் இருந்த வந்த பெரும் கட்சிகள் அதன் கொள்கைகளில் இருந்து தடம் மாறிச் சென்றன என்றாலும் நமது வரலாற்றின் வழித்தடத்தில் பதிந்து இருக்கும் சனநாயகத் தமிழ்த்தேசியக் கூறுகளை வளர்த்தெடுத்து பாதை சமைக்க வேண்டிய பொறுப்பு நமது தோள்களில் இருக்கிறது!

**(‘இளம் தமிழகம்’ இயக்கம் வெளியிட்டுள்ள கட்டுரை இது.)**

“புரட்சிப் பெரியார் முழக்கம்”
**ஆண்டுக்கட்டணம்**
**ரூ.200**
தொடர்புக்கு: ஆசிரியர், 29, பத்திரிகையாளர் குடியிருப்பு, திருவள்ளுவர் நகர், திருவான்மியூர், சென்னை-41. ✆9941613535

**50 சதவீத சலுகையில் ‘தமிழ்க் குடிஅரசு’ வெளியீடுகள்**

தந்தை பெரியாரின் 137ஆவது பிறந்தநாளை முன்னிட்டு வாசகர்களின் நலன் கருதி, தமிழ்க் குடிஅரசுப் பதிப்பகத்தின் நூல்கள் அனைத்தும் தந்தை பெரியார் பிறந்த மாதமான 2015 செப்டம்பர் மாதம் முழுவதும் 50% சலுகை விலையில் கொடுக்கப்படும். அஞ்சல் செலவு தனி. மேலும் விவரங்களுக்கு கீழ்க்கண்ட முகவரியைத் தொடர்பு கொள்ளவும்.

**– வாலாஜா வல்லவன்**

**தமிழ்க் குடிஅரசுப் பதிப்பகம்**
எண்.4/11, சி.என் .கே.சந்து, சேப்பாக்கம், சென்னை-5.
பேசி : 9444321902, 72992 14554 மின்னஞ்சல் : vallavankuil@gmail.com

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 18th September 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN

புரட்சிப்
# பெரியார் முழக்கம்
திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு
www.dvkperiyar.com
ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2046 | செப்டம்பர் 24, 2015 | புரட்சி 14 | முழக்கம் 37 | விலை: ரூ.3.00

## பன்னாட்டு விசாரணையை நோக்கி...

இலங்கையின் இறுதிக்கட்டப் போரில் போர்க் குற்றங்கள்; மாந்த நேயத்துக்கு எதிரான குற்றங்கள் நடந்ததை உறுதி செய்துவிட்டது அய்.நா. மனித உரிமை ஆணையம். மனித உரிமைக் குழு தலைவர் சையத் உசேன் செப்.16ஆம் தேதி வெளியிட்ட அறிக்கையில் சட்டவிரோத கொலைகள், பாலியல் வன்முறைகள், போரில்லா பகுதி என்று அறிவித்த பகுதியில் மக்களை குறி வைத்து நடத்திய தாக்குதல், காணாமல் போனவர்கள், கைது செய்யப் பட்டவர்கள் மீதான சித்திரவதைகள் போன்ற கொடும் குற்றங்கள் நிகழ்ந்ததை உறுதி செய்கிறது அறிக்கை. “இந்த கொடூரமான குற்றங்கள் திட்டமிடப்பட்டவை. இவைகள் நடத்தப்பட்ட ஒரே மாதிரியான முறைகளைப் பார்க்கும்போது, இந்தக் குற்றங்கள் ஆங்காங்கே தனித்தனியாக நடந்ததாகக் கருத முடியாது. அரச அமைப்பே நடத்திய குற்றங்கள் (all point towards **system Crimes**) என்று அறிக்கையில் இடம்பெற்றுள்ள வாசகங்கள் மிகவும் முக்கியத்துவம் நிறைந்தது. சிங்களர்கள், சர்வதேச சட்ட நிபுணர்கள் கொண்ட கலப்பு நீதிமன்ற (hybrid courts) விசாரணை ஒன்றை நடத்த வேண்டும் என்று – மனித உரிமைக் குழு கூறியிருக்கிறது. சர்வதேச விசாரணை மட்டுமே சரியான நீதி வழங்க முடியும் என்று தமிழக முதல்வர் ஜெயலலிதா செப்.16 அன்று சட்டமன்றத்தில் வரவேற்கத்தக்க தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளார்.

ஈழத்தில் வடக்கு மாகாண முதல்வர் விக்னேசு வரன் அவர்களும் சட்டமன்றத்தில் சர்வதேச விசாரணை வேண்டும் என்ற தீர்மானத்தைக் கொண்டு வந்து நிறைவேற்றியிருக்கிறார்.

இலங்கையின் நீதித் துறை இத்தகைய விசாரணைக்குத் தகுதியானது அல்ல என்று மனித உரிமை ஆணையம் கூறினாலும் அமெரிக்காவோ, சீனாவோ, இந்தியாவோ, இலங்கையின் ஆதரவாளர்களாகவே செயல்படும்போது, கலப்பு நீதிமன்ற விசாரணைகூட அய்.நா.வில் தீர்மானமாக வருமா? என்ற கேள்விக்குறியே எழுந்து நிற்கிறது. திட்டமிட்ட இனப்படு கொலைகளை இலங்கை நடத்தியபோது, இந்தியா உள்ளிட்ட உலக நாடுகள் முழுதுமே இலங்கைக்கு ஆதரவாகவே நின்றன. உலகில் வேறு எந்த ஒரு நாட்டுக்கும் போர்க் குற்றத்தின்போது இப்படி ஒருமித்த ஆதரவு இருந்ததே இல்லை என்று ஆய்வாளர்கள் கூறுகிறார்கள். போர் முடிவுற்றதாக அறிவிக்கப்பட்ட பிறகும், “மனித உரிமை மீறல்கள்” மீது எந்த நடவடிக்கையும் எடுக்காமல் தமிழர்களுக்கு அரசியல் ரீதியான தீர்வுக்கும் முயற்சிக்காமல், இலங்கை அரசு காட்டிய அலட்சியம் தான், இன்று சர்வதேசத்தை இலங்கையை நோக்கி கேள்வி கேட்கும் கட்டாயத்துக்கு தள்ளியிருக்கிறது.

தமிழர்களுக்கு இறுதியான நிலையான தீர்வு ‘தமிழ் ஈழம்’ ஒன்றுதான் என்பது கல்லில் செதுக்கப்பட்ட உண்மையாக இருந்தாலும், சர்வதேச அரங்குகளில் அதை முன் நகர்த்து வதற்கான அரசியல் ரீதியான செயல் உத்திகள் – காலத்தின் தேவையாகியிருக்கிறது.

இலங்கை சிங்களப் பேரினவாதம். தமிழர்களுக்கான நீதியை ஒரு போதும் வழங்காது என்பதை இலங்கை அரசின் செயல்பாடுகளைக் கொண்டே அம்பலப்படுத்த வேண்டிய நிலையில் தான் சர்வதேசத் தமிழினம் இன்று உரிமையற்ற இனமாக இருக்கிறது. இந்தப் பின்னணியில் ஒற்றை முழக்கங்களை மட்டுமே நாம் எழுப்பிக் கொண் டிருப்பதைவிட நடைமுறை ரீதியாக சர்வதேச அரசியல் நகர்வுகள் குறித்த ஆழமான விவாதங் களுக்கும் அதற்கான செயல் உத்திகளுக்கும் நாம் தயாராக வேண்டும். இல்லையேல் மீண்டும் தனிமைப்படக்கூடிய ஆபத்துகளையே சந்திக்க வேண்டியிருக்கும்.

சர்வதேச விசாரணைக்கு வலு சேர்ப்பதற்கு வடக்கு மாகாண சட்டமன்றம், தமிழக சட்டமன்றம் நிறைவேற்றியுள்ள தீர்மானங்கள் தமிழர்களுக்குக் கிடைத்த அரசியல் ஆயுதங்கள். இவற்றை முன்னெடுத்துச் செல்வதற்கும், அதற்கான ‘இடைக்கால’ நகர்வுகள் குறித்தும் விவாதங்களும் புரிதல்களும் அவசிய தேவையாகியிருக்கிறது!

## ‘விநாயகனை’ அரசியலாக்காதே!

# பெரியார் கைத்தடியுடன் திரண்டனர் கழகத் தோழர்கள்





விநாயகனை மதவெறி அரசியலுக்குப் பயன்படுத்துவதைக் கண்டித்து, சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழகம் சார்பில் பெரியார் கைத்தடி ஊர்வலம் எழுச்சியுடன் நடைபெற்றது. செப்டம்பர் 20ஆம் தேதி நகரின் பல்வேறு பகுதிகளிலிருந்து வாகனங்களில் பிள்ளையார் சிலைகளை ஏற்றி கடலில் கரைக்க காவல்துறை அனுமதித்த அதே நாளில் கழகம் பெரியார் கைத்தடி ஊர்வலத்தை நடத்தியது. பிற்பகல் 3 மணியளவில் கழகத் தோழர்கள் கழகக் கொடிகள் - பெரியார் கைத்தடி - விநாயகனை அரசியலாக்கும் முயற்சிகளுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும் பதாகைகளுடன் ஏராளமாகக் கூடினர். கழக அமைப்புச் செயலாளர் ஈரோடு இரத்தினசாமி தலைமையில் தலைமைக் கழகச் செயலாளர் தபசி. குமரன் முன்னிலையில் நடந்த இந்த கண்டன ஊர்வலத்தில் கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் பங்கேற்றனர்.

“மதத்தின் பெயரால் அரசியல் நடத்தாதே; வீட்டில் வணங்கும் பிள்ளையாரை ‘ரோட்டுக்கு’ இழுத்து வந்து அரசியலாக்காதே; இரசாயனக் கலவையை கடலில் கரைத்து மாசு படுத்தாதே; மதவெறியைத் தூண்டிவிடும் இராம.கோபாலனை கைதுசெய்” என்ற முழக்கங்கள் விண்ணைப் பிளந்தன. 200க்கும் மேற்பட்ட தோழர்களும் பெண்களும் பங்கேற்றனர். குழந்தைகள், பெரியார் முகமூடி அணிந்து கலந்து கொண்டது அனைவரையும் கவர்ந்தது. தோழர் கொளத்தூர் மணி, கைத்தடி ஊர்வலத்தின் நோக்கத்தை செய்தியாளர்களிடம் விளக்கினார்.

“சரக்கு வாகனங்களில் சட்டவிரோதமாக அதிக எண்ணிக்கையில் ஆட்களை ஏற்றி வருகிறார்கள். போக்குவரத்து விதிகளை மீறி ஊர்வலங்கள் வருகின்றன. நீதிமன்றம் உத்தரவிட்டுள்ள உயரத்துக்கு அதிகமாக விநாயகன் சிலைகள் கொண்டு வரப்படுகின்றன. மாசு கட்டுப்பாடு வாரியத்தின் தடையை மீறி இரசாயனத்தில் செய்யப்பட்ட விநாயகன் சிலைகள் கடலில் கரைக்கப்படுகின்றன. மதவாத அரசியலுக்கு ஆதரவாக சட்ட மீறல்களும் விதி மீறல்களும் அனுமதிக்கப்படுகிறது. காவல்துறை எந்த கெடுபிடியையும் காட்டுவது இல்லை. மாறாக பெரியாரின் பகுத்தறிவு கருத்துகளை பரப்பிடும் கூட்டங்கள், மூடநம்பிக்கை ஒழிப்புப் பேரணிகள் என்றால் காவல்துறை அனுமதி மறுக்கிறது. அரசியல் சட்டம் வழங்கியுள்ள கருத்துரிமையை பறிக்கிறது.

வீட்டிற்குள் நடத்தினால்தான் பிள்ளையார் வழிபாட்டை மத நம்பிக்கை என்று கூறலாம். அந்த மூடநம்பிக்கைகளில் எங்களுக்கு உடன்பாடு இல்லை என்றாலும், மதத்தின் உரிமைகளுக்கு நாங்கள் தடை கேட்கவில்லை. மாறாக, மத உணர்வை அரசியலாக்கி, இஸ்லாமியர்களுக்கு எதிரான பகையை வளர்க்கவும், இந்து மதத்தை அரசியலாக்கவுமே நடத்தப்படும் இந்த விநாயகன் ஊர்வலத்தை காவல்துறை அனுமதிக்கக் கூடாது என்பதே எங்கள் கோரிக்கை. மிலாது நபி ஊர்வலத்தை சென்னையில் இஸ்லாமியர்கள் அமைதியாக நடத்தி வந்தார்கள். அதற்கு போட்டியாக மதவெறி சக்திகள் விநாயகன் ஊர்வலத்தைத் தொடங்கின. இரண்டு ஊர்வலங்களையும் நிறுத்துமாறு தமிழக அரசு விடுத்த வேண்டுகோளை ஏற்று, இஸ்லாமியர்கள் மிலாது நபி ஊர்வலத்தை நிறுத்தி விட்டார்கள். ஆனால், இந்து முன்னணி போன்ற மதவாத அரசியல் அமைப்புகள், விநாயகன் ஊர்வலத்தைத் தொடர்ந்து நடத்தி வருவதோடு மட்டுமல்லாமல், திருவல்லிக்கேணி மசூதி வழியாகவே செல்வோம் என்று ஒவ்வொரு ஆண்டும் மிரட்டுகிறார்கள். இதைச் சுட்டிக்காட்டி கண்டிப்பதற்கே ஒவ்வொரு ஆண்டும் பெரியார் கைத்தடி ஊர்வலங்களை நடத்தி எதிர்ப்பு தெரிவித்து வருகிறோம்” என்று விளக்கினார்.

200 தோழர்கள் கைது செய்யப்பட்டு, இராயப்பேட்டை பி.எஸ்.என்.எல். ஊழியர் குடியிருப்பு வளாகத்திலுள்ள சமூகக் கூடத்தில் வைக்கப்பட்டனர். மண்டபத்தில் தோழர்கள்
( 4ஆம் பக்கம்)

**தலையங்கம்**

## விஷ்ணுபிரியாவின் விபரீத மரணம்!

நாமக்கல் மாவட்டத்தை கடந்த சில மாதங்களாகவே ஜாதிவெறி சக்திகள் தங்களின் மேலாதிக்கத்துக்குள் கொண்டு வருவதற்கு மேற்கொண்ட முயற்சிகள் இப்போது ஒரு காவல்துறை பெண் அதிகாரி விஷ்ணுபிரியா தற்கொலை வரை சென்றிருக்கிறது. தலித் சமூகத்திலிருந்து அதுவும் ஒரு பெண் டி.எஸ்.பி. தேர்வு பெற்று காவல்துறையில் பணியாற்ற வருகிறார் என்றால், அவ்வளவு எளிதான ஒன்று அல்ல. அவர், எத்தனையோ தடைகளை தனது கடும் முயற்சியாலும் திறமையாலும் வென்று, கடந்து வந்திருப்பார் என்பதில் இருவித கருத்துக்கு இடமிருக்க முடியாது.

கோகுல்ராஜ் என்ற தலித் பொறியியல் பட்டதாரியும், உள்ளூர் ஆதிக்க ஜாதியைச் சார்ந்த பெண்ணும் சந்தித்தார்கள் என்ற 'குற்ற'த்துக்காக ஜாதி வெறி கும்பல் ஒன்று கோகுல் ராஜ் தலையை துண்டித்து, தண்டவாளத்தில் வீசியது. இதில் தேடப்படும் முதன்மை குற்றவாளியான கொங்கு வேளாளர் சமூகத்தைச் சார்ந்த யுவராஜ் என்ற நபர், இதுவரை கைது செய்யப்படவில்லை. இந்த நபர் தலைமறைவாக இருந்து கொண்டு 'வாட்ஸ்அப்' வழியாக காவல்துறைக்கு சவால்விட்டு ஜாதி வெறியைத் தூண்டி, இதுவரை மூன்று முறை பேசியிருக்கிறார். 'புரட்சிப் பெரியார் முழக்கம்' மட்டும் அந்த வெறிப் பேச்சுகளை பதிவு செய்தது.

கடந்த ஆகஸ்டு 17ஆம் தேதி இந்தக் கொலை வழக்கில் தேடப்படும் குற்றவாளியான யுவராஜை கைது செய்யக் கோரி, திராவிடர் விடுதலைக் கழகத் தலைவர் கொளத்தூர் மணி தலைமையில், திருச்செங்கோடு காவல் நிலையம் எதிரே கண்டன ஆர்ப்பாட்டம் நடத்தி 200 தோழர்கள் கைதானார்கள். ஆர்ப்பாட்டத்தில் பேசிய கழகத் தலைவர் கொளத்தூர் மணி, காவல்துறையிடம் இரண்டு கோரிக்கைகளை முன் வைத்தார். குற்றவியல் நடைமுறை சட்டத்தின் 82ஆவது பிரிவின்படி யுவராஜை தேடப்படும் குற்றவாளியாக அறிவிக்க வேண்டும் என்பது ஒன்று. அதே சட்டத்தின் 83ஆவது பிரிவின்படி அவரது சொத்துக்களை முடக்கி, உடனடியாக சரணடைய வைக்க வேண்டும் என்பது இரண்டாவது கோரிக்கை. கோகுல்ராஜ் கொலை வழக்கின் விசாரணை அதிகாரியாக செயல்பட்ட விஷ்ணுபிரியா, கழகம் வலியுறுத்தியவாறு, குற்றவியல் நடைமுறைச் சட்டம் 83ஆவது பிரிவின் கீழ் யுவராஜ் சொத்துக்கள் பறிமுதல் செய்யப்படும் என்ற அறிவிப்பை யுவராஜின் வீட்டிலும் அவர் நடத்தி வரும் ஜாதி சங்கக் கட்டிடத்திலும் ஒட்டினார். காவல்துறைகளில் அந்தந்த மாவட்டத்தின் ஆதிக்க ஜாதி யினரையே நியமனம் செய்வதை தவிர்க்க வேண்டும் என்று திராவிடர் விடுதலைக் கழகம் தொடர்ந்து வலியுறுத்தி வந்த நிலையில், திருச்செங்கோட்டில் இந்த வழக்கில் மெத்தனமாக செயல்பட்ட ஒரு காவல்துறை ஆய்வாளர் மதுவிலக்குப் பிரிவுக்கு மாற்றப்பட்டு, அந்த இடத்தில் தலித் அதிகாரி ஒருவர் நியமிக்கப்பட்டார். கிடப்பில் போடப்பட்ட கோகுல்ராஜ் கொலை வழக்கு, கழகம் களமிறங்கிப் போராடியதைத் தொடர்ந்து, புதிய திசையில் வேகமெடுக்கத் தொடங்கிய நிலையில், அதிகாரி விஷ்ணுபிரியா, இப்படி ஒரு விபரீத முடிவுக்கு தள்ளப் பட்டிருப்பது பல்வேறு சந்தேகங்களை எழுப்பியிருக்கிறது.

விஷ்ணுபிரியாவின் நெருங்கிய தோழியும், இராமநாதபுரம் மாவட்டம் கீழக்கரை, காவல்துறை துணை கண்காணிப்பாளரான மகேஸ்வரி, "கோகுல்ராஜ் கொலை வழக்கில், உயர் அதிகாரிகள் கொடுத்த அழுத்தமே விஷ்ணுபிரியா உயிரிழப்புக்குக் காரணம்" என்று விளைவுகளைப் பற்றி அஞ்சாமல், துணிவுடன் மனம் திறந்து பேசியிருக்கிறார். சி.பி.சி.அய்.டி. துறைக்கு விஷ்ணுபிரியா 'தற்கொலை' வழக்கும், கோகுல்ராஜ் கொலை வழக்கும் மாற்றப்பட்டிருக்கிறது என்பதிலிருந்தே மாவட்ட காவல்துறை நிர்வாகம் நேர்மையாக செயல்படவில்லை என்பது ஒப்புக்கொள்ளப்பட்டிருக்கிறது சி.பி.சி.அய்.டி. விசாரணை நேர்மையுடன் நடக்குமா என்பதற்கு உறுதி ஏதும் கிடையாது. ஆனாலும் தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் ஜாதி வெறி சக்திகள் தலைதூக்கி, தமிழ்நாட்டை 'பார்ப்பனிய வேட்டைக் காடாக்க' நடத்தி வரும் வன்முறை கொலை வெறியாட்டங்களை ஒடுக்க காவல்துறை கடுமையான நடவடிக்கைகளை எடுப்பதில்லை என்பதும் நேர்மையாக செயல்பட விரும்பும் அதிகாரிகள், 'ஜாதி-மத' உணர்வுகளுக்குள் மூழ்கிக் கிடக்கும் காவல்துறை அமைப்புக்குள் தங்களைப் பொருத்திக் கொள்ள முடியாமல் தவிக்கிறார்கள் என்பதும் வெட்டவெளிச்சமாகி வருகிறது. அரசியல் கட்சிகள்கூட இதை அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக்கு எதிரான ஒரு அரசியல் பிரச்சினையாக மட்டும் சித்தரிக்கின்றனவே தவிர, ஆழமாகப் புரையோடி நிற்கும் ஜாதி வெறியைப் பார்க்க மறுத்து முகத்தைத் திருப்பிக் கொள்கிறார்கள்.

இதே திருச்செங்கோட்டில் பெருமாள் முருகன் என்ற படைப்பாளி, தனது படைப்பிலக்கியத்துக்கு ஜாதி வெறியர்கள் தந்த மிரட்டலால் ஊருக்கும் இலக்கியத்துக்குமே முழுக்குப் போட்டு வெளியேறி விட்டார். "பெருமாள் முருகன் என்ற இலக்கியவாதி இறந்து விட்டான்" என்று அறிவிக்கும் நிலைக்கு அவர் தள்ளப்பட்டார். அதே ஜாதி வெறிக்கு, தலித் சமூகத்திலிருந்து காவல்துறை அதிகாரியாக உயர்ந்த விஷ்ணுபிரியா, தனது உயிரை அர்ப்பணித்துவிட்டார். இளவரசன்களாக, கோகுல்ராஜ்களாக, விஷ்ணுபிரியாக்களாக – ஜாதிவெறி இன்னும் எத்தனை உயிர்களைப் பலி கேட்கப் போகிறதோ? நெஞ்சம் பதறுகிறது. தமிழ்நாட்டிலே இப்படி ஒரு அவல நிலை தொடர்வதற்கு முற்றுப்புள்ளி வைக்க வேண்டாமா? ஜாதிவெறியை எதிர்ப்பதாகக் கூறிக் கொள்ளும் கட்சிகளையும் இயக்கங்களையும் நோக்கி திராவிடர் விடுதலைக் கழகம் இந்தக் கேள்வியை கவலையுடன் முன் வைக்கிறது.

# பெரியார்: சாதி ஒழிப்புச் சூரியன்!

***செப். 17 – பெரியார் பிறந்த நாளில் விடுதலை இராசேந்திரன் எழுதி 'தமிழ் இந்து' வெளியிட்ட கட்டுரை.***

நாட்டின் விடுதலைக்கான போராட்டம். மக்களின் சமத்துவத்தையும் உறுதி செய்ய வேண்டும்; அதை காங்கிரஸ் கொள்கையாக அறிவிக்க வேண்டும் என்று காங்கிரசுக்குள்ளே போராடினார் பெரியார். கல்வி, வேலை வாய்ப்பு, அரசியல் துறைகளில் மிகவும் ஒடுக்கப்பட்டுக் கிடந்த அனைத்துப் பிரிவினருக்கும் சம வாய்ப்பை உறுதி செய்வதுதான் அவரது வகுப்புவாரி பிரதிநிதித்துவக் கொள்கை. காங்கிரஸ் அதை மறுத்தபோது பெரியார் 1925இல் வெளியேறினார். 90 ஆண்டுகளுக்குப் பின் 2015 செப்டம்பரில் சோனியா தலைமையிலான காங்கிரஸ் கட்சி - 50 சதவீத கட்சிப் பதவிகளை தாழ்த்தப்பட்ட பிற்படுத்தப்பட்ட சிறுபான்மை மக்களுக்கு உறுதி செய்வதாக தீர்மானித்திருப்பது - வரலாற்றின் திருப்பம் மட்டுமல்ல. பெரியார், காலத்தே எவ்வளவு முந்தியிருந்தார் என்பதையும் காட்டுகிறது.

சமத்துவத்துக்கும் சுயமரியாதைக்கும் எதிரான ஜாதி அமைப்புதான், அவரது முதன்மையான இலக்கு. ஜாதியமைப்புக்கு கருத்தியலை வழங்கி, அதை சாஸ்திரம், மதம், கடவுள் பெயரால் நியாயப்படுத்தப்பட்டபோது, பெரியாரின் ஜாதி எதிர்ப்பு, சாஸ்திரம் மதத்தையும் கேள்விக் குள்ளாக்கியது. மதம் - கடவுளால் உருவாக்கப் பட்டது என்று பதில் வந்தபோது கடவுளையும் அதன் மீதான நம்பிக்கைகளுக்கும் எதிராக பெரியார் கிளர்ந்து எழுந்தார். பெரியாரை கடவுள் - மத - சாஸ்திர எதிர்ப்புக்கு இழுத்துச் சென்றது அவரது ஜாதி எதிர்ப்புக் கொள்கைதான் !



பெரியார்: சாதி ஒழிப்புச் சூரியன்!
சமத்துவத்துக்கும் சுயமரியாதைக்கும் எதிரான சாதி அமைப்புதான், பெரியாரின் முதன்மையான இலக்கு.
விடுதலை இராசேந்திரன்

'வளர்ச்சி நோக்கிய மானுடப் பற்று' என்பதைத் தவிர, தனக்கு வேறு எந்தப் பற்றும் கிடையாது என்று திட்டவட்டமாக பறைசாற்றிய அவர், சமூக சுயமரியாதைக்காக தனது சொந்த சுயமரியாதையை பலியிட்டுக் கொண்டார்.

"மற்றவர்களால் செய்ய முடியாததை என்னால் மட்டும் எப்படி செய்ய முடிகிறது என்றால், நான் உங்களிடமிருந்து எதையும் எதிர்பார்ப்பது இல்லை. உங்கள் பாராட்டு எனக்குத் தேவையில்லை" என்று கூறிய பெரியார், "தனி மனிதர்களைப் பெருமை படுத்தியதால், அவர்களுடைய தவறான கொள்கைகள் சமூகத்தில் செல்வாக்குப் பெற்று விடுகிறது. என்னுடைய காரியங்களுக்கு அப்படிப்பட்ட விபரீதப் பலன் ஏற்பட வேண்டாம் என்றே கருதுகிறேன். நான் தெய்வத் தன்மை பொருந்தியவனாகக் கருதப்பட்டால், என் வார்த்தையை ஆராய்ந்து பார்க்க மாட்டார்கள். நான் அயோக்கியன் என்று சொல்லப்பட்டால் என் வார்த்தைகள் மிகவும் ஜாக்கிரதையாகக் கவனிக்கப்படும்" என்றார். அதையும் கடந்து, "என்னை அறியாமலே நான் ஏதாவது மதிப்புப் பெற வேண்டுமென்று கருதி இருந்தாலும் நானே எனக்கு தீங்கு தேடிக் கொண்டவனாவேன்" என்று தன்னையும் புகழ் பொறிக்குள் சிக்கிக் கொள்ளாமல் சுயபரிசோதனைக்கு உட்படுத்திக் கொண்டார்.

'பற்றற்ற' - புகழ் மறுப்பு மனிதராக களமிறங்கிய அவரின் இலட்சியத்தை ஒரே வார்த்தையில் கூற வேண்டுமானால், 'மக்களுக்கிடையிலான சமத்துவம், சுயமரியாதை' !

ஒரு பக்கம் - ஜாதியக் கட்டமைப்பை நியாயப் படுத்துகிறவர்கள். மற்றொரு பக்கம் - ஜாதி அடிப்படையில் கல்வி, வேலைகளில் இன்னும் எத்தனை காலத்துக்கு இடஒதுக்கீடுகளை வழங்கு வது என்று கேட்கிறார்கள். இன்னும் எத்தனைக் காலத்துக்குத்தான் இந்த ஜாதி அமைப்பை கட்டிப் பிடித்துக் கொண்டிருக்க வேண்டும் என்று கேட்க இவர்கள் தயாராக இல்லை.

கடந்த 50 ஆண்டுகளாக இடஒதுக்கீடு கொள்கைகள் அமுல்படுத்தப்பட்டும், பட்டியல் இனப் பிரிவினரான தலித் மக்கள் - முதல் பிரிவு பதவிகளில் அவர்களுக்கான 15 சதவீத இடங்களைக்கூட இன்னும் முழுமையாக எட்டிப் பிடிக்கவில்லை. இதர பிற்படுத்தப்பட்ட பிரிவினருக்கு 27 சதவீத இடஒதுக்கீடு 1993 ஆம் ஆண்டு அமுலுக்கு வந்தாலும் முதல் பிரிவு பதவிகளில் 8 சதவீதத்தை மட்டுமே அவர்களால் நெருங்க முடிந்திருக்கிறது. 1.11.2011இல் நாடாளு மன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையின்படி பாரத ஸ்டேட் வங்கி, ரிசர்வ் வங்கி உள்ளிட்ட வங்கித் துறைகளில் 474 பொது மேலாளர்களில் பிற்படுத்தப்பட்ட பிரிவைச் சார்ந்த ஒருவர்கூட இல்லை.

இந்த உரிமைகளுக்கு எல்லாம் ஜாதி சங்கத் தலைவர்கள் இங்கே குரல் கொடுப்பதில்லை. ஆனால், அரசியல் இலாபங்களுக்கும் தலைமை அதிகாரத்துக்கும் ஜாதி வெறியூட்டி அணி திரட்டுகிறார்கள்.

ஜாதிக்கு என்று தனிக் குருதி இல்லை. எட்டு வகை இரத்தப் பிரிவுகளில் ஏதேனும் ஒன்றுதான் மருத்துவமனைகளில் சிகிச்சைப் பெறும் எந்த ஜாதியைச் சேர்ந்தவர்களுக்கும் செலுத்தப்படு கிறது. மூளைச் சாவு அடைந்தவர்களின் உடல் உறுப்புகள் ஜாதி பார்க்காமல் எந்த ஜாதியைச் சார்ந்தவருக்கும் பொருத்தப்படுகின்றன; ஜாதி அடையாளப் பெருமை பேசுகிற எவரும் சொந்த ஜாதிக்காரன் குருதி வேண்டும் என்றோ, சொந்த ஜாதிக்காரன் உடல் உறுப்பு வேண்டுமென்றோ கேட்கத் தயாராக இல்லை. இன்று ஜாதியம் மதம் சார்ந்து மட்டும் நிற்கவில்லை. அவ்வப்போது வந்து போகும் தேர்தல்களும் ஜாதிக்கு உயிரூட்டிக் கொண்டிருக்கின்றன. வாக்கு வங்கி அரசியலை நம்பி இருக்கும் பெரிய அரசியல் கட்சிகள், ஜாதிக்கு எதிராக வாய் திறப்பதே இல்லை. 'தலித் மக்கள் மீது நடத்தப்படும் தாக்குதல்கள் குறித்தும், பல அரசியல் கட்சிகள் மவுனம் சாதிப்பதையே பார்க்கிறோம்.

சமூகத்தில் - தீண்டாமை சட்டத்தில் மட்டுமே ஒழிக்கப்பட்டிருக்கிறது. ஆனால், மதத்தின் அடிப்படையில், அதே சட்டத்தால் இன்று வரை தீண்டாமை - 'பழக்க வழக்கங்கள்', 'ஆகம முறைகள்' என்ற அடிப்படையில் காப்பாற்றப்பட்டு வருகின்றன. அதன் காரணமாகத்தான் அனைத்து ஜாதியினரும் அர்ச்சகராகும் சட்டம் முடங்கிக் கிடக்கிறது.

ஜாதிக்கும் மதத்துக்கும் உள்ள நெருக்கமான உறவுகளை பெரியார் எடுத்துச் சொன்னபோது, 'மத விரோதி' என்று தூற்றப்பட்டார். இன்று என்ன நடக்கிறது ? ஜாதியமைப்புகளை மதவாத செயல் திட்டத்துக்குள் கொண்டு வரும் முயற்சிகள் தமிழகத்தில் தொடங்கிவிட்டன. ஜாதி-மத-மூட நம்பிக்கைகளுக்கு எதிராகப் பேசுகிற சிந்தனை யாளர்கள் மகாராஷ்டிராவிலும் கருநாடகத்திலும் சுட்டுக் கொல்லப்படும் அதிர்ச்சியான தகவல்கள் வந்து கொண்டிருக்கின்றன.

கருத்துகளில் சமரசமின்றி போராடிய பெரியார், கருத்து மாறுபாடுடைய தலைவர்களை மதித்தார். அவர்களுடன் கருத்து விவாதம் நடத்தினார். பொது வாழ்க்கையில் அவர் காட்டிய நேர்மையின் பண்புகளுக்கு எத்தனையோ சான்றுகளைக் கூறலாம். உதாரணத்திற்கு ஒன்று: பெரியார் இராஜாஜியின் ஆலோசனைப் பெற்றுத்தான் மணியம்மையாரைத் திருமணம் செய்தார் என்று அவர் மீது கடும் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டது. அந்தக் குற்றச்சாட்டுகளுக்கு பெரியார் எந்தப் பதிலும் தரவில்லை. பெரியார் மறைவுக்குப் பிறகு அவரது ஆவணங்களைப் பரிசீலித்தபோது அதில் ராஜாஜி எழுதிய கடிதம் கிடைத்தது. மணியம்மையார் திருமணத்தில் தனக்கு உடன்பாடு இல்லை என்று ராஜாஜி எழுதிய அந்தக் கடிதத்தை பெரியார் தனக்கு எதிரான குற்றச்சாட்டுக்கு சான்றாதாரமாக பயன் படுத்தவில்லை. கடித உறையில், 'இது நமக்குள் இரகசியமானது' என்று ராஜாஜி எழுதியிருந்தார். கொள்கை எதிரிகளிடம்கூட அந்த நம்பகத் தன்மையை பெரியார் இறுதிவரை காப்பாற்றினார்.

பெரியாரின் ஒவ்வொரு கூட்டமும், "நான் சொல்வதை அப்படியே நம்பி விடாதீர்கள்; உங்களுக்கு சரி என்று பட்டால் ஏற்றுக் கொள்ளுங்கள்; இல்லையேல் தள்ளி விடுங்கள்" என்ற கருத்துச் சுதந்திரத்துடன்தான் அவரது உரை நிறைவடையும். ஜனநாயக வெளிக்குள்தான் அவரது பயணம் நடந்தது.

இன்று அதிகாரங்கள் துணையுடன் மதவாதமும், ஜாதித் தலைவர்கள் வழியாக ஜாதி வெறியும் கரம் கோர்த்து நிற்கும் சூழலில் பெரியார் பேசிய கொள்கைகளின் நியாயங்கள் மேலும் அதிகரித்திருக்கின்றன. ●

# கழகச் செயல்வீரர்கள் எடுத்த பெரியார் பிறந்த நாள் விழாக்கள்

***கழகச் செயல்வீரர்கள் உற்சாகத்துடன் களப்பணியாற்றி வருகிறார்கள். பல்வேறு பகுதிகளில் நடந்த பெரியார் பிறந்த நாள் விழாக்கள் குறித்த செய்தி.***



**சேலம் :** தந்தை பெரியாரின் 137 ஆவது பிறந்த தினத்தையொட்டி, 17-09-2015 அன்று, சேலம் மாவட்டம் இளம்பிள்ளை பகுதி திராவிடர் விடுதலைக் கழகம் சார்பாக இருசக்கர வாகனப் பேரணி சிறப்பாக நடைபெற்றது.

அன்று காலை 7-30 மணிக்கு இளம்பிள்ளை பேருந்து நிலையம் அருகே வைக்கப்பட்டிருந்த பெரியார் படத்திற்கு மாலை அணிவித்து, தோழர்கள் அனைவரும் தங்களின் வாகனங்களில் கழக கொடியினை கட்டி அலங்கரித்துக் கொண்டு, காடையாம்பட்டி நோக்கி புறப்பட்டனர்; அங்கு விடுதலை சிறுத்தைகள் அமைப்பு சார்பாக வரவேற்பு அளிக்கப்பட்டது. சுமார் 8-00 மணியளவில் அப்பகுதியில் பெரியார் படத்திற்கு மாலை அணிவித்து, பிறந்தநாள் கேக் வெட்டி, பொதுமக்களுக்கு இனிப்பு வழங்கப்பட்டது. தொடர்ந்து வாகனப் பேரணி திருமலைகிரி, சிவதாபுரம் வழியாக 9-00 மணியளவில் சேலம் மாநகரை அடைந்தது.

சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் அருகே உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்கும் நிகழ்ச்சியில் (மாவட்ட கழக ஏற்பாட்டில்) கலந்துகொண்டு, நான்கு ரோடு, புதிய பேருந்து நிலையம், ஐந்து ரோடு, கொல்லப்பட்டி வழியாக சுமார் 10-00 மணியளவில் இரும்பாலை சென்றடைந்தது வாகனப் பேரணி. அங்கு மூத்த பெரியார் தொண்டர் இரும்பாலை பழனிச்சாமி தோழர்களை வரவேற்று அனைவருக்கும் தேநீர் விருந்தளித்தார். அங்கு உள்ள கழக கொடிக் கம்பத்தில் கொடியேற்றி பேரணி புறப்பட்டது. கே.ஆர்.தோப்பூரில் தோழர் கண்ணன் அனைவரையும் வரவேற்று, பழச்சாறு வழங்கி, பேரணியில் தன்னையும் இணைத்துக் கொண்டார்.மேலும் நங்கவள்ளி பகுதியை சார்ந்த ஆறு தோழர்களும் இந்த ஊரில் வந்து பேரணியில் தங்களை இணைத்து கொண்டனர்.


இதன் பின்னர், வழக்கத்திற்கு மாறாக குக்கிராமங்கள் வழியே பயணம் தொடர்ந்தது. இருசக்கர வாகனங்கள் மட்டுமே செல்லக் கூடிய சிறு பாதைகள் வழியே, கருப்பு சீருடையில் கழகக் கொடிகளுடன், வரிசையாக வந்த பேரணியின் அழகைக் காண பெரும்பாலான வீடுகளில் இருந்து ஆவலோடு வெளியே வந்து பார்வையிட்டார்கள். “பகுத்தறிவு சவால்... பரிசு வெல்லுங்கள்” என்ற தலைப் பிலும், “பக்தர்கள் சிந்தனைக்கு” என்ற தலைப்பிலும் அச்சடிக்கப்பட்ட இரண்டா யிரம் துண்டறிக்கைகள் பொதுமக்களிடம் வினியோகிக்கப்பட்டது. மேல்காடு, மோட்டூர், சம்பளக்காடு வழியாக நல்லாக்கவுண்டனூர் சென்று கழகக் கொடியேற்றப்பட்டது. அடுத்து பெத்தாம்பட்டி, முருங்கப்பட்டி பகுதிகளில் கொடியேற்றி, இலகுவம்பட்டி, சித்தர்கோவில், நல்லனம்பட்டி, காடையாம்பட்டி, பாப்பாபட்டி வழியாக சென்று கறிக்கடை பேருந்து நிறுத்தத்தில் கொடியேற்றி, இராசிக்கவுண்டனூர், மெய்யனூர், அழகப்பம்பாளையம், வடுகப்பட்டி, ஏகாபுரம், கோழிப்பூர் வழியாக சென்று தப்பக்குட்டை பகுதியில் பிற்பகல் 3-00 மணிக்கு மதிய உணவை முடித்துக்கொண்டு, தாதிக்காரனூர், நடுவனேரி, பெருமாகவுண்டம் பட்டி, சந்தைப்பேட்டை, கத்தாளப்பேட்டை, சவுண்டமா கோவில் வீதி வழியாக இளம்பிள்ளை பேருந்து நிலையம் பேரணி வந்தடைந்தது.மாலை 4-30 மணியளவில் பேருந்து நிலையத்தில் உள்ள கழகக் கொடிக் கம்பத்தில் கொடியேற்றி பேரணி நிறைவு செய்யப்பட்டது. மன நிறைவோடும், மகிழ்ச்சியோடும் தோழர்கள் கலைந்து சென்றனர்.

‘உள்ளாட்சி தேர்தலில் வாக்கு சேகரிப்பவர்கள் கூட வராத எங்கள் பகுதிக்கு வந்து துண்டறிக்கை வழங்கியிருக்கிறீர்கள்’ ‘எங்கள் பகுதியில் ஒரு கூட்டம் நடத்துவீர்களா?’ ‘பெரியார் புத்தகங்கள் கிடைக்குமா?’ ‘சிறப்பான பணியை செய்திருக்கிறீர்கள்; குளிர்பானம் வாங்கி வருவதற்குள் சென்றுவிட்டீர்கள்’ ‘அடுத்த முறை எங்கள் ஊருக்கு வந்தால் அவசியம் எங்களை தொடர்பு கொள்ளவேண்டும்’ ‘நீங்கள் கொடுத்த துண்டறிக்கையை நகல் எடுத்து வினியோகித்தோம் - அசல் துண்டறிக்கை தொலைந்துவிட்டதால் தெளிவான அச்சு வரவில்லை; எங்களுக்கு மீண்டும் ஒரு துண்டறிக்கை வழங்குங்கள்’ என்று அன்று மாலை முதல், துண்டறிக்கையைப் பாராட்டி பொதுமக்கள் பலர் தொலைபேசி வழியாக கருத்து தெரிவித்துக் கொண்டிருக்கிறார்கள். இந்த வாகனப் பேரணியில் ஒரு மகிழுந்து உட்பட 19 வாகனங்களில், 35 தோழர்கள் கலந்துகொண்டனர்.

**ஈரோட்டில் :** ஈரோடு பன்னீர்செல்வம் பூங்காவில் உள்ள பெரியாரின் சிலைக்கு மாலை அணிவித்து கழகத்தினர் மரியாதை செலுத்தினர். பின்னர் பெரியாரின் நினைவு இல்லத்திற்குச் சென்று பெரியாரின் சிலைக்கு மாலை அணிவித்தனர். மரப்பாலத்தில் ரங்கம்பாளையம், சூரம்பட்டி வலசு, சத்யாநகர், மரவபாளையம் பகுதிகளில் கழகக் கொடியேற்றப்பட்டது. இறுதியாக சித்தோடு சமத்துவபுரத்தில் உள்ள பெரியார் சிலைக்கும், சித்தோடு நான்கு சாலையில் வைக்கப்பட்டிருந்த பெரியார் படத்திற்கும் மாலை அணிவிக்கப்பட்டது.



**கிருட்டிணகிரி :** கிருட்டிணகிரி மாவட்ட கழகத்தின் சார்பில் மாவட்டத் தலைவர் குமார் தலைமையில் பிசிஆர் பள்ளி தாளாளர் பிசிஆர். மனோகரன்



முன்னிலையில் மாவட்டச் செயலாளர் குமார், மாவட்ட அமைப்பாளர்கள் சிவ.மனோகர், ராஜேஷ் ஜெயராமன், கழகத் தோழர்கள், தோழமை அமைப்புகளைச் சார்ந்த தோழர்கள் மற்றும் பிரமுகர்கள் பெரியார் படத்துக்கு மாலை அணிவித்து, அனைவருக்கும் இனிப்பு வழங்கினர்.

**திருச்செங்கோட்டில் :** நாமக்கல் மாவட்டம் திருச்செங்கோட்டில் பெரியாரின் 137 வது பிறந்தநாளை முன்னிட்டு திருச்செங்கோடு பேருந்து நிலையம் அருகில்



உள்ள பெரியார் சிலைக்கு மாவட்ட செயலாளர் முசரவணன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. நகரின் இரு பகுதிகளில் கழக கொடியேற்றப்பட்டது, இந்நிகழ்வில் மாவட்ட அமைப்பாளர் வைரவேல், மாவட்ட பொருளாளர் முத்துப்பாண்டி, திருச்செங்கோடு நகர தலைவர் சோமசுந்தரம், நகர செயலாளர் நித்தியானந்தம், ஒன்றிய அமைப்பாளர் சதிசு, பள்ளிபாளையம் நகர தலைவர் பிரகாசு, மல்லை பெரியண்ணன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

**கடலூரில்:** விருத்தாசலம் பாலக்கரையிலிருந்து தோழர்கள் இருசக்கர வாகனத்தில் பேரணியாக சென்று. இரயில் நிலையம் முன்பு உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர்.பின்னர் அங்கிருந்து புறப்பட்டு நீதிமன்றம் முன்பு உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர் அங்கு முழக்கம் எழுப்பப்பட்டு சாதிக்கு எதிராக . உறுதிமொழியும் எடுத்துக்கொண்டனர். நிகழ்வில் திவிக மாவட்ட செயலாளர் பாரதிதாசன் தமிழ்நாடு மாணவர் கழக மாநில அமைப்பாளர் பாரி சிவா. மாணவர் கழக தோழர்கள் தினேஷ், பார்த்திபன், கழக தோழர்கள் மதி, மாவட்ட திவிக அமைப்பாளர் பாலமுருகன், வீரா மற்றும் சி.பி.எம்.எல் (மக்கள் விடுதலை) தோழர்களும், தோழர் ராமன் தலைமையில் கலந்து கொண்டனர்.

**திருப்பூர் :** 17.09.2015 அன்று காலை, கழகப் பொருளாளர் துரைசாமி தலைமையிலும். கழக மாவட்டசெயலாளர் முகில்ராசு முன்னிலையிலும் விழா நிகழ்வுகள் நடைபெற்றன.திருப்பூர் ரயில் நிலையம் முன்பு அமைந்துள்ள பெரியார் சிலைக்கு மலை அணிவித்த பின் கொள்கை முழக்கங்கள் எழுப்பப்பட்டன. கவிஞர் கனல்மதி திராவிடர் உறுதிமொழியை வாசிக்க தோழர்கள் அனைவரும் உறுதி எடுத்துக்கொண்டனர். பொது மக்களுக்கு இனிப்பு வழங்கி விழா சிறப்பாக கொண்டாடப்பட்டது.



DATE OF PUBLICATION 24.09.2015 TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)Dn/459/13-15 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/2015
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TN/TAM/2002/07776

# திருச்செங்கோட்டில் தொடர் பயிற்சி வகுப்புகள் நடத்த முடிவு




திருச்செங்கோட்டில் கழகத்தில் புதிதாக இணைந்த தோழர்களிடமும், இளைஞர்களிடமும் பெரியாரியலை சரியான புரிதலோடு எடுத்துச் செல்லும் நோக்குடன் தொடர் பயிற்சி வகுப்புகள் நடத்தப்படும் என கடந்த மாதம் 06.08.2015 அன்று நடைபெற்ற நாமக்கல் மாவட்ட கலந்தாய்வு கூட்டத்தில் தீர்மானிக்கப் பட்டது

இதைத் தொடர்ந்து முதல் கட்டமாக திருச்செங்கொடு பெரியார் மன்றத்தில் 13.09.2015, ஞாயிறன்று "தமிழ்நாடு-திராவிடர் இயக்க தோற்றத்திற்கு முன்பும் பின்பும்" என்ற தலைப்பில் ஒருநாள் பயிற்சி வகுப்பு மிகவும் சிறப்பாக நடைபெற்றது. மாநில பரப்புரை செயலாளர் பால்.பிரபாகரன் - திராவிடர் இயக்க தோற்றத்திற்கு முந்தைய தமிழகத்தின் நிலையையும், திராவிடர் இயக்க தோற்றத்தற்கு பின் தமிழகம் பெற்ற நலனையும் மிகவும் சிறப்பான முறையில் விளக்கி பயிற்சியளித்தார், இறுதியில் தோழர்களின் பல்வேறு சந்தேகங்களுக்கு தெளிவான விளக்கமளித்தார். நாமக்கல் மாவட்ட செயலாளர் மு.சரவணன் தலைமையில் நடைபெற்ற இந்த பயிற்சி வகுப்பினை நாமக்கல் மாவட்ட அமைப்பாளர் மா.வைரவேல், திருச்செங்கோடு நகர செயலாளர் நித்தியானந்தம், ஒன்றிய அமைப்பாளர் சதிசு, இளைஞரணி பொறுப்பாளர்கள் கார்த்தி மற்றும் பிரகாசு உள்ளிட்ட திருச்செங்கோடு நகர கழக தோழர்கள் சிறப்பான முறையில் ஏற்பாடு செய்திருந்தனர்.

"புரட்சிப் பெரியார் முழக்கம்"
ஆண்டுக்கட்டணம்
ரூ.200
தொடர்புக்கு: ஆசிரியர்,
29, பத்திரிகையாளர் குடியிருப்பு,
திருவள்ளுவர் நகர், திருவான்மியூர்,
சென்னை-41. ✆9941613535

# சென்னையில் மத்திய அரசு ஊழியர்கள் நடத்திய இடஒதுக்கீடு கருத்தரங்கம்

**2015, செப்.8ஆம் தேதி மாலை 5 மணியளவில் சென்னை 'இக்ஷா' அரங்கில் "இடஒதுக்கீடும்-பார்ப்பன சூழ்ச்சிகளும்" என்ற தலைப்பில் கருத்தரங்கம் நடைபெற்றது. எல்.அய்.சி. முற்போக்கு ஊழியர் சங்கம் ஏற்பாடு செய்த கருத்தரங்கத்தில் அய்யனார் தலைமையில் அன்பு தனசேகரன் உரையாற்றினார். கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், இடஒதுக்கீடு கேட்டு குஜராத்தில் பட்டேல்கள் நடத்தும் போராட்டத்தின் சூழ்ச்சிகளை விளக்கியும் அதைத் தொடர்ந்து பார்ப்பன ஊடகங்கள் இடஒதுக்கீட்டுக்கு எதிராக முன் வைக்கும் திசை திருப்பும் வாதங்களுக்கு பதிலளித்தும் ஒரு மணி நேரம் பேசினார். தோழர் கமலக்கண்ணன் நன்றி கூறினார். மத்திய அரசு ஊழியர்கள் பெருமளவில் திரண்டு வந்திருந்தனர்.**

(முதல் பக்கத் தொடர்ச்சி)

திட்டமிட்டப்படி அரங்கிற்குள் ஒலிபெருக்கி வசதியுடன் மதவாத எதிர்ப்பு கருத்தரங்கம் நடைபெற்றது. மாவட்ட செயலாளர் உமாபதி தொடக்க உரையாற்றி நிகழ்ச்சிகளை ஒருங்கிணைத்தார்.

கழகத் தோழர்கள் அன்பு தனசேகர், தமிழ்நாடு மாணவர் கழக அமைப்பாளர் பாரி சிவா, விழுப்புரம் ராமர், சேலம் விசு, காஞ்சிபுரம் ரவிபாரதி, வழக்கறிஞர் துரை அருண், வேலூர் சிவா, புதுவை பெரியாரியல் முன்னணி தீனா ஆகியோர் உரையைத் தொடர்ந்து கழக அமைப்புச் செயலாளர் இரத்தினசாமி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் நீண்ட உரையாற்றினர்.

அஜந்தா பிரியாணிக் கடை உரிமையாளர் கன்னியப்பன், இளம் திராவிடர் அமைப்புத் தோழர் செந்தில் ஆகியோர் தோழர்கள் அனைவருக்கும் இரவு உணவாக பிரியாணி வழங்கினார். 8 மணியளவில் தோழர்கள் விடுதலை செய்யப்பட்டனர்.

**பங்கேற்ற கழகப் பொறுப்பாளர்கள்:**

தென் சென்னை : மாவட்டத் தலைவர் வேழவேந்தன், மாவட்ட செயலாளர் இரா. உமாபதி, மாவட்ட அமைப்பாளர் சு.பிரகாசு, மாவட்ட பொருளாளர் ஜான் மண்டேலா, துணை செயலாளர் சுகுமார் மற்றும் இளைஞரணி பொறுப்பாளர்கள் நாத்திகன், செந்தில், அருண்.

வடசென்னை : மாவட்ட தலைவர் ஏசு குமார், மாவட்ட செயலாளர் தட்சணாமூர்த்தி.

காஞ்சிபுரம், கடலூர், வேலூர், விழுப்புரம் மாவட்டங்களிலிருந்தும் புதுவையிலிருந்தும் தோழர்கள் பங்கேற்றனர். பங்கேற்ற கழகப் பொறுப்பாளர்கள் விவரம்:

காஞ்சிபுரம்: மாவட்ட தலைவர் சு. செங்குட்டுவன், மாவட்ட செயலாளர் மு. தினேஷ் குமார், மாவட்ட அமைப்பாளர் செ.கு. தெள்ளமிழ்து.

கடலூர்: மாவட்ட செயலாளர் நட. பாரதிதாசன், மாவட்ட அமைப்பாளர் பா. பாலமுருகன், பாரி சிவா.

வேலூர் : மாவட்ட அமைப்பாளர் சிவா.

விழுப்புரம் : மாவட்ட தலைவர் தமிழ்குமரன், மாவட்ட செயலாளர் ச.கு. பெரியார் வெங்கட், மாவட்ட அமைப்பாளர் செ.நாவாப்பிள்ளை, மாவட்ட துணை செயலாளர் குப்புசாமி, மாவட்ட இளைஞரணி செயலாளர் வேலாயுதம், மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் மு. நாகராஜ், க. இராமர் அரசு மற்றும் கு. அன்பு தனசேகர் வழ. துரை அருண், குகன், மோகன், விழுப்புரம் அய்யனார்.

பாண்டிச்சேரி - பெரியாரியல் முன்னணி தீனா

# கழகத்தினருடன் தொல்.திருமா



சென்னை மாவட்ட திராவிடர் விடுதலைக் கழக சார்பில் பெரியார் பிறந்த நாள் எழுச்சியுடன் கொண்டாடப்பட்டது. கழகத் தலைவர் கொளத்தூர் மணி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் தோழர்களுடன் நிகழ்வுகளில் பங்கேற்றனர். இராயப்பேட்டை பெரியார் பயிலகத்தில் மாலை அணிவிக்கப் பட்டது. அனைவருக்கும் காலை உணவு வழங்கப்பட்டது. இரு சக்கர வாகனங்களில் ஊர்வலமாகச் சென்று அண்ணாசாலை - தியாகராயர் நகர் - ஆலந்தூர் - பெரியார் சிலைகளுக்கு மாலைகள் அணிவிக்கப்பட்டன. அண்ணா சாலையில் சிம்சன் அருகே உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்கச் சென்றபோது, விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் தொல். திருமாவளவனும் தோழர்களோடு கலந்து கொண்டார். பெசன்ட் நகரில் புதிய தோழர்கள் கழகத்தில் இணைந்தனர். கழகக் கொடி ஏற்றி கழகப் பெயர்ப் பலகையை கழகத் தலைவர் திறந்து வைத்தார். அங்கிருந்து வாகனப் பேரணி மந்தைவெளியில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவித்தனர். அங்கிருந்து வடசென்னை நோக்கி வாகனப் பேரணி புறப்பட்டது. புதுவண்ணையில் கழகக் கொடி ஏற்றி, பெரியார் பெருந்தொண்டர் பலராமன் நினைவு அரங்க வாயிலிலுள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. அங்கிருந்து புறப்பட்டு திருவொற்றியூரில் உள்ள பெரியார் சிலைக்கு மாலை அணிவிக்கப்பட்டது. பிரபா கணினி மய்யத்தின் உரிமையாளர் முத்துக் குமார் அனைவருக்கும் மதிய உணவளித்தார்.



திருவல்லிக்கேணிப் பகுதியில் துலுக்காணம் தோட்டம் பெரியார் படிப்பகத் தோழர்கள் பிறந்த நாள் கேக் வெட்டினர். காலை 9 மணியளவில் தொடங்கிய வாகனப் பேரணி, மாலை 5 மணியளவில் நிறைவடைந்தது. நூற்றுக்கும் மேற்பட்ட இளைஞர்கள் பேரணியில் பங்கேற்ற காட்சி எழுச்சி மயமாக இருந்தது. மாவட்டச் செயலாளர் உமாபதி, மாவட்ட அமைப்பாளர் சு. பிரகாசு ஆகியோர் முன்னின்று சிறப்பாக ஏற்பாடுகளை செய்திருந்தனர். மாவட்ட தலைவர் வேழவேந்தன், மாவட்ட பொருளாளர் ஜான்மண்டேலா, மாவட்ட துணை செயலாளர் சுகுமார், வடசென்னை மாவட்ட கழகப் பொறுப்பாளர்கள் ஏசு, தெட்சிணாமூர்த்தி, துரை, இளைஞரணி பொறுப்பாளர்கள் நாத்திகன், செந்தில், அருண், தலைமைக் கழக செயலாளர் தபசி. குமரன், அன்பு தனசேகர், வழக்கறிஞர் அருண், திருமூர்த்தி ஆகியோரும் பங்கேற்றனர்.

# "ஈ.வெ.ரா. பெரியார் வாழ்வும்–பணியும்" நூல் வெளியீடு

'பாரதி புத்தகாலயம்' வெளியிட்டுள்ள என். இராமகிருட்டிணன் எழுதிய "ஈ.வெ.ரா. பெரியார் வாழ்வும் பணியும்" நூல் வெளியீட்டு நிகழ்வு 16.9.2015 அன்று மாலை 6.30 மணியளவில் தேனாம்பேட்டை 'பாரதி புத்தகாலயா' அரங்கில் நடைபெற்றது. ஜி. செல்வா வரவேற்புரையாற்ற, 'தீக்கதிர்' பொறுப்பாசிரியர் அ. குமரேசன் தலைமை தாங்கினார். இந்திய கம்யூனிஸ்ட் கட்சி (மார்க்சிஸ்ட்) மாநில செயற்குழு உறுப்பினர் என்.குணசேகரன் நூலை வெளியிட, கழகப் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் நூலைப் பெற்றுக் கொண்டு சிறப்புரையாற்றினார். உத்திரகுமார் நன்றி கூறினார்.

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted : 25th September 2015

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN